KALKI 19.4.98 ரூ. 4.50


கல்கி



'நமக் வாங்கி வைத்திருக்கும்' முரளி!


தமிழ் திரைஇசை ரசிகர்களுக்கு ஓர் இனிய செய்தி

E. காயத்ரி வழங்கும்
RAAGA WAVES
வீணையில் திரை மெட்டுக்கள்



Vol 3

ராகா வேவ்ஸ் ஒரு புதிய வெளியீடு. உங்களால் பல முறை விரும்பி கேட்கப்பட்டு மிகவும் பிரபலமான கர்நாடக ராகங்களின் அடிப்படையில் அமைந்த பல திரைப்படப் பாடல்களை தனக்கே உரித்தான தனிப்பாணியில் வீணையில் அளித்திருக்கிறார் **காயத்ரி** அவர்கள். இந்த இசை மூன்று கேசட்டுகளில் இப்பொழுது வெளிவந்துள்ளது.



Vol 2



Vol 1

RPG

HMV

எல்லா கேசட்டு கடைகளிலும் கிடைக்கும்

அடக்கமாகப் பேசும் மத்திய அமைச்சர்

"என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது!"

'யாரும் அணுக முடியாத இடத்தில் இருக்கிறார் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் தலித் எழில்மலை!' என்று நாம் சொன்னால், இதை அமைச்சராலேயே மறுக்க முடியாது.

ஆம்! அமைச்சரின் வீடு தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்குப் பகுதியில் ஐந்தாறு கி.மீ. தூரத்தில் வளர்ந்து வரும் புறநகர்க் காலனி ஒன்றில் இருக்கிறது. வழிநெடுக இருக்கும் 'வாழ்த்தும்' போஸ்டர்களும், "தலித்தாரைப்" போற்றும் பேனர்களும் அவரது இல்லத்துக்கு யாரிடமும் விசாரிக்காமலேயே நம்மை அழைத்துப் போகின்றன.

ஐம்பத்து மூன்று வயதாகும் தலித்தார் ஒரு வித்தியாசமான மனிதர். "நாட்டிலுள்ள கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட இன மக்களில் நானும் ஒருவன்! அவ்வளவுதான்! என்பதற்கு மேல் தம்மைப் பற்றி எதுவும் சொல்லத் தயாராயில்லாத அமைச்சரின் வாயைக் கிளற ரொம்பவே சிரமப்பட வேண்டியிருக்கிறது.



"நானென்ன டால்ஸ்டாயா? அல்லது பெரிய மேதையா? அறிஞனா? போயும் போயும் எனது பிறப்பு வளர்ப்பு பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களே?" என்று கொஞ்சம் சங்கடப்படுகிறார்.

கண்ணாடி அலமாரிகளில் அம்பேத்கரின்

பேச்சுக்களும் எழுத்துக்களும். கூடவே பெரியார் புத்தகங்கள்.

சந்தித்த சில நிமிடங்களில் நமது சகோதரரரைப் போல் இயல்பாக மாறிவிடும் அளவுக்குப் பேச்சில் பாசம் இழைகிறது.

"நான் படித்த பள்ளியில் தாழ்த்தப்பட்ட வகுப்புக் குழந்தைகள் தனியாகவே அமர வைக்கப்பட்டு போதிக்கப்பட்டார்கள். சமூக ரீதியாக உயர்ந்த வகுப்பில் பிறந்த குழந்தைகள், சிலேட்டு பல்பம் என்று வசதியாகப் படித்துக் கொண்டிருந்த போது, எங்களைப் போன்றவர்கள் மணலைக் குவித்து வைத்து அதில் எழுதப் பழகிக் கொண்டோம்!" என்று தமது பழைய நினைவுகளை வார்த்தைகளாக்குகிறார்.

மதுராந்தகத்தை அடுத்துள்ள இரும்பேடுதான் அமைச்சரின் கிராமம். பெற்றோர் சிறிய வயதில் இறந்து விட உடன் பிறந்த அண்ணன்தான் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து கல்லூரிப் படிப்பு வரை வழிகாட்டியிருக்கிறார். படித்து முடித்தபின் மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையில் வேலை. ஆனால் உள்ளுக்குள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. 'உன் சமூகத்தை உயர்த்த நீ என்ன செய்யப் போகிறாய்?'

"பல்வேறு இனங்களும் மொழிகளும் கலாசாரங்களும் கொண்ட நமது நாட்டை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை. வடக்கே இருப்பவர்கள் கடலையே பார்த்திருக்க மாட்டார்கள். தெற்கே இருப்பவர்கள் பனிமலையைப் பற்றித் தெரிந்துதான் வைத்திருப்பார்கள்.

எனவே ராணுவத்தில் சேர்ந்தால் பல தரப்பட்ட பக்குவம் கிடைக்கும்; கூடவே நாட்டிற்குச் சேவை செய்தது போலவும் இருக்கும் என்று ராணுவத்தில் சேர்ந்தேன். வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு என்று எல்லைப்புறங்களில்தான் பணி. 1971-ல் பங்களா தேஷ் போரில், நான் பங்கு கொண்டிருந்த பட்டாலியன்தான் ஹெலிகாப்டரில் சென்று பங்களாதேஷில் முதலில் இறங்கியது!" என்று பெருமையாகச் சொல்கிறார்.

"ராணுவத்திலிருந்து விலகியது ஏன்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் முன் சிறிது நேரம் யோசிக்கிறார். "அங்கு நடந்த சில விஷயங்கள் பல வருடங்களுக்கு முன் இள வயதில் எனக்கு உண்டான சமூக அநீதிகளைப் பிரதிபலித்தன. அதனால் மனம் நொந்து விலகி, மீண்டும் தகவல் தொடர்புத் துறைப் பணியில் சேர்ந்தேன்!" என்ற அமைச்சருக்கு, இந்தியிலும் பாண்டித்யம் உண்டு. கவிதைகளும் எழுதுகிறார்!

சுமார் பத்து வருட காலம் தாழ்த்தப்பட்டோருக்கான பல்வேறு அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, தொடர்ந்து அவர்களுக்காகப் போராடி வந்தார் எழில்மலை. பீஹாரில் பெய்ச்சி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டித்து, சென்னையில் பெரிய கண்டனப் பேரணி நடத்தினார்.

"மத்திய அரசு பணியில் இருந்ததால் சில கட்டுப்பாடுகளுக்கிடையில் பணியாற்ற வேண்டியிருந்தது. இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் இல்லாமல் ஒரு முழு நேர சமூக ஊழியனாகவே சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் வளர்ந்து கொண்டே வந்தது. இந்தக் கால கட்டத்தில்தான், தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே, பல்வேறு இனத்தவரும் சமூக அமைப்பின் பின்னணியில் இருப்பது குறித்த கவலையும் எனக்குள் நேர்ந்தது. அப்போது இவர்களுக்காகப் போராட Federation of Communities என்ற அமைப்பு உண்டாக்கப்பட்டது. பிறகு எனது தலைவர் டாக்டர் ஐயாவை சந்தித்துப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து பா.ம.கவில் என்னை இணைத்துக் கொண்டேன்!" என்று தாம் எப்படி முழு நேர சமூகப் பணியாளராக

மாறினார் என்பதை விவரித்தார் அமைச்சர். கடவுளைப் பொறுத்த மட்டில் பெரியார் வழி. அதன் காரணமாக 'ஏழுமலை' எழில்மலையானார்!

"இந்த அமைச்சர் பதவி எனது கருத்துச் சுதந்தரத்தை முடக்கிப் போட்டுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு கூண்டுக்குள் நான் செயல்பட வேண்டியிருக்கிறது" என்று சலித்துக் கொள்கிறார். அமைச்சரானவுடன் டெல்லியில் இருந்து முதலில் வந்தவுடன் துறைமுகத்தில் இருக்கும் அம்பேத்காரின் சிலைக்கு மாலை. ஏகப்பட்ட கார்கள் பின்னால் வர ஊர்வலம். சடாரென ஜீப்பிலிருந்து அமைச்சர் குதித்து, ஜி.பி.ஓவிற்குள் ஓடினார். முன்பு, வேலை செய்த இடம். தோழர்கள் அணைத்துக் கொள்ள, கன்னங்களில் ஈரம்!

"நான் ஏன் நீலச் சட்டை போடுகிறேன் என்று பலர் கேட்கிறார்கள். அலுங்காமல் வேலை செய்பவர்களைப் பற்றி ஒயிட் காலர்'' என்று குறிப்பிடுவார்கள். அதே போல் ப்ளூ காலர் என்றும் உண்டு. உலகமெங்கும் வியர்வை வெளிப்படாமல், உழைக்காமல் உண்டு கொழுத்து வாழும் வர்க்கத்தினரின் நலனுக்காக உழைப்பவர்கள் தான் ப்ளூ காலர் பிரிவினர். அந்த நலிந்த பிரிவு மக்களில் நானும் ஒருவன் என்பதைக் காட்டவே நீலச் சட்டை. தவிர, மிக முக்கியமாக அண்ணல் அம்பேத்கரோடு தொடர்பு கொண்ட நிறம் நீலம்!"



அமைச்சரானாலும் முதலில் தமது வீட்டுக்குச் செல்லுமுன்பு இரும்பேடு கிராமத்துக்குச் சென்று தாய், தந்தை, மற்றும் அண்ணன் சமாதிகளுக்கு மரியாதை செய்துவிட்டு வந்தவர் அமைச்சர்.

அமைச்சரின் திருமணம் பெரியோர்கள் பார்த்துச் செய்து வைத்ததுதான். ஓர் உறுதி மொழியுடன் சிம்பிளாக திருமணம் முடிந்தது. மனைவி ரத்னா. மூன்று பெண்கள்; ஒரு பையன்.

"சுகாதாரத் துறையை ஒரு ஜீவனுள்ள துறையாக மாற்றி மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்ற ஒரே வரியில் தமது புதிய பணி பற்றிச் சொல்கிறார்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, அவர்களுக்குத் தலைமை தாங்கவும் அவர்கள் தளைகளை நீக்கவும், உயர்த்தவும் நிச்சயம் ஒரு தலைவர் வருவார். இலட்சியங்களில் உறுதி, அர்ப்பணிக்கும் உணர்வு தியாக மனப்பான்மை கொண்ட அந்தத் தலைவர் ஒரு நெருக்கடி உருவாகும் நேரத்தில் நிச்சயமாக வெளிப்படுவார்!" என்று சொல்லும்போது அமைச்சரின் குரலில் அத்தனை நம்பிக்கை!

சந்திப்பு : ப்ரியன்

எம்.பின்னா சும்மாவா?

எம்.பிக்களின் பதவிக் காலம் முடிந்ததும், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க வீடுகளை உடனடியாகக் காலி செய்து தர வேண்டும். ஆனால் பலர் அப்படிச் செய்வதே யில்லை. உதாரணத்துக்கு ராஜேஷ் கன்னா. ''அரசு ஒதுக்கிய வீட்டைப் புதுப்பித்து அலங்கரிக்க நான் லட்சக் கணக்கில் செலவு செய்திருக்கிறேன். தவிர, எனது சொந்த செலவில் அவுட் ஹவுஸ் ஒன்றையும் கட்டியிருக்கிறேன். இத்தனை செலவு செய்த பிறகு காலி பண்ணச் சொன்னால் எப்படி?'' என்கிறார்.

இவரைப் போல காலி செய்ய மறுக்கிறவர்கள் ஒரு பக்கமென்றால், மறு பக்கம் காலி செய்பவர்கள். உதாரணத்துக்கு முன்னாள் அமைச்சர் கிருஷ்ண குமார். இவர் அரசு வீட்டைக் காலி செய்தபோது, டைனிங் டேபிள், சோபா செட், கட்டில், கண்ணாடி என்று அரசுப் பொருள்கள் எதையும் விட்டு வைக்காமல் ஒரேயடியாகக் காலி செய்து கொண்டு போய் விட்டாராம். காலி செய்யப்பட்ட வீட்டைப் பார்வையிட வந்த அதிகாரிகள், ''பரவாயில்லையே! சுவரையும் செங்கல்லையும் விட்டு விட்டுத்தானே போயிருக்கிறார்!'' என்று கமெண்ட் அடித்தார்களாம்!

— கௌதம்

பெங்களூரில் இந்திய அணி தோற்ற சமயத்தில், அனில் கும்ப்ளேயை பேட்டி கண்டோம்...

ஸ்ரீநாத் இல்லாமல் வெற்றி பெற முடியாதா?

கல்கி : சென்னை, கல்கத்தா மாதிரி, பெங்களூரிலும் நமது அணிதான் வெற்றி பெறும் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் இப்படித் தோற்றுப் போனீர்களே, ஏன்?

அனில் கும்ப்ளே : சென்னையிலும் சரி, கல்கத்தாவிலும் சரி. ஆஸ்திரேலிய அணியின் துவக்க ஆட்டக்காரர்களை ஆரம்பத்திலேயே அவுட்டாக்கி, அவர்கள் அதிக ரன்களை எடுக்கவிடாமல் செய்தார் ஸ்ரீநாத். பெங்களூர் ஆட்டத்தில் அவர் இடம் பெறவில்லை. அதனால் பௌலிங்கின் மொத்தச் சுமையையும் நானும் ராஜுவுமே சுமக்க வேண்டியிருந்தது. ராஜு நன்றாகத்தான் பந்து வீசினார் என்றாலும் ஒரு விக்கெட்தான் விழுந்தது. 153 ரன்களை எடுத்த வாக், தமது 43வது ரன்னிலேயே போல்டு ஆகியிருக்க வேண்டும். ராஜு வீசிய பந்து, ஸ்டம்புகள் மீது பட்டதென்றாலும் bails விழவில்லை என்பதால் வாக் தப்பினார். இதுபோன்ற அதிர்ஷ்டத்தோடு, பெங்களூர் ஆட்டத்தில் காஸ்பரோ மிக நன்றாகப் பந்து வீசினார் என்பதும் அவர்களின் வெற்றிக்குக் காரணமாகி விட்டது.

கல்கி : ஸ்ரீநாத் இல்லையென்றால் இந்தியா வெற்றி பெற முடியாதா என்ன?

கும்ப்ளே : அப்படியில்லை. வேகப் பந்து வீச்சாளர்கள் முதலிலேயே இரண்டு மூன்று



விக்கெட்டுகளை வீழ்த்துகிறபோது, எங்களைப் போன்ற பந்து வீச்சாளர்களுக்கு ஆட்டம் சுலபமாகிவிடும். இந்த அடிப்படையில்தான் சொன்னேன்.

கல்கி : நீங்கள் மறுபடியும் இந்தி

யாவின் Match winner ஆக மாறியிருக்கிறீர்களே...

கும்ப்ளே : இதற்கான முழு பெருமையும் சென்னையிலுள்ள ஸ்பின் ஃபவுண்டேஷனுக்கும் வி.வி. குமாருக்கும்தான் சேர வேண்டும். இந்திய அணியிலிருந்து என்னை நீக்கிய பிறகு குமாரிடம் நிறைய 'டிப்ஸ்' பெற்றேன். பௌலிங் செய்யும்போது மெதுவாக வந்து பந்தைப் போட வேண்டும்; வேகமாக வந்து போடக் கூடாது என்பது போன்ற சில ஆலோசனைகளைச் சொன்னார். அவைதான் எனக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றன.

கல்கி : உங்கள் கூட்டணி (கும்ப்ளே, ராஜூ, சௌகான்) எப்படி அஸார் தலைமையின் கீழ் மட்டும் சிறப்பாக ஆடுகிறது? சச்சின் தலைமையில் சரிவர ஆடவில்லையே?

கும்ப்ளே : அஸாருக்கு என்ன தேவை என்பதை நாங்கள் தெளிவாக அறிவோம். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், எந்தெந்தச் சமயத்தில் எப்படியெப்படிப் பந்து வீச வேண்டுமென்று அஸார் நினைக்கிறாரோ அதை நாங்கள் புரிந்து கொண்டு அப்படியே செய்கிறோம். இதுவே எங்கள் வெற்றிக்குக் காரணம். அப்புறம்... சச்சின் தலைமையில் நாங்கள் மூவரும் இணைந்து ஆடியதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா என்ன... அப்படியிருந்தும் அந்தக் கேள்வியைக் கேட்கலாமா? குசும்பு தானே இது!

கல்கி : ஹர்பஜன் சிங் எப்படிப் பந்து வீசுகிறார்?

கும்ப்ளே : சிறப்பாக வீசுகிறார். நல்ல ஃப்ளைட் கொடுத்துப் போடுகிறார். இன்னும் இரண்டாண்டுகளில் பெரிய பௌலராக வருவார். அவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. ●

பேட்டி, படம் : நந்தினி

— அனில் கும்ப்ளே பேட்டி



''இரட்டையர்கள்''

பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் பந்தயத்தின்போது வந்திருந்த ஆஸ்திரேலிய அணியில் இடம் பெற்றிருந்த இரட்டையர் ஸ்டீவ் வாக் - மார்க் வாக் என்கிற இருவரையும் பார்த்ததும் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகைக்கு ஒரு குறும்புத்தனமான யோசனை தோன்றியது. இவர்களுடன் பெண்களில் இரட்டையர் யாரையாவது உடன் வைத்து புகைப்படம் எடுத்தால் என்ன என்ற கருத்தில் இரட்டையரைத் தேடிய போது ஜோதி நிவாஸ் காலேஜில் பி.ஏ. படிக்கும் ஹீரா மற்றும் நீனா தம்புசாமி (வயது 19) என்கிற இரட்டையர் கிடைத்தனர். புகைப்படமெடுக்கும் சமயத்தில் எதிர்பாராமல் மேலும் ஒரு இரட்டைப் பெண் குழந்தைகள் (அனாஷிதா மற்றும் ஆக்ஷிதா ஜோசப், வயது 7 மாதம்) கிடைக்கவே அனைவரையும் ஒன்றாக உட்கார வைத்துப் படமெடுத்து பெங்களூர் டைம்ஸில் வெளியிட்டிருந்தார்கள்.

ஸ்டீவ் - மார்க் இரட்டையரில் ஸ்டீவ்தான் மூத்தவர். அதாவது மார்க் பிறப்பதற்கு நான்கு நிமிடம் முன்பு பிறந்தவர்!

— அ. குமார்

நன்றி : டைம்ஸ் ஆஃப் இந்தியா, பெங்களூர்

● வாஜ்பாய், ஜனநாயகவாதியாக இருக்க விரும்பினாலும், தமிழக அரசைக் கலைக்க ஜெயின் 'பிரஷர்' அத்வானி மூலம் வரும்போது இசைவு தெரிவித்தே ஆகவேண்டிய கட்டாயம் வந்து விடும் என்பதுதான் கலைஞரின் தில்லி விஜயத்துக்குப் பிறகும் உள்ள நிலை. வாஜ்பாய் கைகொடுப்பார் என்று நம்புவதை விட, அந்தப் 'பெருமாள்' கைவிட மாட்டார் என்று தேச முதல்வரை தீவிரமாக நம்புகிறதாம் தி.மு.க. தலைமை. கல்யாண்சிங் அரசைக் கலைக்க ஐ.மு. முனைந்தபோது, மத்திய அமைச்சரவையின் தீர்மானத்தைத் திரும்பப் பரிசீலிக்கச் சொன்ன சம்பவத்தை தி.மு.க.வினர் கவனத்துக்குக் கொண்டு வருகிறார்கள். இப்படியொரு நிலை வரும்போது, இடைப்பட்ட காலத்தில் காங்கிரஸ் உட்பட எல்லா எதிர்க் கட்சியினர் (முக்கியமாக தெ.தே) மற்றும் பத்திரிகைகளின் கண்டனத்தைப் பெற்று, பா.ஜ.க. அரசை 'கலைப்பு' விஷயத்தில் முடக்கி விடலாம் என்பது தி.மு.க. வைத்திருக்கும் உத்திகளில் ஒன்று.

விதத்தில் 'கலைப்பு'க்கான காரணங்களை வரிசைப்படுத்தும் கோப்பு தயாரிப்பதில் இறங்கியிருக்கிறார்களாம்.

● "வருவது வரட்டும்" என்று தைரியமாக இருக்கிறார்கள் தி.மு.க.வினர். கட்சி, தாங்கும் முனையிலிருந்து தாக்கும் முனைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் அவர்களது விருப்பம். "ஆளும் கட்சியாக இருப்பதால்தானோ என்னவோ அசாத்திய பொறுமையோடு இருக்க வேண்டியிருக்கிறது. எங்கு எது நடந்தாலும் எங்கள் கட்சி எம்.எல்.ஏக்களைத் தாக்குவது, கட்சிக் கொடிகளை எரிப்பது என்று எதிர்க் கூட்டணியினர் இறங்கி விடுகிறார்கள். எங்கள் தொண்டர்களிடம் அதிரடி எதிர்ப்புணர்வு மங்கிக் கொண்டே வருகிறது. இதற்கெல்லாம் தக்க பதிலடி கொடுக்க எங்களிடம் தனபதிகள் உண்டு. ஆனால் தலைவர் (வாயைக்) கட்டிப் போட்டு வைத்திருக்கிறார். கூடிய விரைவில் சிலிர்த்துக் கொண்டு நாங்கள் எழுவதற்கான வாய்ப்பு வரும்" என்று நம்பிக்கை தெரிவித்தார் சென்னையைச் சேர்ந்த,

அமைச்சருக்குத் தண்ணி காட்டும் அதிகாரி!

காதில்

ஸீனியர் கட்சிப் பிரமுகர் ஒருவர். 'கலைப்பு' பற்றிப் பேசும் ஜெ. ஆதரவு மத்திய அமைச்சர்களுக்கு இனி 'தக்க' பதிலடி கொடுக்கப்படுமாம்.

● அதிகாரிகளுக்கும் ஆளும் தி.மு.க.வினருக்கும் ஏழாம் பொருத்தம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதி.மு.க. ஆட்சியில் அரசு வீடுகள், ஹவுசிங் போர்டு வீடுகள் ஒதுக்குவது, அந்தந்தத் துறை அமைச்சரின் முழு உரிமையாக இருந்தது. அப்போது அதிகாரிகள் 'குச்சுப்புடி' ஆடினார்கள். இப்போது இதற்கெல்லாம் கூட கழகப் பிரமுகர்கள் முதல்வரிடம் சொல்ல வேண்டியதாகி விட்டது. காரணம் அமைச்சரின் பேச்சுக்கு (சிபாரிசுக்கு) அதிகாரிகளிடம் அவ்வளவு மரியாதை! ஜூனியர் அமைச்சர்கள்தான் என்று பாரபட்சம் இல்லாமல் ஸீனியர் அமைச்சர்களையும் 'தண்ணி' காட்டுகிறார்கள் அதிகாரிகள். கோட்டைக்கு வெளியே ஒரு துறையைக் கட்டி

● மனவியல் ரீதியாக தி.மு.க.வினரைக் 'கலைப்பு' விவகாரத்தில் கலக்கி விட்டோம் என்று முதல்கட்ட நடவடிக்கையின் வெற்றி பற்றி, அ.தி.மு.க. – வாழப்பாடி வட்டாரம் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறது. "கலைஞரை அரசியல் லாவணிக்கு இழுப்பது மிகவும் சுலபம்... போகிறபோக்கில் எங்கள் வலைக்குள் விழுவார்" என்கிறார் வாழப்பாடியார். காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் இதற்கிடையில் 1991 கலைப்பு விவகாரத்தில் தேர்ச்சி பெற்ற முன்னாள் உளவுத் துறை மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், போயஸ் கார்டனுக்கு உதவும்

யாளும் அந்த அதிகாரி, அமைச்சரைக் கொஞ்சமும் சட்டை செய்வதில்லையாம். "பெரிய ஆசிரியர்களுக்கு மாணவர்கள்தான் பயப்பட வேண்டும் நாங்களல்ல; என்று கொக்கரிக்கிறாராம். அந்த அதிகாரியின் போக்குக் காரணமாக அமைச்சரவை மாற்றங்களின் போது பழைய இலாக்கா வான மக்கள் நல்வாழ்வுத் துறையை வாங்கிக் கொண்டு போய் விடுவார் அவர்!" என்கிறார்கள்.

● சேடப்பட்டியார் அமைச்சரானதும் சத்தியமூர்த்திக்கும் ஒரு நப்பாசை இருந்தது. இருவரும் ஒரே படகில் பயணம் செய்பவர்கள்தானே? அடுத்த மந்திரி சபை



விஸ்தரிப்பில் தம்மையும் அம்மா கவனிப்பார் என்று நம்பிக் கொண்டிருந்தார் மனிதர். "குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம், பொய் வழக்கு. இன்னமும் கோர்ட் தீர்ப்புக் கூறவில்லையே!' என்று கிளிப்பிள்ளை போலச் சொல்லி வந்த சேடப்பட்டியை அம்மா கழற்றி விட்டது, சத்தியமூர்த்திக்கும் சேர்த்து விட்ட சாட்டையடியாகப் போய் விட்டது. இனி மனிதர் மத்திய அமைச்சர் பதவி பற்றிக் கனவு காண முடியாது. ஆதலால் கணக்கற்றுக் கிடக்கும் மத்திய அரசு வாரியங்களில் ஒன்றைக் கைப்பற்றுவது என்று களத்தில் குதித்திருக்கிறார். 'நல்லவங்களுக்குக் காலம் இல்லே ஸார். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்குத்தான் கட்சியில் செல்வாக்கு!' என்று யாரையோ குறிப்பிட்டு முணுமுணுக்கிறார் தலைமைக் கழக பிரமுகர் ஒருவர். காஞ்சி பன்னீர்செல்வம், ராசிபுரம் சரோஜா ஆகியோர் ஆசைப்பட்டாலும் மாநிலங்களவை உறுப்பினர் நிறைகுளத்தான் முன்னுரிமை பெற்று விட்டார். அமைச்சர் பதவி போய் விட்டதால் இனி கட்சி அலுவலகத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தொணதொணப்பாரே சேடப்பட்டி என்று தலைமை நிலைய பிரமுகர்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

● மத்திய நிதித் துறை இணையமைச்சர் ஆர்.கே. குமார், அவரது துறையில் மூழ்கி முத்துக்குளிக்கத் துவங்கி விட்டார். மனிதர் ஆடிட்டர் என்பதால் கேள்வி மேல் கேள்வி கேட்டு அதிகாரிகளைத் திணற அடிக்கிறாராம். அமைச்சரின் overzealous போக்கைக் கண்டு அதிகாரிகள் திகைத்து நிற்கிறார்களாம். ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு மூன்று முறை அம்மாவுடன் தொடர்பு கொண்டு 'டிஸ்கஸ்' செய்கிறாராம். இந்தியன் வங்கி விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணையை முடுக்கி விட நடவடிக்கை எடுத்து விட்டாராம். இதற்கிடையில் அமைச்சருக்கு அவரது துறையில் முழு சுதந்தரம் அளிக்கப்பட்டிருந்தாலும் 'முக்கியமான விஷயங்களில் என்னிடமும் ஒரு

விழுந்தவை :

வார்த்தை கேட்டுக் கொண்டு முடிவெடுங்கள்' என்று மூத்த அமைச்சரான ஸின்ஹா அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். முதல்கட்டமாக த.மா.கா. தலைவர்களை சங்கடத்துக்குள்ளாக்கும் விதத்தில் சில தகவல்களை டில்லி பத்திரிகை ஒன்றின் மூலம் விதைக்க ஏற்பாடு நடத்து கொண்டிருக்கிறதாம்.

● 'கட்டெரிக்கும் சூரியத் தொலைக்காட்சியை முடக்கி, செயலற்றதாக்க, மத்திய நிதி அமைச்சகம் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்' என்பது அம்மாவின் ஆர்வமாம். அவரது அமைச்சரும், கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு கூர்ந்து, தொலைக்காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்ட கோப்புகளை பார்த்துக் கொண்டிருக்கிறாராம். இதற்கிடையில் அம்மா மனம் கோணாமல் நடக்கும்படி சென்னை தொலைக்காட்சி அதிகாரிகள் 'அறிவுறுத்தப்'பட்டிருக்கிறார்கள். ●

— தில்லப்பா

ஒற்றைக் கடுக்கனோடு இருந்தார் முரளி. மாநிறமானவரை மேக்-அப்பில் கறுப்பாக்கியிருந்தார்கள். இடம் : சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு அருகிலுள்ள ஒரு குடியிருப்புப் பகுதி. எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த படம் : பூந்தோட்டம்.

"இந்தப் படத்தில் எனக்கு அனாதை கேரக்டர். அனாதையான நான், ஒரு குடும்பத்தின் ஒட்டுறவு கிடைக்கிறபோது எப்படியெல்லாம் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களையும் அனுபவிக்கிறேன் என்பதுதான் கதை. இதுவரை பார்த்திராத முரளியை இந்தப் படத்தில் பார்க்கப் போகிறீர்கள்..." என்று முரளியே நம்மிடம் பேச்சை ஆரம்பித்தார்.



ஆனாலும் போட்டோ கிராபரும் நாமும் அவர் பேசியதைச் சட்டை செய்யாமல், அவரது காதுக் கடுக்கனையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

"என்ன, நீங்கள் கடுக்கனையே பார்த்ததில்லையா! இப்படிப் பார்க்கிறீர்கள்..." என்று ஆச்சரியத்தோடு முரளி கேட்க, "நீங்கள் கடுக்கன் போட்டிருப்பது இடது காதிலா, வலது காதிலா என்பதை உறுதி செய்து கொள்வதற்காகத்தான் இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!" என்றோம்.

"சந்தேகமே வேண்டாம். வலது காதில் தான் போட்டிருக்கிறேன்!"

"அப்படியானால் சரி. இடது காதில் என்றால்தான்..." என்று நமது போட்டோகிராபர் இழுக்க...

"இடது காதில் போட்டால் என்ன? என்று முரளி அப்பாவியாய்க் கேட்க...

நாமும் போட்டோகிராபரும் ஒருவரையொருவர் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொள்ள.... முரளியால் சஸ்பென்ஸைத் தாங்க முடியவில்லை.


"என்ன சார்! இடது காதில் போட்டுக் கொள்வதில் அப்படியென்ன விசேஷ அர்த்தம்? எனக்கும் சொல்லுங்க சார்!" என்றார்.

இதற்குள், "சார், ஷாட் ரெடி!" என்று படத்தின் துணை இயக்குனர் ஒருவர் வந்து சொல்ல, "ஷாட் முடிஞ்சதும் வர்றேன். சொல்லுங்க!" என்று கேமராமுன் சென்றார்.

ஷாட் முடிந்ததும் வந்த முரளி அந்த சஸ்பென்ஸை உடைக்கச் சொல்ல, "பேட்டி முடியும் வரைக்குமாவது சஸ்பென்ஸ் இருக்கட்டுமே!" என்று தொடங்கினோம்.

"ஆரம்பத்திலிருந்து, இன்று வரைக்கும் பார்த்தால், உங்களை வைத்து இயக்குகிற இயக்குனர்கள் ஒன்று புதிய இயக்குனர்களாக இருக்கிறார்கள். அல்லது ஒன்றிரண்டு படங்கள் மட்டுமே இயக்கிய இயக்குனர்களாக இருக்கிறார்கள். இதை வேறு விதமாகச் சொன்னால், இயக்குனர்களை உருவாக்குகிற கதாநாயகனாக நீங்கள் இருக்கிறீர்கள்... இல்லையா?"

"ஐயய்யோ! நீங்கள் சொல்லுவது ரொம்ப ரொம்பப் பெரிய வார்த்தை. தவறு; இப்படிச் சொல்லக் கூடாது. புதிய இயக்குனர்களுக்கு





சொந்தமாக கைக்கொடுக்கிறாரா முரளி?

நான் சுலபமாக அணுகக்கூடியவனாக இருக்கிறேன் என்பதுதான் உண்மை. எனது கால்ஷீட் வேண்டுமானால் என்னுடைய மானேஜரைப் பார்க்க வேண்டும் என்பதெல்லாம் கிடையாது. போன் செய்தால் நான்தான் போனை எடுப்பேன்.' காலையில் வந்து, என் வீட்டுக் கதவைத் தட்டினால் நான்தான் வந்து கதவைத் திறப்பேன். யார் கதை சொல்ல வந்தாலும் அவர்கள் சொல்லுவதைக் கடைசி வரை பொறுமையாகக் கேட்பேன். இவையெல்லாம்தான் புது இயக்குனர்கள் என்னைத் தேடி வருவதற்கான உண்மையான காரணங்கள். நீங்கள் குறிப்பிட்ட மாதிரி அல்லவே அல்ல!''

"படத்தின் கதைக்கும் கேரக்டர்களுக்கும் நீங்கள் அதிக முக்கியத்துவம் தருகிறீர்கள் என்று சொல்லலாமா?''

''நிச்சயமாக. கதைதான் முக்கியம். எனக்கு fantasy மேலெல்லாம் நம்பிக்கை கிடையாது. முடிந்தவரை எனது கேரக்டர்களில் யதார்த்தம் இருப்பதையே விரும்புகிறேன். எந்தப் படத்திலும் நான் முரளி



யாகத் தெரிய விரும்புவதில்லை. அந்தப் படத்தின் கேரக்டராகத் தெரியவே விரும்புகிறேன். அதனால்தான் காஸ்ட்யூம்கள் கூட என்னை முன்னிலைப் படுத்துவதாக இல்லாமல், எனது கேரக்டர்களை முன்னிலைப் படுத்துவதாக மட்டுமே இருக்கும்!"

"இத்தனை கவனமாக இருக்கிற நீங்கள், பெரும்பாலான படங்களில் மைக் பிடித்துப் பாடுவதை ஒரு ரொடீனாக வைத்துக் கொள்வது ஏன்?"

"மோகனின் இடத்துக்கு இப்போது முரளி வந்து விட்டார் என்றும் நான் சொந்தமாகவே மைக் ஒன்றை வாங்கி வைத்திருப்பதாகவும்... பல்வேறு விதமான கிண்டல்கள் உண்டு. இருந்தாலும் அந்தந்தப் படங்களில் இசை சம்பந்தப்பட்ட கேரக்டர் என்பதால் அப்படிச் செய்தேன். இவற்றோடு பாடல் காட்சி என்பது எல்லாப் படங்களிலுமே முக்கியமான விஷயம். சொல்லப் போனால் படம் வெளியாவதற்கு முன்பே பாடல்கள் வெளி வந்து, அந்தப் படத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை உருவாக்குகின்றன. படத்தை வேண்டுமானால் ஒருவர் ஒரு தடவைக்கு மேல் பார்க்காமல் இருக்க முடியும். பாடல்கள் அப்படியல்ல. அவற்றைப் பல முறை கேட்க நேரிடுகிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் ஒரு நடிகனை ரசிகர்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் இம்ப்ரஸ் செய்வது பாடல்கள்தான். இவற்றையெல்லாம் யோசித்துத்தான் நான் செய்தேன். இனி சில காலத்துக்கு நிச்சயம் அப்படிச் செய்ய மாட்டேன்!"

"முரளி என்கிற நபரைப் பார்க்கிற போது, ஒரு நடிகரைப் பார்க்கிறோம் என்கிற உணர்வே வருவதில்லை. அன்றாட வாழ்க்கையில் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு சக மனிதரைப் பார்ப்பது போல்தான் இருக்கிறது. இது ஏன்?"

"Fantasy-யில் எனக்கு நம்பிக்கையில்லை என்று முன்பே சொன்னேனே! நான் 'விக்' கூட வைத்துக் கொள்வதில்லை. இயல்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சினிமாவையும் என்னையும் நீங்கள் வேறுபடுத்திப் பார்ப்பதே எனது வெற்றிதானே!"

"இத்தனை தெளிவாகவும் ஜாக்கிரதையாகவும் பேசுகிற நீங்கள், ஒரு பத்திரிகைப் பேட்டியில், 'நான்தான் நெம்பர் ஒன்' என்று கூறியிருந்தது ஆச்சரியமாகவும் முரண்பாடாகவும் இருக்கிறதே!"

"நான் அப்படிச் சொல்லவேயில்லை. 'நீங்கள் நம்பர் ஒன்னாக இருக்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டார்கள். எல்லா நடிகர்களுமே நம்பர் ஒன்னாக இருக்கத்தான் ஆசைப்படுவார்கள். ஆனால் நம்பர் ஒன், நம்பர் டூ என்று எந்தவொரு நடிகரும் அவரவர் விருப்பப்படி இருக்க முடியாது. ரசிகர்களின் ஆதரவைப் பொறுத்து விநியோகஸ்தர்கள்தான் இப்படிப் பாகுபடுத்துகிறார்களே தவிர, எங்களை நாங்களே எந்தவொரு இடத்திலும் வைத்துக் கொண்டு விட முடியாது. வெற்றிப் படங்களைப் போலவே தோல்விப் படங்களும் எனக்கு வந்திருக்கின்றன. எனவே, இந்த நம்பர்களிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை என்றுதான் நான் சொன்னேன். அவர்கள் அப்படிப் போட்டு விட்டார்கள். போன் செய்து கேட்டபோது, 'ஒரு பரபரப்புக்காகத்தான் அப்படித் தலைப்பிட்டோம்' என்று சொன்னார்கள். அப்புறம் என்ன செய்வது? நான் அதோடு பேசாமல் விட்டு விட்டேன்!"

"உங்களுக்கும் ஒரு சமயத்தில் ஒரு நீண்ட இடைவெளி இருந்தது. அதற்கு என்ன காரணம்?"

"நானேதான் காரணம். எல்லா மனிதர்களுக்கும் எப்போதாவது சறுக்கல் இருக்கத்தானே செய்யும்! அதிலிருந்து நான் மட்டும் தப்பிவிட முடியுமா என்ன! எப்படியோ

அந்தச் சறுக்கலைக் கடந்து எழுந்து நிற்கிறேனே... இதில் நான் சந்தோஷமாக இருக்கிறேன்."

இந்த நேரத்தில் அருகிலுள்ள ஏதோவொரு வீட்டிலிருந்து அசைவ உணவு சமைக்கும் வாசனை வந்து மூக்கைத் துளைக்க, "முரளி, நீங்கள் சைவமா? அசைவமா?" என்று பேச்சு திசைமாறியது.

"ஆறு மாதத்துக்குச் சைவம். ஆறு மாதத்துக்கு அசைவம்."

"இதென்ன விக்கிரமாதித்தன் கதையாக இருக்கிறது!"

"நிஜம்தான். என் மனைவி, சந்தோஷிமா (நம்ம ஊர் அம்மன் மாதிரி, பெங்களூர் மற்றும் வட மாநிலங்களில் இத்தெய்வம் பிரபலம்.) விரதம் இருப்பாள். அந்த விரதம் முடிய கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகிவிடும். அதுவரை சைவம்தான்."

"வீட்டில் சரி. வெளியில் போகும்போது..."

"வீட்டில் மனைவி விரதம் இருக்கிறபோது, வெளியில் போகும்போது மட்டும் சாப்பிட எப்படி மனம் வரும்? நிஜமாகவே அந்த ஆறு மாதங்களுக்கும் நான் சுத்த சைவம்தான்."

"பொழுது போக்கு என்று ஏதாவது..."

"இல்லை. சினிமாவிலேயே என் நேரம் போய்விடுகிறது. வீட்டுக்குப் போகும்போது என் குழந்தைகளுடன் விளையாடுவதோடு சரி. அது சரி... ஒற்றைக் கடுக்கனை இடது காதில் போடுவது பற்றிய சஸ்பென்ஸை நீங்கள் இன்னும் உடைக்கவேயில்லையே! என்ன சார் அது?"

"சொல்கிறோம் முரளி. அவசரப்படாதீர்கள். உங்களைப் பற்றிய சர்ச்சைகளோ கிசுகிசுக்களோ ஏதும் பத்திரிகைகளில் வருவதில்லையே, அது எப்படி?"

"நீங்கள் கேட்பதைப் பார்த்தால் என்னைப் பற்றிய சர்ச்சைகளையும், கிசுகிசுக்களையும் நான் வரவிடாமல் பார்த்துக் கொள்கிறவனாகச் சித்திரிப்பது போலல்லவா இருக்கிறது! (சிரிப்பு). உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நான் ஒன்றும் மகாத்மா அல்ல. உடனே வேறு மாதிரி கற்பனை செய்து எழுதி விடாதீர்கள்... அப்புறம் வீட்டில் விபரீதமாகிவிடும்! (சிரிப்பு). உங்களைப் போல், இவரைப் போல், அவரைப் போல்... நானும் ஒரு மனிதன்தான். சாதாரண கோபதாபங்கள், பலவீனங்கள் எனக்கும் இருக்கத்தானே செய்யும்! இந்த அர்த்தத்தில்தான் நான் ஒன்றும் மகாத்மா அல்ல என்றேனே தவிர, வேறு அர்த்தத்தில் அல்ல!"

"மிக்க நன்றி முரளி. நாங்கள் விடை பெறுகிறோம்."

"ஐயய்யோ! அந்த இடது காது சஸ்பென்ஸ் என்ன ஆயிற்று. சொல்லாமல் போகிறீர்களே..."

ஒற்றைக் கடுக்கனை இடது காதில் போட்



டால் அதற்கு வெளிநாடுகளில் ஒரு தனி அர்த்தம் இருப்பதை நாம் முரளியின் காதோடு சொல்ல..... "ஓ! அதற்கு இப்படியோர் அர்த்தம் இருக்கிறதா... நல்ல வேளை! எனக்கு வலது காதில்தானே போட்டிருக்கிறார்கள்!" என்று சரிபார்க்கும் விதமாகத் தமது வலது காதைத் தடவிப் பார்த்துக் கொண்டார் முரளி!

— பிரின்ஸ்

அட்டை வண்ணப்படமும்,
படங்களும் : **பிரவீன்குமார்**

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சர்வாந்தர்யாமித்வம்! - எல்லாவற்றுக்கும் உள்ளேயிருந்து செயல்படுத்தக் கூடியவனாய் இருக்கிறான் பரமாத்மா. இதைத்தான் உபநிஷத் சொல்கிறது:

''நீ இவனை உணர வேண்டும்'' என்கிறது.

''யாரை உணர வேண்டும்...?''

"போக்தா யார்? போக்யம் எது? பிரேரகன் யார்...? என்பதைத் தெரிந்து கொள்...'' என்கிறது உபநிஷத்.

போக்தா என்றால் அனுபவிப்பவன்.

போக்யம் என்றால் அனுபவிக்கும்படியான பதார்த்தம்- பொருள்.

அதை அனுபவிக்கும்படியாகப் பண்ணுகிறவர் ஒருத்தர்- பிரேரகன்.

மாம்பழம் இருக்கிறது... மாம்பழத்தை உடையவன் ஒருவன் இருக்கிறான்... அதை அனுபவிக்கும்படியானவன் அவன். பழம் அவன் தோட்டத்துக்குள்ளேயே விளைந்தது. இந்தப் பழத்தை இவன் அனுபவிக்க வேண்டும் என்று பகவான் சங்கல்பித்தால்தான் இவனால் சாப்பிட முடியும்.

யாரோ ஒருத்தர் திடீரென்று வருகிறார். இவர் எதிரே மாம்பழம் இருக்கிறது. சாப்பிட வேண்டும் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்... ஆனால் திடீரென்று இன்னொருத்தர் வந்தவுடனே, பழத்தை அவருக்குக் கொடுத்துவிட்டார்!

இவர் தமக்கென்று எண்ணிக் கொண்டிருந்ததை இன்னொருத்தர்தான் அனுபவிக்கும்படியாயிருக்கிறது! அதனால் அந்த போக்யம் அவருக்கு இல்லாமல் போய்விடுகிறது.


ஆகையினாலே, பிரேரகன்-நியமிப்பவன்-ஒருவன் இருக்கிறான் என்பதை ஒவ்வொன்றிலும் நாம் பார்க்கலாம்.

இப்படி, போக்தா யார்? போக்யம் எது? பிரேரகன் யார்..? என்று நாம் விசாரிக்க ஆரம்பித்தோமானால், இந்த இடத்திலே, எல்லாம் **அவனே** என்பது தேறி நிற்கும். போக்யமும் அவனே, போக்தாவும் அவனே பிரேரகனும் அவனே!

எல்லாம் அவனுடையது என்று ஆன பிற்பாடு, இது மொத்தம் - போக்யம் மொத்தமும் அவனுடையதே என்று ஆன பிறகு, நாம் அவனுக்கே அனைத்தையும் அர்ப்பணிக்க வேண்டும். நம்மையே அர்ப்பணிக்க வேண்டும்.

சரீரத்தைச் சமர்ப்பிப்பது இருக்கட்டும்... சரீரத்துக்குள்ளே இருக்கிற ஆத்மா-அதுவும் அவனுடையது என்று சமர்ப்பிக்க வேண்டும். ஆத்ம சமர்ப்பணம் என்று பெயர் அதற்கு.

ஆத்மாபஹாரம் என்பதை மட்டும் பரமாத்மா ஒப்புக் கொள்ள மாட்டான். மீதி எதைத் திருடினாலும்-அபகரித்தாலும் பரவாயில்லை.. ஆனால் 'யான் எனக்கே உரியன்; இந்த ஆத்மா சுதந்தரன்' என்று சொல்கிறான் பாருங்கள்; அவனை விடவே மாட்டான் பரமாத்மா! இது **அவனுடையது** என்று ஒவ்வொருத்தரும் ஆத்மாவை சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.



இந்த அர்ப்பணம்தான் ரொம்ப முக்கியம். பரபிரும்மத்துக்கு எதிரே இந்த ஆத்மாவை அன்னமாகப் படைக்க வேண்டும். அதை அவன் அனுபவித்து ஏற்கிறான்.

பகவானுக்கு நிவேதனம் என்று ஒரு காரியம் நடக்கிறது. எதிரிலே பல பிரசாதங்களை வைத்து அதை விசேஷமாக நிவேதனம் பண்ணுகிறோம். அதை அவன் சுவீகரித்து அனுக்கிரஹம் பண்ணுகிறான். நிவேதனம் என்பது எதற்காக..? இத்தனை பிரசாதங்களை நிவேதனம் பண்ண வேண்டுமா?

நரசிம்ஹனுக்குப் பெரிய வாய்!

அவனுக்கு நிறைய நிவேதனம் பண்ண வேண்டும் என்பது சாஸ்திரம். கொஞ்சமாகப் பண்ணக்கூடாது! எத்தனை பேர் வருவார்கள் என்று பார்த்து பிரசாதம் தயாரிக்கக் கூடாது. அவனுக்கு எவ்வளவு பண்ணினால் திருப்தியாக இருக்குமோ அந்த அளவு கண்டருளப் பண்ண வேண்டும்– நிவேதனம் பண்ண வேண்டும். அதை எல்லோருக்கும் நிறைய கொடுக்க வேண்டும்.

அப்பேர்ப்பட்ட ஏற்றமுடைய எம்பெருமானுக்கு நிவேதனம் என்கிற காரியம் எதற்கு...?

54



நமக்கொரு அப்யாஸம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்! அப்யாஸம்- பழக்கம்- இருந்தால்தான் எந்தக் காரியத்திலும் உயர்ந்து நிற்கலாம்.

பிரசாதத்தை நிவேதனம் பண்ணுவது, பழத்தை நிவேதனம் பண்ணுவது... இப்படி நிவேதனம் என்கிற காரியம் தெரிந்தால்தான் ஆத்ம நிவேதனம் என்கிற காரியத்துக்கு நாம் தயாராக முடியும். பூரணமாக அந்த ஸ்திதியை அடைய, நிவேதனம் ஒரு முதல் படி.

ஒருத்தர் நிவேதனம் என்கிற காரியமே தெரியாமல் இருக்கிறார். அவரைப் புரோஹிதர் கூப்பிட்டுச் சொல்லித் தருகிறார்: ''முதலில் பிராணாயாமம் பண்ணுங்கள்...'' என்று சொல்கிறார்.

இவர் கேட்டுக் கொண்டு பேசாமலிருக்கிறார். திரும்பவும் சொல்கிறார்: ''பிராணாயமம் பண்ணுங்கள்...'' கேட்பவர் வெறுமே முழிக்கிறார். பிராணாயாமம் என்றால் தெரியவில்லை; வெறுமே வாயை மூடிக் கொண்டிருக்கிறார். புரோஹிதர் மறுபடியும் சொல்கிறார்... இவர் மறுபடியும் பேசாமலே இருக்கிறார்!

''என்ன? நான் பிராணாயாமம் பண்ணுங்கள் என்றால் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்களே...?''

ஊஹூம்..! அசையவில்லை அவர்!

''பிராணாயாமம் என்றால் தெரியாதா? மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டும்...''

உடனே, புரோஹிதரின் மூக்கைப் பிடித்துக் கொண்டார் இவர்!

அந்த மாதிரி, பிராணாயாமம் என்றாலே என்னவென்று தெரியாத ஒருத்தர்!

அதே போல் நிவேதனம் என்றால் என்னவென்றே தெரியாமலிருந்தால் ஆத்ம நிவேதனம் எங்கேயிருந்து பண்ணுவது..?

ஆத்ம நிவேதனம் என்பது பெரிய காரியம்! அதற்காக, அதை மறக்காமலிருப்பதற்காக, இந்த சாமான்ய பதார்த்தங்களையெல்லாம் பகவானிடத்திலே அர்ப்பணம் பண்ணி, நிவேதனம் பண்ணுகிறோம்.

அவனும் நாம் ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டி விசேஷமாகப் பாடுபடுகிறான்- இந்த ஆத்மாவுக்கு அந்தர்யாமியாயிருந்து, சகாலத்திலே அதற்கு நல்ல புத்தியைக் கொடுத்து, உத்தம ஆசார்ய சமாகமத்தை ஏற்படுத்தி, ஆத்ம சமர்ப்பணம் பண்ணும்படியாக உயர்த்துகிறான். அவன் இல்லையென்றால் அவன் நமக்கு இதையெல்லாம் பண்ணவில்லையென்றால், நமக்கு அந்த ஸ்திதி கிடைக்குமா?

''உன் அம்மாவும் மனைவியும் போடற சண்டையிலே சாமர்த்தியமா தீர்ப்பு வழங்குவியாமே, எப்படி?''

''ஒருத்தரை வெற்றி பெற்றவர்னு அறிவிச்சா இன்னொருத்தரை 'வுமன் ஆஃப் தி மேட்ச்'னு பாராட்டிடுவேன்!''

- பா. ஜெயக்குமார்



அருள்வாக்கு

''தனக்கு மிஞ்சித் தர்மம்'' என்பதற்கு நான் புது வியாக்யானம் செய்கிறேன்: தனக்கு எது உயிர் வாழ்வதற்கு அத்யாவச்யமோ, எதெல்லாம் இல்லாவிட்டால் உயிர்வாழ முடியாதோ, அந்த bare necessities-க்கு அதிகமாக எவரும் வைத்துக் கொள்ளாவிட்டால் தான் ''தனக்கு மிஞ்சி''க் கையில் தர்மத்துக்குப் பணமே இருக்கும். முடிவில்லாமல் தனக்கென்று ஆடம்பர போக்யங்களை ('லக்ஷரி'களை)ப் பெருக்கிக் கொண்டே போய் விட்டு, ''தனக்கு மிஞ்சித் தர்மம் பண்ண எதுவுமே இல்லை'' என்று கைவிரித்தால் அது நியாயமில்லை. ஆனதால், தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடியுமோ, அப்படி எளிமையாக வாழ்ந்து, மிச்சம் பிடித்து, அதைத் தர்மத்துக்குச் செலவழிப்பதுதான் ''தனக்கு மிஞ்சித் தர்மம்''. ''தர்மம் பண்ணியே ஆகவேண்டுமே! வேதத்தில் 'தர்மம் சர' என்றும், படிப்பு ஆரம்பத்திலேயே அவ்வை

'அறம் செய விரும்பு' என்றும் சொல்லியிருப்பதைச் செய்தேயாக வேண்டுமே! ஆனதால், நமக்கு வரும்படி எவ்வளவு குறைச்சலாயிருந்தாலும் அதற்குள் தர்மம் பண்ணும்படியாகவும் செலவைக் கட்டுப்படுத்திக் கொண்டு 'தனக்கு மிஞ்சும்'படிப் பண்ண வேண்டும் என்றே இந்த வசனத்தை அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் எவனுமே தர்மத்துக்காகச் சேமித்துத்தான் ஆகவேண்டும் என்றாகும். அதாவது, எவனுமே கடன் படமாட்டான்! இது ஒரு பெரிய ஸ்வய உபகாரம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

ஸ்வாமி தேசிகன் ரொம்ப அழகாக இதைச் சொல்கிறார்: ஒரு ராஜா. அந்த ராஜாவுக்கு ரொம்ப நாள் கழித்து ஒரு குழந்தை பிறந்தது. எங்கே போனாலும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய்விடுவான்... அப்படியொருநாள், வேட்டைக்குப் போகும்போது குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனான். தூக்கம் வந்துவிட்டது குழந்தைக்கு. ரதத்திலேயே அது தூங்கிப் போய் விட்டது... இவனும் நடுக்காட்டிலே ரதத்தை நிறுத்திவிட்டு வேட்டைக்குப் போய்விட்டான்! இது ரதத்திலேயே தூங்கிக் கொண்டிருக்கிறது!

தூங்கிக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று எழுந்து காட்டிலே நடந்து போயிற்று. காட்டிலே இருக்கும்படியான சபரவாசிகள்– காட்டுவாசிகள் அந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டுபோய் தங்கள் குடிசையிலே அதை வைத்துக் கொண்டு விட்டார்கள். அதற்குப் புறா இறகு, காக்கை இறகெல்லாம் தலையிலே சூட்டி அலங்காரம் பண்ணி, தங்கள் நடையுடைபாவனைகளையெல்லாம் அதற்குக் கற்பித்து. அந்தக் குழந்தையை ராஜாவிடமிருந்து மறைத்தே வைத்து விட்டார்கள்! அது வேட்டுவச்சேரியிலேயே வளர்கிறது.

வேட்டைக்குப் போன ராஜா வந்து பார்த்தான். குழந்தையைக் காணோம்! தேடித் தேடிப் பார்த்தான்; கிடைக்கவில்லை... பல இடங்களிலே தேடச் சொன்னான்.. வேடர்கள் குழந்தையை மறைத்து வைத்து, 'இல்லை' என்றே சொல்லிவிட்டார்கள்!

ராஜாவுக்கு ஜுரம் வந்துவிட்டது. அரண்மனையிலே போய்ப் படுத்துக் கொண்டு விட்டான்... கண்ணை திறக்கவில்லை அவன்! மந்திரிதான் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அப்போது, அந்த இடத்துக்கு சப்த ரிஷிகள் வந்தார்கள்... குழந்தை காட்டுக்குப் போய், தொலைந்து போன கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவர்கள் வந்தார்கள். அந்தக் குழந்தை, யுவாவாக– இளைஞனாக வளர்ந்த பிற்பாடு, அங்கு சென்று அந்த சபர ஜாதியினரைக் கூப்பிட்டு, இவன் அரசகுமாரன்.. இவனை நீங்கள் இங்கே வைத்துக் கொண்டிருப்பது நியாயமா? ராஜ்யத்தை ஆள வேண்டியவனை மறைத்து வைக்கலாமா? கொண்டு போய் இவனை ராஜாங்கத்தில் விட்டுவிடுங்கள்... என்று அவர்களுக்குச் சொன்னார்கள்.

அங்கேயிருந்து ராஜாங்கத்துக்கு வந்து, ராஜாவினிடத்திலே–படுத்த படுக்கையாயிருந்த ராஜாவினிடத்திலே– 'உன் குழந்தை எங்கேயும் போகவில்லை... வேறு வேஷத்திலே, வேறு விதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது... அங்கே போனால் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்து விடலாம்...' என்று சொன்னார்கள்.

இவனும் சென்று குழந்தையை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். இயற்கையிலேயே அவன் ராஜகுமாரனானதினாலே, பிறவியிலேயே அதற்கான குணங்களை அவன் அடைந்ததனாலே, சுபாவமாகவே ராஜ மரியாதையெல்லாம் அவனுக்கு வந்துவிட்டது.

ராஜா என்ன பண்ணினான், சந்தோஷப்பட்டு குழந்தைக்கு யுவராஜ பட்டாபிஷேகம் பண்ணி வைத்து விட்டான்.



யுவராஜ பட்டாபிஷேகம் என்றால் என்ன..? போகத்தை அனுபவிப்பதற்குத்தான்! ராஜாவாக இருக்கிறவனுக்குத்தான் ராஜ்ய பொறுப்புகளெல்லாம். யுவராஜாவுக்குப் பொறுப்பொன்றும் கிடையாது.

ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான் அவன்!

இதைத்தான் காண்பிக்கிறார் சுவாமி தேசிகன். காட்டிலே பறிகொடுத்தவன் யாரு...? ராஜா! அந்த ராஜாதான் பரமாத்மா...

எதைப் பறிகொடுத்தான்...?

நம்மைப் பறிகொடுத்தான்! இந்தப் பிரகிருதி மண்டலத்திலே அந்த ஜீவனைப் பறிகொடுத்தான். அது தனக்கே இருக்க வேண்டிய இயற்கை குணத்தை விட்டுவிட்டு வீணான வேஷங்களையெல்லாம் போட்டுக் கொண்டு திரிகிறது உலகத்திலே!

ஆகையினாலே, இப்படி– இல்லாத சம்பந்தத்தை ஏறிட்டுக் கொண்டு, இல்லாத பந்துத்வத்தைப் பாராட்டிக் கொண்டு... இதெல்லாம் கர்மாதீனமாக ஏற்படுகிறது என்கிற ஞானமே இல்லாமல், இதுவே சாச்வதம் என்று நினைத்துக் கொண்டு...!

திருமங்கையாழ்வார் உடம்பு நடுங்கச் சொல்கிறார்:

ஊனிடைச் சுவரில் வைத்து என்புதூண்
உண்டாக்கி...

நைமிசாரணத்யத்தைப் பார்க்கும்போதே அவருக்கு உடம்பு நடுங்குகிறது! அவ்வளவு நடுக்கத்திலே அவர் வேதனைப்பட்டுச் சொல்கிறார்:

அல்பமான மாமிஸ ரத்தத்தினால் பிசைந்தடைந்த சுவர்; இது நிற்க எலும்புகளால் தூண்; மேலே கூரையாக ரோமம், இதிலே ஒன்பது வாயிற்படிகள்! இந்த மாதிரி ஒரு வீட்டைக் கட்டிக் கொடுப்பவனும் அவன்தான். அதிலே க்ஷேத்ரக்ஞன் என்று இந்த ஆத்மாவைக் கொண்டு வந்து குடிபுக வைப்பவனும் அவன்தான்.

கிரஹப்பிரவேசமும் ஆகிவிட்டது! உள்ளே போய் உட்கார்ந்ததும் வீடுதான் சாச்வதம்; அதுதான் நம்மைக் காப்பாற்றும் என்று நினைத்துக் கொண்டு பல அக்கிரமங்களை அவன் பண்ணுகிறான். முதலில்–கட்டிக் கொடுத்தவனை மறந்து விடுகிறான்! வீடே சாச்வதம் என்று அவன் நினைத்தபடி இருக்கிற நேரத்தில் ஒவ்வொன்றாகக் கனவு போகிறது!

(தொடரும்)


இமயமலை அடிவாரத்தில் இடப்பட்ட விதை!

திடீரென்று அந்த பக்தருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு விட்டது. சுற்று வட்டாரத்தில் சரியான மருத்துவ வசதிகள் இல்லாததால் அந்த பக்தருக்குச் சிகிச்சையளிக்க நூறு கி.மீ.க்குமேல் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

இங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி என்பது ஒரு கனவு போல. பார்த்தார் ஜெயேந்திர சுவாமிகள். உடனடியாக அந்தப் பகுதியில் மருத்துவ மனையொன்றைக் கட்ட வேண்டியதன் அவசியத்தைச் சீடர்களிடம் உணர்த்தினார். 1983-ல் போடப்பட்ட அந்தச் சேவை விதை, இப்போது இருபது படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக முளைத்து நிற்கிறது. நிர்வகிப்பது ஸ்ரீ சங்கரா சாரிடபிள் டிரஸ்ட்!

எங்கேயென்று விழிக்கிறீர்களா? இமயமலை அடிவாரத்தில்-பத்ரிநாத் செல்லும் வழியிலுள்ள உத்ர காஞ்சி ரதோடா என்கிற கிராமத்தில்தான் கம்பீரமாக எழுந்து நிற்கிறது இந்த மருத்துவமனை!

தகவல்: பிரபு சங்கர்





1998 ஏப்ரல் 19
வெகுதான்ய சித்திரை 6
மலர் : 56
இதழ் : 38

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்




356 லாவணி!

'**மி**னிஸ்டர் ஃபார் பவர்' என்றால், இல்லாத அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொள்ளும் அமைச்சர்' என புது விளக்கம் தரலாம் போலிருக்கிறது! அந்த அளவுக்குத் தான்தோன்றித்தனமாகப் பேசியிருக்கிறார் மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம்! மதுரையில் பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப்பட்டு, சூழ்நிலையே மிகவும் இறுக்கமாயிருக்கிற தருணத்தில், குமாரமங்கலம் தம் பங்குக்கு உணர்வுகளைத் தூண்டி விடும் விதமாகப் பேசியிருக்கிறார்! 'தமிழக அரசு மட்டும் ஒரு வாரத்துக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் மத்திய அரசு இவ்விஷயத்தில் தலையிட வேண்டியிருக்கும்' என்று 'கெடு' வைத்து மிரட்டியிருக்கிறார்!

பி.ஜே.பியைச் சேர்ந்த இந்த அமைச்சரையே பிரதமரால் கட்டுப்படுத்த முடியவில்லையென்னும்போது, தம்பிதுரையும் வாழப்பாடியும் சேடப்பட்டியும் தலைக்குத் தலை நாட்டாண்மை செய்து வருவதை அவரால் எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்?!

'ஜெ. பேரிலான வழக்குகள் மறுபரிசீலனைக்குள்ளாகும்' என்று கூறியுள்ளார் சட்டத் துறை அமைச்சர் தம்பிதுரை. 'கருணாநிதி ஆட்சி 356ஐப் பிரயோகித்துக் கலைக்கப்படும். இல்லாவிட்டால் வேறு ஏதேனும் முகாந்திரத்தில் அது கலைக்கப்படும்' என்று மிக மிக அலட்சியமாக வாழப்பாடி பேசியிருக்கிறார். 'தமிழகத்தில் சட்டம் தன் கடமையை ஆற்றினால் டெல்லியில் அரசியல் தன் கடமையை ஆற்றும்' என்றும் கூச்சநாச்சமின்றி வாக்குமூலம் தந்திருக்கிறார்!



பிரதமர், மிக மிதமாக, '356 பிரயோகிக்கப்படுவதற்கான முகாந்திரம் இப்போது இல்லை' என்று கூறி தம் பொறுப்பை விட்டுக் கழன்று கொள்ளப் பார்க்கிறார்.

அந்த வார்த்தைகளைக் கொண்டே தமது 'விளையாட்டை' வளர்க்கிறார் குமாரமங்கலம் : "356ஐப் 'பிரயோகிக்கவே மாட்டோம்' என்று பிரதமர் சொல்லவில்லையே... அவசியம் நேரும்போது அது உபயோகிக்கப்படும் என்பதே அர்த்தம்" என்கிறார்.

தமது அமைச்சரவை உறுப்பினர்களையே பிரதமரால் கட்டுப்படுத்த இயலவில்லை என்னும் போது, ஜெயலலிதாவை எவ்வாறு நெறிப்படுத்த முடியும்? 'புரட்சித் தலைவி'யும் 'நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன...' என்றும் 'கருணாநிதி நடுங்கிக் கொண்டிருக்கிறார்' என்றும் நாளொரு டயலாகும் பொழுதொரு வசனமும் பேசி வருகிறார்.


சேடப்பட்டிக்குப் பதிலாகவும் தங்கள் கூட்டணியைச் சேர்ந்த மற்றும் இரண்டு எம்.பிக்களுக்கும் அமைச்சர் பதவி தரப்படும் என்று தாமே அறிவித்து பா.ஜ.க. தலைமைக்குச் சங்கடம் ஏற்படுத்துகிறார்!

பிரதமரால் இவர்களுடைய வாயை அடைக்க முடியாமலிருப்பதற்குக் காரணம், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காப்பாற்றிக் கொள்ள இவர்களின் தயவு தேவை என்பது மட்டும் அன்று...

சமீப காலமாக பி.ஜே.பி. தனது கொள்கைகளில் செய்து கொண்டிருக்கும் கண்மூடித்தனமான சமரசங்களும் பிரதமரின் தார்மிக பலத்தைப் பறித்து விட்டன.

'ஆட்சியை அடையாவிட்டாலும் பாதகமில்லை; கொள்கைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது' என்பதில் தீவிரமாக இருந்த கட்சி பா.ஜ.க. இப்போது, கொள்கையைக் கைவிட்டாலும் பரவாயில்லை, ஆட்சியைப் பிடித்தே தீரவேண்டும் என்ற தலைகீழான நிலைக்கு மாறியிருக்கிறது! கடந்த தேர்தலின் போது அந்த ஒரே நோக்குடன் மாநில அளவிலான கூட்டணிகள் அமைக்கப்பட்டன.

முன்பு உத்தர பிரதேசத்தில் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள பி.ஜே.பி. செய்த குதிரை வியாபாரமும், அனைவருக்கும் வாய்க்கரிசி போடுவதற்காக அமைத்த ஜம்போ அமைச்சரவையும் சிரிப்பாய்ச் சிரித்தன.



சமீபத்தில் ஹிமாசல பிரதேசத்தில் ஆட்சியைக் கைப்பற்ற, டெலிபோன் ஊழல் புகழ் சுக்ராமுடைய ஹிமாசல் விகாஸ் காங்கிரஸின் ஆதரவை 'வாங்கி'க் கொண்டது பி.ஜே.பி! இத்தனைக்கும், ஒரு காலத்தில் சுக்ராமின் ஊழல்களை எதிர்த்து ஓங்கிக் குரல்கொடுத்தது பி.ஜே.பிதான்!

பி.ஜே.பியின் இந்தத் தவறுகளையும், அதனால் கட்சி சோகையுற்று இருப்பதையும் உணர்ந்துதான் தம்பிதுரை, சேடப்பட்டி, வாழப்பாடி, குமாரமங்கலம், 'ஜெ' போன்றோர் ஆளாளுக்கு அதிரடி அறிக்கை விடுகிறார்கள்.

மத்திய அமைச்சர்களாக இருக்கப்பட்டவர்கள் அமைச்சரவையின் கூட்டாலோசனைக் குப் பிறகு வகுக்கப்படும் கொள்கைரீதியான முடிவுகள் குறித்து மட்டுமே அறிக்கைகள் தரலாம். ஆனால், அந்த விதிமுறைகள் இன்று பறக்க விடப்பட்டு விட்டன. தங்களுக்குச் சம்பந்தம் இல்லாத விஷயங்கள் பற்றி அமைச்சர்கள் கருத்துச் சொல்லிக் கொண்டு அலை வதும்; தங்கள் அதிகார எல்லைக்கு உட்படாத விஷயங்களைப் பிரகடனப்படுத் துவதும் வாடிக்கையாய் இருக்கிறது. பி.ஜே.பியின் பலவீனம் மற்ற கட்சிக்காரர்களின் பலமாக மாறியிருக்கிறது.

ஊழல் வழக்கிலே சிக்கி, பதவியைத் துறக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிய சேடப்பட்டியை ஆதரித்துப் பேசவேண்டிய பரிதாப நிலை இன்று ஜனா கிருஷ்ண மூர்த்திக்கு ஏற்பட்டிருக்கிறது! அந்த சுகத்தில் குளிர்காயும் அ.தி.மு.க. கூட்டணியாளர்கள் 356 பல்லவியைப் பாடுவதில் ஆச்சர்யம் இல்லை.

ஆனால், இந்த லாவணியைத் தாங்க முடியாமல் பி.ஜே.பி. தலைமை தளர்ந்து போய் 356 ஐ துஷ்பிரயோகிக்கத் துணியவும் கூடும் என்பதுதான் பயமுறுத்துகிற உண்மை..

பதவியை அடைவதற்காக தர்மத்தைக் கைவிட்டு, கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்த கட்சிதான் பி.ஜே.பி! அப் பதவியில் நீடிப்பதற்காக, அது அதர்மத்தை மீண்டும் தயங்காமல் தழுவினாலும் வியப்பில்லை. அப்படியின்றி நேர்மையாக நடந்து கொண்டால் தான் ஆச்சர்யம்!

அரசாங்கச் சொத்துதானே, ஆக்கிரமிச்சு எடுத்துக்குங்க!



• நடு ஏரிக்குள் முளைக்கும் வீடு....

உள்ளூர்ப் புறம்போக்குகளுக்கு எப்போதுமே அரசியல்வாதிகளால் ஆபத்துதான் என்றாலும் உள்ளாட்சித் தேர்தல்களுக்குப் பிறகு இந்த ஆபத்து அதிகமாகியிருக்கிறது என்பது சத்தியம். உதாரணம் வேண்டுவோர், சென்னையை ஒட்டியுள்ள பீர்க்கங்கரணை பேரூராட்சிக்குச் செல்லலாம். அங்குள்ள இரண்டு ஏரிகளையும் பார்வையிடலாம்.


கட்சி பேதமில்லாமல் எல்லா அரசியல்வாதிகளும் இந்த ஊர் ஏரிகளைப் பிளாட் போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். "குறிப்பா ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்தான் கொழிக்கறாங்க!" என்கிறார்கள் பொது மக்கள்.

முதலில் தொண்டர்களை அனுப்பிக் குடிசைகள் போட்டுக் கொள்ளச் சொல்வார்களாம். பிறகு குடிசையைச் சுற்றி வேலியமைப்பது...

அப்படிப்பட்ட ஆக்ரமிப்பாளர்களிடம் தண்டத்தீர்வை வசூலிப்பதற்காகப் பேரூராட்சி 'பி' மெமோ அனுப்பும். அந்த இடம் அவர்களுக்கே சொந்தமானதென்பதற்கு அதையே ஓர் ஆதாரமாகக் காட்டி மின்சார இணைப்பு வாங்கி நல்ல விலைக்கு விற்றும் விடுகிறார்கள்.

"இதையெல்லாம் தட்டிக் கேட்டால் அடி உதைதான் விழுகிறது! நாங்கள் என்னதான் செய்ய முடியும்? இன்னும் சில புள்ளிகள், 'இது கோயிலுக்கு, இது மாதா கோயிலுக்கு' என்று சொல்லி ஆக்ரமித்து மக்களை சென்டிமெண்டாக டச் செய்தும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்!" என்று ரொம்பவும் வேதனையோடு குறிப்பிட்டார்கள் சில உள்ளூர் இளைஞர்கள்.

நாம் அந்த ஏரிகளைப் (பீர்க்கங் கரணை ஏரி, பெருங்களத்தூர்



• ஏரிக்குள் குடிசை போட்டு, குடிசைக்கு வேலியும் போட்டு....

ஏரி) பார்த்தபோது, ஏரிக்கு நடுவிலும் அஸ்திவாரம் போடப்பட்டுக் கட்டப்பட்ட நிலையிலிருந்த ஒரு வீட்டைப் பார்த்தோம். தண்ணீர் வற்றியதும் மிச்ச வேலையை ஆரம்பித்து விடுவார்களாம்.

"இப்படியெல்லாம் ஏரிக்கு நடுவில் வீடு கட்டினால் மழைக் காலத்தில் ஏரியில் தண்ணீர் தேங்கும் போது, குடியிருக்கும் வீடுகளும் மூழ்கிப் போகுமே!" என்று நாம் கேட்டபோது,

"அதனால்தான் ஏரிகளுக்குத் தண்ணீர் வரும் வாய்க்கால்களையும் ஆக்ரமித்து வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்புறம் எப்படி ஏரிக்குத் தண்ணீர் வரும்?" என்றார்கள்.

'ஆத்துத் தண்ணிதானே ஐயாகுடி; அம்மா குடி' என்று கிராமங்களில் பழமொழி சொல்லுவார்கள். 'அரசாங்கச் சொத்து தானே; ஆளுங்கட்சிக் கொண்ணு; கூட்டணிக் கட்சிக் கொண்ணு, எதிர்க் கட்சிக்கும் ஒண்ணு' என்று புது மொழி வந்துவிடும் போல் இருக்கிறது.

கலைஞர் அரசாவது பொதுச் சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டாமா! ○

— சு. வேணு கோபால்

படங்கள் : ஸ்ரீஹரி

• பெருங்களத்தூர் ஏரிக்கு வரும் வாய்க்காலை அடைத்துக் கட்டப்பட்ட கட்டடத்தில் த.மா.கா. அலுவலகம்...



கோவையின் லேட்டஸ்ட் நிலவரம் குறித்து ஒரு ரிப்போர்ட்.



கடந்த மாத தொடர் குண்டு வெடிப்புக்களுக்குப் பிறகு, மாமூலான வாழ்க்கையைக் கோவை துவக்கி விட்டது என்றாலும் மக்கள் மத்தியில் இன்னும் பீதி குறையவில்லை. அதை இன்னும் கூடுதலாக்கி உள்ளன இரண்டு விஷயங்கள்.

ஒன்று, கோவை பி-1 காவல் நிலையத்திற்கு மணல் மூட்டைகளை அடுக்கிப் பாதுகாப்பு அரண் அமைத்தது. ஒரு கிணற்றில் குண்டுகளைப் போட்டு விட்டதாக ஒரு தீவிர



• எங்கும் வெள்ளைக்காடாய்...

வாதி வாக்குமூலம் கொடுக்கப் போக, அந்தக் கிணற்றில் நீரை வெளியேற்றி குண்டுகளை எடுக்கப் படாதபாடுபட்டுக் கொண்டிருப்பது இரண்டாவது...

என்னதான் நடக்கிறது?

கோவை உக்கடம் பகுதியில் உள்ளது பி-1 காவல் நிலையம். இதற்கு ஏற்கெனவே பல மிரட்டல்கள் (தாக்கப்போவதாக- போலீஸாரைக் கொலை செய்யப் போவதாக) வந்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள். (டிசம்பரில் நடந்த கலவரத்தின் போது இந்த ஸ்டேஷனில் உள்ள போலீஸ் அதிகாரிகளைத் தான் தீவிரவாதிகள் எதிரிகளாகச் சொன்னார்கள் என்பது குறிப்பிடத்தக்கது)

"குறி வச்சுட்டாங்க சார்... இல்லைன்னா இவங்க ஏன் சார் திடுதிப்புனு இப்படி மணல் மூட்டைகளைக் கொண்டு வந்து குவிக்கணும்? டிசம்பரில் ஒரு போலீஸ்காரர் குத்திக் கொலை செய்யப்பட்டார். பிறகு கண்மூடித்தனமான படுகொலை. இப்ப ஏராள குண்டு வெடிப்புகள்... அப்போதெல்லாம் இல்லாம, இப்ப மட்டும் ஏன் சார் இப்படி பாதுகாப்பு..? கண்டிப்பாக மிரட்டல்கள்தான்..." என்றார் அப்பகுதியில் உள்ள ஒரு கடைக்காரர்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கே இந்தப் பொழப்புன்னா... நாம எல்லாம் எந்த மூலைக்கு?"- பேரூர் செல்ல டவுன்ஹாலில் நின்றிருந்த ஒரு கிராமவாசி பக்கத்திலிருந்தவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்!

ஸ்டேஷனுக்கு முழுக்க முழுக்க தடுப்பு வேலி போடப்பட்டு, இரண்டு புறங்களிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மணல் மூட்டைகள். அதன் மேல் படுத்த வாக்கில் துப்பாக்கியுடன் அதிரடிப்படை வீரர்கள்.

உள்ளே பரபரப்பாய் நகரும் போலீஸார், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள்...

"சார், என்ன விஷயம்... மணல் மூட்டைகள்..?"

"மேலிடத்து ஆர்டர். செய்திருக்கிறோம்!"

"ஸ்டேஷனுக்கு மிரட்டல் என்று செய்தி வந்துள்ளதே...!"

"மிரட்டலா... இன்னும் இந்த ஸ்டேஷனுக்கு மிரட்டல் விட எவனும் பிறந்து வரவில்லை!" என்று கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுப் பேசின அந்த அதிகாரி, சற்று தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு -

"அப்படியெல்லாம் இல்லை சார். இப்ப



• காவல் நிலையத்துக்குப் பாதுகாப்பாய் மணல் மூட்டை...

குண்டுகள் எடுக்கப்படுமா...? மிரட்டல் ஒடுக்கப்படுமா...?

நிலைமை கட்டுக்குள்ள தான் இருக்கு. எப்பொழுதோ இந்த ஸ்டேஷனுக்கு மணல் மூட்டை பாதுகாப்புப் போட வேண்டியது. இப்ப மேலிடம் சொன்னதால உடனடியா செய்ய வேண்டியதாப் போச்சு! யாரோ சிலர் செய்யற தவறு.. தெரிஞ்சோ ,தெரியாமலோ எல்லாம் செஞ்சு முடிச்சுட்டாங்க. ஆனா இப்ப அவஸ்தைப்படறாங்க. அதுக்காக ஒட்டுமொத்த சமுதாயத்தையே ஒதுக்கினா எப்படி? ஜனங்களோட பாதுகாப்புக்காகத்தான் இப்படி!'' என்று சாந்தமாய்ச் சொல்லி நகர்ந்தார்.

"போலீஸ் பொழப்பு மகா மோசமாகி விட்டது சார்! திரும்பின பக்கமெல்லாம் குண்டு வெடிப்பு.. நேரங் காலமில்லாம டூட்டி.. நினைச்சவங்க எல்லாம் இஷ்டம் போல எழுதிட்டுப் போறாங்க.. எங்களுக்குள்ள ஒரு ஒற்றுமையுமில்ல..!" என்று அங்கலாய்ப்புடன் சொல்லிக் கொண்டே வழியில் வந்த இரு போலீஸார், "இதையும் கொஞ்சம் எழுதுங்க சார்..!" என்றனர்.

இங்கு இப்படியென்றால் கோவை சாரமேடு பகுதியில் ஜனங்கள் அதிகாரிகளை மொய்த்துக் கொண்டிருந்தனர். காரணம் கிணற்றில் இருக்கும் குண்டுகளை எடுக்க மாநகராட்சி ஊழியர்கள் இன்ஜின் வைத்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்ததுதான்.

நாம் சென்றபோது கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்ததால் அந்தப் பகுதியே வெள்ளக்காடாய் காட்சியளித்தது. தொடர்ந்து ஐந்து நாட்களாகத் தண்ணீர் இறைத்தும் ஊற்று காரணமாக நான்கடி ஆழமே குறைந்திருப்பதாக மாநகராட்சி ஊழியர்கள் சொன்னார்கள். வீதிகளுக்குள் தண்ணீர் புகுந்து நடக்க முடியாமல் போகவே, அங்கு வந்த கவுன்சிலரை ஜனங்கள் மறித்துக் கொண்டனர்.

"நாங்க எல்லாம் ஓட்டுப் போட்டமே.. நீங்க என்ன செஞ்சுட்டிருக்கீங்க...? கிணத்துத் தண்



• கவுன்சிலரிடம் கேள்வி கேட்கும் மக்கள்...

ணியா இது.. பூரா சாக்கடைத் தண்ணி.. இதுல என்னென்ன நோய் வருமோ என்னவோ..?"

அவர்களிடமிருந்து ஒரு வழியாகத் தப்பி வந்த கவுன்சிலர் அப்துல் ரஹ்மானை நாம் கேட்ட போது, "சார், இது முஸ்லீம் ஏரியான்னாலும் நிறைய இந்துக்களும் இருக்காங்க.. இங்கே இது வரைக்கும் எந்த அசம்பாவிதமும் நடந்ததில்லை. சந்தேகப்படும்படி யாரும் நடமாடியது கூட இல்லை. இப்ப யாரோ ஒருத்தன் சொன்னாங்கறதுக்கு வேண்டி கிணத்துக்குள்ள இருந்து தண்ணிய இறைச்சு ஊரையே முழுகடிச்சிட்டிருக்காங்க. அத்தனை தண்ணியையும் எப்ப வெளியேற்றி, குண்டுகளைக் கண்டுபிடிச்சு.. என்னால வீட்ல படுத்துத் தூங்க முடியல... அதுதான் மிச்சம்.." என்றார் அலுப்போடு.

குண்டுகள் எப்படி எந்த மாதிரி என்பது தெரியாததால் நீருக்குள் மூழ்கிப் பார்க்க இயலவில்லையாம்!

கிணற்றுக்குள் 125 பைப் குண்டுகள் இருப்பதாக- தீவிரவாதிகள் போட்டிருப்பதாக போலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ●

கட்டுரை, படங்கள்: **கேயெஸ்வி**

செய்திகள்! வாசிப்பவர், சுஷ்மா ஸ்வராஜ்!



கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக, பல்வேறு மாநிலங்களில் உள்ள சிறிய, பெரிய கட்சிகளோடு பா.ஜ.க. கூட்டணி அமைக்க முயன்று கொண்டிருந்த நேரம் அது. தினசரி ஏதாவது ஒரு கட்சியுடன் கூட்டு முடிவாகி, அந்தக் கட்சியின் தலைவர் அல்லது பிரதிநிதி, பா.ஜ.க. செய்தித் தொடர்பாளருடன் சேர்ந்து பேட்டி கொடுப்பது வாடிக்கையாக இருந்தது. இது தவிர, வேறு கட்சிகளில் இருந்தும் பா.ஜ.க.வில் அன்றாடம் இணைந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் கூட்டணிக் கட்சி பிரதிநிதிகள் மற்றும் கட்சியில் சேர்ந்தவர்கள் யாரும் இல்லாத நிலையில் தனியாகப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் செய்தித் தொடர்பாளர் சுஷ்மா ஸ்வராஜ். "என்ன இன்று உங்கள் வலையில் யாரும் சிக்கவில்லையா?" என்று ஒரு நிருபர் தமாஷ் செய்திருக்கிறார். உடனே சுஷ்மா "இன்று எங்களுக்கு வார விடுமுறை நாள்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்லியிருக்கிறார்!

பொல்லாத தில்லி நிருபர்களைச் சமாளிப்பதற்கு கைச்சரக்கு நிறைய வேண்டும்.

சங்கடமூட்டும் கேள்விகள், சர்ச்சைகளை உண்டாக்கும் கேள்விகள் என்று அம்புகள் வரும்போது, தாங்கிக் கொள்ளப் பழகினால் மட்டும் போதாது; அவற்றைத் திருப்பி அனுப்பவும் தெரிந்திருக்க வேண்டும். 46 வயது சுஷ்மா ஸ்வராஜ் இந்த வித்தைகளில் தேர்ந்தவர். இல்லையென்றால் தினசரி 60,70 நிருபர்களைச் சமாளிக்க முடியுமா? இந்தி, ஆங்கிலம், ஜெர்மன், சமஸ்கிருதம் என்று பல மொழிகளில் விடுகட்டி விளையாடும் திறமை உண்டு அவருக்கு.

மத்திய அமைச்சரவையின் மரியாதைப் பட்டியலில் (protocol) கடைசியாக உள்ளவர் சுஷ்மா என்றாலும், பா.ஜ.க.வின் தலைவர்கள் அணியில் முன்னணியில் இருப்பவர் இந்த முன்னாள் சோஷலிஸ்ட்; ஆர்.எஸ்.எஸ். அஸ்திவாரம் இல்லாத சில தலைவர்களில் இவரும் ஒருவர். சுஷ்மாவின் தாய், தந்தை, 47க்கு முன் லாகூர் வாசிகள். ஆனால் சுஷ்மா பிறந்து வளர்ந்தது அம்பாலாவில்தான்.

கல்லூரி நாட்களில் இவரைக் கவர்ந்தவர் லோஹியா. சட்டம் முடிந்த கையோடு அரசியலில் குதித்தார். 1977ல் சோஷலிஸ்டுகளும் இணைந்த ஜனதா அவியலில் சுஷ்மாவும் சேர்ந்தார். 1978ல் ஹரியானாவில் தேவிலால் அமைச்சரவையில் அமைச்சரானார். 25 வயதிலேயே அமைச்சராகி கின்னஸில் இடம் பெற்றவர் சுஷ்மா!

எமர்ஜென்ஸி காலத்தில், ஜனநாயகம் மீண்டும் மலர்வதற்காகப் பல தலைமறைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். பரோடா வெடிகுண்டு வழக்கில் சோஷலிஸ்ட் சகாவான ஜார்ஜ் பெர்னாண்டஸுக்கு ஆதரவாக கோர்ட்டில் ஆஜரானார்கள் இவரும் இவரது கணவர் ஸ்வராஜ் கௌஷலும். நாடு முழுவதும் இவர் பெயர் அறிமுகமானது அப்போதுதான்.

ஸ்வராஜ் கௌஷல் ஒரு தீவிர சோஷலிஸ்ட். 1980ல் ஜனதா சோதனை அரை வேக்காடாகி விட்ட நிலையில் வாஜ்பேயி, அத்வானி ஆகியோரைத்

தலைவர்களாக ஸ்வீகரித்து பா.ஜ.க.வில் சேர்ந்து விட்டார் சுஷ்மா. அன்றிலிருந்து இன்றுவரை எந்த ஊசலாட்டமும் கிடை யாது. இளவயதில் அமைச்சராகி சுஷ்மா பிரபலம் ஆனது போலவே, கணவர் கௌஷலும் இளவயதில் கவர்னராகி கின்னஸில் இடம் பெற்று விட்டார்!

1990ல் ராஜ்ய சபை உறுப்பினர். 1996ல் முதன் முதலாக தெற்கு தில்லியில் போட்டியிட்டு வெற்றி. 13 நாள் வாஜ்பேயி அரசில் இதே தகவல்-ஒளிபரப்புத் துறை அமைச்சராக இருந்தார். இந்த முறை சபாநாயகராகத் தள்ளி விடலாமா என்று பார்த்துக் கொண்டிருந்தது தலைமை. உஷாராக அதிலிருந்து தப்பி அமைச்சராகி அதே துறையை மீண்டும் கைப்பற்றி விட்டார் சுஷ்மா. தில்லி அரசியல் வட் டாரத்தைப் பொறுத்த மட்டில் 'கலர்ஃபுல்' அரசியல்வாதி இவர். பத்திரிகையாளர் களுக்கு on record- ல் தருவதைத் தவிர வேறு பல கட்சிகளில் நடப்பதையும் off the record ஆக தருவதில் தேர்ந்தவர்!

தில்லிக்கு ஜெயலலிதா வந்தால், அவருக்கு எந்தக் குறையும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சுஷ் மாவின் புதிய வேலை. அரசின் பிடியி லிருந்து தூர்தர்ஷனும், அ. இ. ரேடியோவும் விடுபடுவதற்காக பிரஸார் பாரதி அமைப்பை உண்டாக்கியது ஐ.மு. அரசு. ஓர் அவசர சட்டம் மூலம் அந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை இன்னும் பெறவில்லை. குறிப்பிட்ட நாட் களுக்குள் பெறவில்லையென்றால் சட்டம் காலாவதி ஆகிவிடும். அதன்பின் பிரஸார் பாரதி செயல்பட முடியாது.

பா.ஜ.க. அரசோ செய்தி ஸ்தாபனங்கள் மீது தன் கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ள விரும்புகிறது. இது ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் ஒன்று. ஆகையால் அவசரச் சட்டம் காலாவதி ஆவதையே அது விரும்பு கிறது. என்றாலும், நேரடியாக இதைச் சொல்லாமல் ''பிரஸார் பாரதியில் கம்யூனிஸ்ட்டுகள் தான் இருக்கிறார்கள்'' என்றெல்லாம் குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்வரும் நாடாளு மன்றக் கூட்டத்தில் சுஷ்மாவுக்குச் சவாலாக விளங்கப்போகும் விஷயம் இது!

— கௌசி

கல்கி–
B. M. SILK SAREES

BMSS

இணைந்து வழங்கும்

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி - 2

கின்னஸில் இடம்பெற்ற தம்பதி பற்றி இந்த இதழில் வெளியாகியுள்ள கட்டுரை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யார் அந்தத் தம்பதி?

கண்டு பிடித்துக் கீழுள்ள ஒரு பாதிக் கூப் பனில் எழுதியனுப்புங்கள். பலர் சரியான விடையெழுதினால் குலுக்கல் முறையில் ஒருவருக்கே பட்டுப் புடைவைப் பரிசு!

மீதிப் பேருக்கு ஏமாற்றம்தானா? இல்லை. கூப்பனிலுள்ள மறுபாதியிலும் இதே விடையை எழுதிப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பன்னிரண்டு வாரம் தொடரப் போகும் இப் போட்டியின் முடிவில் பம்பர் பரிசு ஒன்றும் காத்திருக்கிறது! விவரங்கள் விரைவில்.

- விடைகளைக் கூப்பனில் மட்டுமே எழுதி யனுப்ப வேண்டும். ஒரிஜினல் கூப்பன்தான்; ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி: **27.4.98**

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 2
(நீங்கள் பத்திரப்படுத்த வேண்டிய கூப்பன்)

கின்னஸில் இடம்பெற்ற தம்பதியின்

பெயர்கள் : ....

என் பெயர் : ....

முகவரி : ....

....

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 2
(எங்களுக்கு அனுப்ப வேண்டிய கூப்பன்)

கின்னஸில் இடம்பெற்ற தம்பதியின்

பெயர்கள்: ....

என் பெயர்: ....

முகவரி: ....

....

குறிப்பு: ஏஜெண்ட் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்ட் தேவை.



அமி ஸூப்பர் மார்க்கெட்

ஹாய், ஃப்ரெண்ட்ஸ்,

ஊட்ல எல்லாரும் சௌக்கியமா? கோயமுத்தூர்ல குண்டு வெடிச்சாலும் வெடிச்சது, எங்க பார்த்தாலும் ஒரே டமால் டமால் பேச்சு தான் இப்பல்லாம். என் ஃப்ரெண்ட் ஒருத்தி சினிமால டான்ஸ் அஸிஸ்டெண்டா இருக்கா. அவ என்ன சொன்னா தெரியுமா? லாஸ்ட் ஒன் மன்த்ல மட்டும் ஆறு படங்கள், குண்டு வெடிப்பை மையமா வெச்சி ஆரம்பிச்சிருக்காங்களாம். இன்னும் போலீஸுக்கு டேக்கா குடுத்துட்டிருக்கற ஆயிஷாவை, புரட்சிப் பெண்ணா உருவகம் பண்ணி கதை பண்ணலாமான்னு யோசிச்சிட்டிருக்காங்களாம்! இது தவிர, வாரப் பத்திரிகை தொடர்கதை, மாச நாவல், 'புலனாய்வு'ப் பத்திரிகைகளுக்கு 'கரம்' மேட்டர், சீர்காழி ரேவதி மாதிரியான ஜோக் ஃபாக்டரி ஓனர்களுக்கு லட்டு... 'தீவிரவாதிகள் எத்தனை பேருக்கு வாழ்வு குடுத்திருக்காங்க பாரு'ன்னா அவ.

'அடிப்பாவி'ன்னு செல்லமா ஒரு கும்மாங்குத்து குத்தப் போனேன்.

"வெயிட் வெயிட், இன்னொண்ணையும் கேட்டுட்டுக் குத்து''ன்னா.

என்னடீன்னா, நடிகர் திலகம் சிவாஜி வீட்டுல ரெண்டு குண்டு வெச்சிருக்குன்னு எவனோ போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்கு போன் பண்ணி சொன்னானாம்.

அலறியடிச்சிட்டு ஒரு படையே போக் ரோடுக்குப் போயிருக்குது. நாய், பேய்னு சப்ளிமெண்ட் சமாசாரங்கள் வேற.

அங்கபோய் வீட்ட வளச்சு சோதனை போட்டு, நாளெல்லாம் பெண்டு கழண்டு போயி, ஒண்ணும் அகப்படாம திரும்பிட்டாங்க.

மறுபடியும் ஈவினிங் போன் வந்ததாம். அதே ஆளு.

"என்ன சார், போனீங்களா?''ன்னு கேட்டிருக்கான்.

"குண்டு ஒண்ணும் இல்லியே. ஃபால்ஸ் நியூஸா தர்றே. மகனே தீர்த்துடறேன் உன்னை''ன்னு கமிஷனர் எகிறினாராம்.

கூலா அவன் சொன்னானாம்: "நல்லா பாத்திங்களா சார்? பிரபுவும் ராம்குமாரும் குண்டு இல்லாம பின்ன ஒல்லியா?''ன்னு கேட்டானாம்.

கோடம்பாக்கத்துல லேட்டஸ்டா சொல்லப்படற ஜோக்காம் இது. பிரபுவே இதைக் கேட்டுட்டு விழுந்து விழுந்து சிரிச்சாராம், 'அட நல்லாருக்கே'ன்னு சொல்லிட்டு.

ரீஸண்டா நான் கேள்விப்பட்ட இன்னொரு ஜோக் இது. ஜோக்னு சொல்றதுக்கில்லை. கர்நாடகாவுல நிஜமாவே நடந்துச்சாம்.

ஒரு கோஷ்டி, வீடு வீடா போயி ஒரு பேம்ப்லட் குடுத்திருக்காங்க. என்னடா விஷயம்னா, 'பரீட்சைக்குப் படிப்பது எப்படி?'ங்கறது பத்தி, பாயின்ட் பாயின்டா சில டிப்ஸ் குடுத்துட்டு,



''ஆச்சரியமாயிருக்கே! நரசிம்மராவ் சிரிக்கற மாதிரியான இந்த போட்டோவை எப்ப எடுத்தீங்க ?''

''கேஸரிக்கு தலைமைப் பதவி காலியான அன்னிக்கு...''



'' ஜெயலலிதாவுடன்தான் பிரதமர் போனில் பேசிக்கிட்டிருக்கார்னு எப்படிச் சொல்றே?''

''எஸ்...எஸ்...எஸ்னு பிரதமர் குரல் அரைமணி நேரமாக் கேட்டுக்கிட்டிருக்கே!''

– உ.. ராஜாஜி

நாளைக்கு சாயங்காலம் இன்ன இடத்துல இன்ன டயத்துல நேர்ல வந்திங்கன்னா, இதெல்லாத்தையும் விட யூஸ்ஃபுலா ஒரு டிப்ஸ் தரப்படும்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க.

நல்லா படிக்கிற பசங்க எல்லாம் ரொம்ப ஆர்வமா அங்க போயிருக்காங்க. ஈ, காக்கா இல்லியாம்! ஒரு போர்டுல, "இப்பிடி யாரானா கூப்ட்டா, நாக்கைத் தொங்கப் போட்டுட்டு, டயத்த வேஸ்ட் பண்ணிட்டு அலைஞ்சிட்டு ஓடாதீங்க. ஒழுங்கா உட்கார்ந்து படிங்க. இதான் அந்த டிப்ஸ்"னு எழுதி இருந்திச்சாம்.

எந்த ககமாலமோ நல்லா ஏப்ரல் ஃபூல் பண்ணீட்டானேன்னு தலைல அடிச்சிட்டுத் திரும்பி வந்திருக்காங்க!

வருஷா வருஷம் ஏப்ரல் ஒன்னு வந்தா, இந்த விளையாட்டை எல்லாரும் விளையாடறாங்க. பத்திரிகைகள் கொஞ்சம் ஓவராவே போயிடுச்சி.

ஏப்ரல் ஒன்னை முட்டாள்கள் தினம்னு கொண்டாடறது நம்ம கல்சரே இல்லை. அதை ஆரம்பிச்ச ஐரோப்பிய நாடுகளே இப்ப அத்தனை தீவிரமா அதுல விளையாடறதில்லை. ரஜினி அரசியல் கட்சி தொடங்கறார், ராமர் பிள்ளை தக்காளி ஜுஸ்ல பெட்ரோல் எடுக்கறார்னு பத்திரிகையாளர்களே கதாசிரியரா ஆகி ஃபிக்ஷன் எழுத முடியாத தங்களோட ஆசையை இங்கே தணிச்சுக்கறாங்க. எனக்கு சகிக்கலப்பா! ஒழியட்டும்.

இந்த போர்ஷன்ல நீங்களும் சேர்ந்து கலக்கப் போறீங்கன்னு சொல்லியிருந்தேனில்லை? அதுக்கு இதையே ஒரு ஆரம்பமா வெச்சுக்கலாமா? நல்ல ஜர்னலிஸம்னு நீங்க எதை நினைக்கறீங்க? நச்சுனு நாலே வரில கார்டுல எழுதி, 'கமி செக்ஷன்'னு அட்ரஸுக்கு முன்னால குறிப்பிட்டு கல்கி ஆபீஸுக்கு அனுப்பிடுங்க. லாஸ்ட் டேட் என்னன்றீங்களா? இந்த இஷ்யூலயே, பட்டுப் புடைவைப் பரிசுப் போட்டிக்கான லாஸ்ட் டேட் இருக்குமே.. அதான்! எனக்குப் பிடிச்சதை பப்ளிஷ் பண்ண ஏற்பாடு பண்றேன். (எடிட்டருக்கும் பிடிச்சா, ஏதாவது பரிசு குடுத்தாலும் குடுக்கலாம்!) ○

– கமி

இதயம் பேசுகிறது வழங்கும் விலை ரூ12/-

ஒளிரும்

ஞானதீபம்


முழுமையான பக்தி மலர்

ஏப்ரல் '98

வெள்ளிக்
குத்துவிளக்கு
பரிசுப் போட்டி

கலர் டி.வி.
அமர்நாத் யாத்திரை
பரிசு கூப்பன்

யோகமாயா
ஸ்ரீ புவனேஸ்வரி
ப்ளோ-அப்



இலவச இணைப்பு
சர்வதோஷ நிவாரண
மூலிகைப்பொடி

அதிக வண்ண பக்கங்களுடன்
வெளிவரும் ஓரே ஆன்மிக இதழ்...
இப்பொழுது விற்பனையில்

தந்தை மகனுக்காற்றும் உதவி

கௌஹாதி,
5.4.98

அன்புள்ள பெற்றோருக்கு,

உங்கள் மகனின் பணிவான வணக்கம். நலம் நலமறிய அவா. இங்கு குளிர்தான் அதிகம். அங்கே உங்கள் உடல் நலத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதவும். சென்னை மாநகரையும், நண்பர்களையும் விட்டுவிட்டு வந்ததில், பேச, படிக்க, பழக ஆள் துணை இல்லை என்ற வருத்தமும் இருந்தது. தமிழ்ப் பத்திரிகைகள் கிடைப்பதில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, 'அமுதசுரபி' மாத இதழும், 'கல்கி' வார இதழும் தபாலில் வந்தன. திடீரென்று தபாலில் வந்த அதிசயம் எனக்கு! தங்கள் ஏற்பாடு என்பதை அறிந்து மிக மகிழ்ந்தேன். 'ஸ்ரீராம் டிரஸ்ட்' சந்தா முதலீட்டுத் திட்டத்தில் ஐந்து வருடங்களில் பணம் இருமடங்காகும் திட்டத்தில் சேர்ந்து, அதற்கு 'ஸ்ரீராம் டிரஸ்ட்' 5 ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி'யும், 'கல்கி'யும் அன்பளிப்பாகத் தருவதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்தேன். 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகி ரூபாய் 20 ஆயிரமாகக் கிடைக்கும். இங்கு மாதாமாதம் 'அமுதசுரபி'யும், வாராவாரம் 'கல்கி'யும் எனக்கு நன்றாக பொழுதுபோக உதவுகிறது. பொன்விழா கண்ட நல்ல பத்திரிக்கைகள் ஆயிற்றே! என்னை நன்றாக முதல் வகுப்பில் வருமாறு படிக்க வைத்தீர்கள். இப்போது எனக்குப் படிக்க நல்ல இரு பத்திரிகைகளையும் இலவசமாக 5 வருடங்களுக்குக் கிடைக்க வழி செய்து விட்டீர்கள். அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் இப்போது தொடர்ந்து படிக்கக் 'கல்கி' கிடைக்கப்போகிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எப்படியும் எல்லைப்புறங்களில் நான் 5 வருடங்களுக்குப் பணியாற்றியே ஆக வேண்டும். உங்களுக்கு நன்றிக்கடனாக நான் செய்ய வேண்டிய திட்டத்தை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். எல்லோர் உடல் நலத்துக்கும் அவ்வப்போது எழுதவும்.

பி.கு: ஸ்ரீராமின் சீட்டுநிதி விவரங்களை
தெரியப்படுத்துங்களேன்.

அன்பு மகன்
மனோகர்

ரூ.10,000/- (ரூ.பத்தாயிரம்) ஸ்ரீராம் டிரஸ்ட் பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :
ஸ்ரீராம் டிரஸ்ட், A-7, 2வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102.
போன் : 6286869 / 6287879

- பெயர் : திரு / திருமதி / செல்வி : ....
  முகவரி : ....
  .... Pin ....
- கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ....
- வாரிசுதாரர் (Nominee) : ....
- கல்கி மற்றும் அமுதசுரபி இதழ்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ....
  ....

இத்துடன் ரூ.10,000/- (பத்தாயிரம்) காசோலை / டிடி எண் : .... / தேதி : ....
வங்கியின் பெயர் .... இணைத்துள்ளேன். 5 ஆண்டுகளுக்குப் பிறகு **ரூ.20,000** (இருபதாயிரம்) ஆகத் திரும்ப பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

இடம் தேதி முதலீட்டாளர் கையொப்பம்

இவரது இதயம் பாதி வேகத்தில் துடிக்கிறது!

பிரகாஷ் வேலாங்கர், நாற்பது வயதைக் கடந்தவர். பிரபல விளம்பர நிறுவனமான 'க்ளியா அட்வர்டைசிங்'கில் கிரியேடிவ் டைரக்டர். நிறைய கிரிக்கெட் ஆடுவார். சமூக சேவைகளிலும் நாட்டம் உள்ளவர்.

சாதாரணமாக ஒரு நாள் மெடிகல் செக் அப்புக்குப் போனார். உடனே இன்டென்சிவ் கேர் பகுதிக்கு அழைத்துப் போய்ப் படுக்க வைத்து விட்டார்கள்! பல நிபுணர்கள் சூழ்ந்து கொண்டு பரிசோதிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்போதுதான் அவருக்கே தெரிந்தது...

அவரது இதயம், வழக்கமாக எல்லாருக்கும் துடிக்கிற மாதிரி நிமிடத்துக்கு 72 முதல் 84 வரை, துடிப்பதில்லை. 32 தடவைதான் துடிக்கிறது!

இதையடுத்து, தமக்கு ஏற்பட்ட மருத்துவ அனுபவங்களை எல்லாம் ஆரம்பத்திலிருந்து ஒரு நாவல் மாதிரி எழுதினார் 'பிரகாஷ் வேல்' என்கிற புனைபெயரில். "32 இதயத் துடிப்புகள் – உள்ளம் உருக்கும் அனுபவம்" என்ற இந்த மராத்தி நூல், விற்பனையில் இப்போது சக்கைப்போடு போடுகிறது!

"ஒரு சிக்ஸர் அடிக்கிறதுக்கு வாய்ப்பு இல்லாம; ஆடவே முடியாதபடிக்கு விதிக்கப்பட்ட தண்டனை போலும் இது!" என்று சொல்லுகிறார் பிரகாஷ். மருத்துவமனை, மருத்துவமனையாக அலைக்கழிக்கப்பட்டதை, சுவாரசியமாகச் சொல்லியிருக்கிறார். ஒரு டாக்டர் சொன்னாராம் : "கவலைப்படாதீங்க. போர்குக்கும் இதயத்துடிப்பு 34 தான்!"

காலை நான்கு மணிக்கே எழுந்திருந்து, டோம்பிவிலியிலிருந்து எலக்ட்ரிக் ட்ரெயின் பிடித்து, சத்ரபதி சிவாஜி (வி.டி.) டெர்மினலில் இறங்கி, ஆசாத் மைதானத்தில் எட்டரை வரை கிரிக்கெட் ஆடிவிட்டு, ஓர்லியில் உள்ள தமது அலுவலகத்துக்குப் பறந்து விடுவார். விடுமுறை நாட்களில், கொங்கணியில் இருக்கும் சொந்தக் கிராமத்துக்குப் போய் மாம்பழ பிஸினஸ் செய்கிறார்.

பிரகாஷ் கொஞ்சம் கூடச் சோர்ந்து போவதே இல்லை. "எனக்கு டாக்டர்கள் அலுத்துவிட்டார்கள். ஆபரேஷன் செய்வது தேவையோ, இல்லையோ, நான் அதிக நாள் வாழ வேண்டும்!"

இவருக்கு மட்டும் இதயத் துடிப்பு ஏன் இப்படிக் குறைவாக இருக்கிறது? இது சரிதானா? அல்லது ஒருவகை நோயா?" என்று டாக்டர் வ. நம்பி எம்.டி. யிடம் கேட்டோம்.

"இதய நரம்பு, வேலை மாறுபாட்டினால், இதயத் துடிப்பின் எண்ணிக்கை குறைகிறது. அதனால் பாதிப்பு எதுவும் கிடையாது. அது ஒரு நோயும் அல்ல. சிலருக்குப் பிறப்பிலேயே இதயத் துடிப்பு குறைவாக இருக்கும். அதுவும் கூட ஒரு நோய் அல்ல.



"சில வேளைகளில், மாரடைப்பு நோயினாலேயோ அல்லது மருந்துகளினாலேயோ, இதயத் துடிப்பு மிகவும் குறைந்து போய்விடும். இதயத் தளர்ச்சிக்காக அல்லது அதிக இரத்த அழுத்தத்துக்காக மருந்துகள் கொடுக்கும் போது, இதயத் துடிப்பு குறையும். அதற்குச் சிகிச்சை எடுத்துக் கொள்வது அவசியம்.

"வேகமாகத் துடிக்கிற இதயத்தைவிட குறைவாகத் துடிக்கிற இதயம் ஒரு வகையில் நல்லது. அணிலுக்கு ஆயுள் ஒரு வருடம்தான். அதன் இதயத் துடிப்பு, நிமிடத்துக்கு 700. யானைக்கு இதயத் துடிப்பு, நிமிடத்துக்கு 50தான். ஆனால் நூறு வருடம் உயிர் வாழ்கிறது! இதயத் துடிப்பை வைத்துக் கொண்டு ஆயுளைக் கணக்கிட வேண்டாம். மயக்கமோ, நினைவு இழுத்தலோ இருந்தால் மட்டுமே Pace Maker மாதிரியான கருவி வைத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் டாக்டரிடமிருந்து விலகியே இருக்கலாம்.

"இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, அந்தமானில் இருந்து பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவரை இங்கே ஜி.ஹெச்.சில் அட்மிட் செய்தார்கள். அவரை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று தில்லியிருந்து உத்தரவு வேறு வந்தது. அவரது இதயத்துடிப்பு குறைவாக (34 தான்!) இருக்கிறது என்று குறித்து வைத்திருந்தோம். என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, அதே அந்தமான் பகுதியிலிருந்து இன்னொரு பழங்குடி நபரைக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அவருக்கும் இதே மாதிரி, இதயத்துடிப்பு 34தான் இருந்தது! அதனால் சில பழங்குடி இனத்தவருக்கு இப்படி இதயத் துடிப்பு குறைவாகவே இருக்கும் என்ற உண்மை தெரிந்தது.

"நோயினால் இதயத்துடிப்பு குறையும்போது, டாக்டரின் கண்காணிப்பு அவசியம். அல்லது அந்த நபருக்கு, அதனால் தொல்லைகள், பாதிப்புகள் வரும்போது வேண்டுமானால் டாக்டரை அணுகலாம். இல்லை என்றால் கவலையே பட வேண்டியதில்லை!" ○

— எஸ்.வி.என்.

நோஞ்சான் குழந்தைகளைக் காப்பாற்ற ஒரு வங்கி!



'அக்னி' நட்சத்திரம்

முதல்வர் ஜோஷிக்கு நேரமே சரியில்லை! எதிர்க்கட்சிக்காரரான பாமல், "அண்ணா ஹஜாரே குற்றம் சாட்டினார் என்று விவால்கர், ஃபட்நவிஸ், சுதார் போன்றோர் மீது 'என்கொயரி' நடத்தினார்களே; இப்போது அதே முறையில் முதல்வர் மீதுள்ள குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்படுமா?" என்று தேய்ந்த பிளேட்டாய் கரகரக்கும் தலைவலி ஒருபுறம் என்றால், சொந்தக் கட்சிக்காரரான சுதாரே, "தூதாட் என்கொயரி முடிந்து, நான் நிரபராதி என ரிப்போர்ட்டும் வந்தாயிற்று. அதை ஏன் இன்னும் வெளியிடவில்லை? நாலு கோடியை விழுங்கிய ஹஜாரே மீது ஏன் விசாரணை நடத்தப்படவில்லை?" என்றெல்லாம் அலறும் திருகுவலி மறுபுறம்! தாக்கரே தாக்கியபோது, லோனாவாலாவுக்குச் சென்றது போல், பேசாமல், மாதேரான், மஹாபலேஷ்வர் என்று சுற்றுப் பயணம் கிளம்பிவிட வேண்டியதுதான்! அனலடிக்கும் வெயிலிலிருந்தும் பிழைக்கலாம்; கனல் கக்கும் பேச்சுக்களிலிருந்தும் தப்பிக்கலாம்!

உள்ளும் புறமும்

அரசியல் வட்டாரங்களில் தாக்கரே – ஜோஷி மோதல்தான் இன்னும் நகைப்புக்குரிய விஷயமாயிருக்க, எதிர்க் கட்சிக்காரர்கள், சமயம் கிடைத்தபோதெல்லாம் அதை லாகவமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு பொதுக் கூட்டத்தில், "ஜோஷி பாவம்! என்ன முடிவெடுக்கிறாரோ? முடிவெடுக்கும் மனநிலையில் இருக்கிறாரோ என்னவோ? முடிவாக பூஜ்பால் வழியில் அவர் செல்வதுதான் (காங்கிரஸுக்கு தாவுவது) நல்ல முடிவாயிருக்கும்" என்றெல்லாம் கிண்டலடித்திருக்கிறார்கள். ஷரத் பவார் "எங்களிடமிருந்து ஜோஷிக்கோ, வாஜ்பேயிக்கோ எந்தவித ஆபத்துமில்லை! ஜோஷியைத் தாக்க தாக்கரேவும், வாஜ்பேயியைக் கலக்க ஜெயலலிதா, சமதா, மமதாவும் இருக்கையில், நாங்கள் ஏன் வீணாக சிரமப்பட வேண்டும்?" என்கிறார். ஆக, பிரச்னை வெளியி லில்லை! உள்ளேயேதான் கனன்று

கொண்டிருக்கிறது!

கொடு, தொடு, எடு!

"ஓங்கி ஒரு அறை கொடு; இடுப்புக்கு மேலிருக்கும் வஸ்திரங்களைக் களைந்து விட்டு அதே நிலையில் போட்டோவும் எடு" – இதுதான் ராகவ்ஜி லேனில் வசிப்பவர்கள், அந்தத் தெருவில், டாக்ஸியில் வந்து இறங்கு பவர்களுக்குக் காட்டும் முதல் மரியாதை! வெயில் தலைக்கேறியதால் வந்த வினையல்ல! சிலர் தேடி வந்த கிளுகிளு விஷயங்களுக்கு இவர்கள் விதித்த விலை! நடுத்தர வர்க்கக் குடியிருப்புகள் அடங்கிய அப்பகுதியில், யாரோ சில விஷமிகள் சிவப்பு விளக்கு சமாசாரங்களை கள்ளத்தனமாகப் புகுத்த, சுற்றியிருந்த அப்பாவிகள் அருவருப்பான தொல்லைகளுக்கு ஆளானார்கள். போலீசிடம் புகார் மேல் புகார் செய்ததற்கு, "எங்கள் வயிற்றிலடிக்காதீர்கள்" என்ற வீரதீரமான பதில் வந்ததால், வேறு வழியின்றி, பொது மக்களே ஒன்று கூடி, தெரு முனையில், 'நைட்டூட்டி' பார்த்தார்கள்; இரவில் வாகனங்களை மடக்கி, உள்ளே இருப்பவரின் குலம் கோத்திரத்தை விசாரித்து, உண்மையான விருந்தாளி என்றால் விட்டு விடுவது; 'விருந்துக்கு வந்திருப்பவரென்றால் அவர்களை, அடித்துத் துகிலுரித்து, புகைப்படமுமெடுத்து, சொந்தக்காரர்களுக்கு அனுப்பி, ஒரு வழி பண்ணி விடுவது என்கிற பாலிஸியைக் கடைப்பிடித்தார்கள். அரசியல்வாதியிலிருந்து, சினிமாக்காரர்கள், போலீசார் வரை, பல பெரிய மனிதர்களுக்கு இந்த 'உபசாரம்' கிடைத்திருக்கிறது. விளைவு? இரண்டே மாதத்தில் மீண்டும் பச்சை விளக்குப் பகுதியாக அது மாறி விட்டது! ஜனசக்திக்கு தலைவணங்காத சக்தி ஏது?

பாசத்துக்கு ஒரு வங்கி!

பணத்தைச் சேமிக்கும் வங்கி எல்லோருக்கும் தெரியும்; ரத்தம் சேமிக்கும் வங்கி ஒரு சிலருக்குத் தெரியும்; ஆனால் பாசத்தையும் சேமிக்க மும்பைக்காரர்களுக்கு ஒரு வங்கி அறிமுகமாகியுள்ளது. சயான் ஆஸ்பத்திரியில், முதன் முதலாக, தாய்ப்பால் சேமிக்கும் வங்கியைத் துவங்கியுள்ளனர். எய்ட்ஸ், விடி போன்ற நோய்களற்ற, ஆரோக்கியமான அன்னையரிடமிருந்து சுரக்கும் அமுதை, -20°C குளிர்ச்சியில் உறையச் செய்து, பின் 56°C ல் 'பாஸ்சரைஸ்' செய்யப்பட்டு, கிரிமிகளுக்கான பரிசோதனைக்கு ஆட்படுத்தப்பட்டு, பின்னர் குளிர் சாதனப் பெட்டியில் சேமித்து வைக்கப்படுகிறது. மூன்று மாத காலத்துக்குள் இதனை, போதிய வளர்ச்சியற்ற 'ப்ரிமெச்சூர் பேபி'கள், நோஞ்சான் குஞ்சுகள் முதலியவற்றுக்கு அளித்து, அவர்களைக் காப்பாற்றுகிறார்கள். தாய்ப்பாலுக்கு இருக்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கு எந்த மருந்தும் ஈடாகாது என்பதால், நலிவுற்ற, தாய்ப்பால் கிடைக்காத, குழந்தைகளுக்கு, இந்த வங்கி ஒரு வரப்பிரசாதம்! முதலில் வெட்கப்பட்டும் பயந்தும் தயங்கிய பெண்கள், இப்போது மலர்ச்சியுடன் முன் வந்து சேமிப்புக்கு உதவுகிறார்களாம். "நீ, உன்னைப் பெத்தவளோட பாலைக் குடிச்சு வளர்ந்தவனாயிருந்தா...." என்பன போன்ற வசனங்களுக்கெல்லாம் இனி 'டாடா' சொல்லிவிட வேண்டியதுதான்!

லோலோ ஸ்பெஷல்!

'மேட்ரிமோனியல்' விளம்பரங்களுக்கே அவ்வளவாக 'ரெஸ்பான்ஸ்' இல்லாத காலத்தில், ஒரு 40 வயது 'டிவோர்ஸி' கொடுத்த விளம்பரத்துக்கு, எக்கச்சக்கமான 'நண்பி'களிடமிருந்து பதில்கள் வந்து குவிந்தன என்பது, மும்பைக்காரர்களைத் தனிமை எந்த அளவுக்கு ஆட்டுவிக்கிறது என்பதற்கு ஆணித்தரமான எடுத்துக்காட்டு! திருமணம், குடும்பம் என்ற பந்தங்களால் கட்டுண்டு கவலைப்பட விருப்பமில்லாதவர்களின் இனம் நாளுக்கு நாள் பெருக, தனியாக, ஜோடியின்றித் தங்கிவிட்டவர்களின் பிரச்னை பூதாகரமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. பொது இடங்களில் ஜோடிகளுக்கும் குடும்பத்தோடு வருபவர்களுக்கும் கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் இருக்கையில், ஒற்றையாக உள்ளவர்களுக்கு ஒன்றுமே இல்லாதது பெருங்குறையாக உணரப்படுகிறது' அதனால், நீனா ராஜன் பிள்ளை என்ற பிஸினஸ், உமன், "ஸிங்கிள்ஸ் ஒன்லி" என்ற புதுமையான பார்ட்டியை வைத்தார். திருமணமாகாதவர்கள், துணையிழந்தவர்கள், டிவோர்ஸிகள் என தனிப்பறவைகளெல்லாம் ஒன்று கூடி சந்தோஷச் சிறகடித்தன. தனிமையிலும் இனிமை காண முடியும் போலும்! ●

மும்பையிலிருந்து :
ஜெய்ஸ்ரீ ராஜ்

மும்பை மசாலா

சமையலறையில் ஒரு கனவு...

தமயந்தி

முத்து அன்றைக்கு ரொம்பவும் சந்தோஷமாகத் தான் வேலைக்கு வந்தாள். சில நாட்கள் அப்படி, சில நாட்கள் வேலைக்கு வருவதே அவளுக்குப் பிடிக்காது. அநேகமாகத் தோட்டம் பெருக்க வேண்டிய நாட்கள் அவளுக்கு வேலை செய்யப் பிடிக்காமல் போகிற நாட்கள். இன்று தோட்டம் பெருக்குகிற நாளில்லை. அதனால் சந்தோஷம் அவளை ஆக்ரமித்தது. தோட்டம் பெருக்குதல் என்று சுலபமாக எழுதி விடலாம். பதினைந்து செண்ட் நிலத்தின் சுற்றுப்புறம் எவ்வளவு பெரிதாக இருக்கும். ஒற்றை இலைகூட இல்லாமல் பெருக்க வேண்டும். அப்படிப் பெருக்குகிற நாளெல்லாம் கை பொத்துப் போகும். பாத்திரம் துலக்கும் போது முத்து "இஸ் இஸ்" என்று முனங்குவாள்.

"என்னடி முத்து இஸ் இஸ்னுட்டு பச்சமொளகா கடிச்ச மாதிரி?" பெரியம்மாள் முறைத்துக் கொண்டே கேட்பாள். செல்வி அக்கா இருக்கிறவரை அன்பாகப் பேசுவாள். பெரியம்மா மாதிரி அக்கா கிடையாது. "முத்து... சாப்டியா? முத்து காப்பி குடிச்சியா? என்று செல்வி அக்கா ரொம்பவும் அன்பாகத்தான் விசாரிப்பாள். அவளுக்கும் கல்யாணமாகிப் போனதிலிருந்து பெரியம்மாளின் சிடுசிடுக்கிற முகமும் சிரிப்பற்ற உதடுகளுமே பழக்கமாகிப் போனது.

ஆனால் இன்று ஏனோ பெரியம்மாவுக்குக்கூட முகத்தில் சிரிப்பு ஒட்டிக் கிடந்தது. முத்துவைப் பார்த்ததும் "வாவா" என்றாள் எப்போதும் போலில்லாமல்.

''முத்து... இன்னைக்கி செல்விக்கா வர்றா.''

இவளுக்கும் சந்தோஷமாக இருந்தது. செல்வி அக்காவைப் பார்க்கப் போகிறோம் என்கிற சந்தோஷம் ஒருபுறம் இருந்தாலும், விருந்தாட்கள் வந்தால் வீட்டில் நல்ல சாப்பாடு புழங்கும். இறைச்சி வாசமும் கறி மசால் வாசனையும் முத்துவுக்கு ரொம்பவும் பிடித்தவை. ஏனெனில், அது அவளுக்கு எப்போதாவது கிட்டுகிற விஷயங்கள். இறைச்சி என்பது அவளது வீட்டைப் பொறுத்தவரை கோயில் குடையோடுதான். ஆடு அடித்துச் சமைப்பார்கள். மீதிக் கறியைக் காய வைத்து, கொடியில் உலர்த்தி 'கொடிக்கறி' என்று டப்பாக்களில் அடைத்து வைத்து, வேண்டியவற்றைத் தேவையான பொழுதுகளில் கருவாட்டுத் துண்டுகளைப் போல சமைத்துச் சாப்பிடுவார்கள். மற்றபடி, இது போல வேலை பார்க்கும் வீடுகளில் கிடைப்பதுதான். பெரியம்மா வீட்டு வேலைக்கு அல்போன்ஸா கேட்டு வந்தபோதுகூட அம்மாவிடம் அவள் சாப்பாட்டைப் பற்றித்தான் பேசினாள்.

''என்னக்கா யோசிக்கற. பத்து ரூவா அரிசியெல்லாம் உம்மவ சாப்பிட வேணாம். பெரிம்மா வீட்ல பொன்னிச் சோறாம், கிலோ பதினெட்டு ரூவா.''

இவளுக்கு உடனே ஸ்கூலை விட்டு விட்டு, வீட்டு வேலைக்குப் போக ஆசையாயிற்று. எத்தனை நாள் பருப்பில்லாத சாம்பாரைச் சாப்பிடுவது? அம்மாவுக்கும் அந்த யோசனை இருந்திருக்க வேண்டும். அன்றைக்கு ராத்திரிக்கான துவையலை அரைத்துக்கொண்டே அம்மியின் சத்தங்கள் நடுவே ஆரம்பித்தாள்.

''அல்போன்ஸா சொன்ன இடத்துக்குப் போறியா?''

''சரிம்மா.''

''சோறு கண்டு மயங்காத சொல்லுடி முத்து. படிக்கணும்னா படி.''


அவள் படிக்கணும்னா படி என்றது சும்மாவாச்சும் ஒப்புக்குத்தான் என்று துல்லியமாகத் தெரிந்தது. அல்போன்ஸா மாசத்துக்கு நூற்றைம்பது ரூபாய் என்று பேசியிருந்தாள். அது ஒரு அரைமாதச் சோற்றுப் பாட்டுக்குப் போதும் என்று இவளுக்கும் தெரியும். மறுநாளே பாவாடை சட்டைப் போட்டு எண்ணெய் வைத்துச் சீவி முத்துவை அல்போன்ஸா கொண்டு வந்து விட்டாள். பார்த்ததுமே செல்வி அக்காவை முத்துவுக்குப் பெரியம்மாளைக் காட்டிலும் பிடித்துப் போயிற்று. அதற்குக் காரணம் செல்வி அக்காவின் சிரிப்புத்தான். அடிக்கடி பல் தெரியாமல் உதடுகள் விரிந்து செல்வி அக்கா சிரிப்பாள்.

"என்ன யோசனை முத்து? பாத்திரத்தை அள்ளிட்டுப் போய் விளக்கு. அக்கா வர்றதுக்குள்ள முடியட்டும்."

"அக்கா மாப்ளை வரலையாம்மா?"

"வர்றார். அதான பொண்ணே பதட்டம்!" என்று பெரியம்மா கையைப் பதறுவதுபோல ஆட்டிக் காட்டினாள். இவளுக்குச் செல்வி அக்காவின் சிரிப்பு மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது. "அம்மா சொல்றாப்ல முத்து நடந்துக்கணும். சரியா?" என்று ஊருக்குப் போகும்போது பத்து ரூபாயைக் கையில் செருகி விட்டுச் சிரித்தாள். அந்த நிமிஷம் அக்காவுக்காவது பெரியம்மாளிடம் சமாதானமாய்ப் போய் விட வேண்டும் என்று இவள் நினைத்துக் கொண்டாள்.

பாத்திரங்களை விளக்கி, பக்கெட்டில் பொறுக்கிப் போட்டு விட்டு உள்ளே வரும் போது அங்கனத்துக்கும் பக்கத்தில் பெரியம்மா இவளுக்குக் காப்பி வைத்திருந்தாள். இவளுக்கு வயிறு ரொம்பவும் பசித்தது. நேற்று இரவு நல்ல சாப்பாடில்லை. அப்பா குடிக்கக் காசெடுத்துவிட்டுப் போய் விட்டது. இருக்கிற நொய்யில் அம்மா கஞ்சி கிண்டினாள். அது கொஞ்சமே இருந்த காரணத்தால், தங்கச்சிக்குப் பசிக்கும் என்று ஒரு வாய் உறிஞ்சி விட்டு, "போதும்மா! பெரியம்மா இன்னைக்கு பாசிப்பயிறு அவிச்சிது. அது கும்னு இருக்கு" என்று தண்ணீரை மொண்டு மொண்டு குடித்து விட்டுப் படுத்துக் கொண்டாள். இப்



''சட்டசபையில முதல் வரைப் பார்த்து நம்ம தலைவர் கேட்ட கேள்வியால எல்லாரும் சிரிச்சுட்டாங்களாமே?... அப்படி என்னதான் கேட்டாரு?''

''கவர்னர் எந்தத் தொகுதியில போட்டியிட்டு ஜெயிச்சாங்கன்னு கேட்டார்!''

— எஸ்.எஸ். பூங்கதிர்



போது நல்ல பசியாயிருந்தது. வயிறு பாத்திரம் துலக்கும்போதே பூதம் போல 'ஹோஹோ' என்று சத்தமிட்டது.

காப்பியைக் குடித்துவிட்டு ஷெல்ஃபில் பாத்திரங்களை அடுக்கலாம் என்று முத்து நினைத்தாள். காப்பித் தம்ளரைக் கையிலெடுத்து பழக்கதோஷமாய் இரண்டுமுன்ற தம்ளரைச் சுழற்றி அலசி, சர்ரென்று உறிஞ்சினாள். நினைத்த மாதிரி அது சூடாகவும் இல்லை. ருசியாகவும் இல்லை. மிச்சக் காப்பியில் நீருற்றிய நிஜுசில் இருந்தது. எனினும், பசி தாங்காமல் அதை மூச்சு விடாமல் குடித்து, அலசி தம்ளரைக் கவிழ்த்தினாள். வாசல் பக்கம் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது. இவள் பாத்திரங்களை அவசரமாக ஷெல்ஃபில் கவுத்த, அது டம்டம்மென்று சரிந்தது. நல்லவேளை, பெரியம்மாள் அக்காவை வரவேற்க முன் வாசலுக்குப் போயிருக்க வேண்டும். மறுபடியும், ஒவ்வொன்றாக விழுந்தப் பாத்திரங்களையெல்லாம் பொறுக்க வேண்டியிருந்தது.

அதற்குள் செல்வி அக்காவின் சத்தம் ஹாலில் கேட்டது. அவளது மாப்பிள்ளையின் சத்தமும் அதைத் தொடர்ந்து அவர்கள் சந்தோஷமாகச் சிரிக்கும் சத்தமும் கேட்டது. இவள் சமையலறை வாசல் வழியாக எட்டிப் பார்த்தாள். செல்வி அக்கா கொஞ்சம் பூசினாற் போலிருந்தாள். முகம்கூட சிவந்திருந்தது. இவள் வெளியே போய் புழக்கடையில் துணிகளை ஊற வைத்தாள். பிறகு ''அம்மா' என்று கதவோரம் நின்று கூப்பிட்டாள்.

''என்ன முத்து, எப்டிருக்கே?'' என்றாள் செல்வி அக்கா. அவள் மாப்பிள்ளை ஏதோ வாசித்துக் கொண்டிருந்தார்.

''நல்லாருக்கேன்கா. நீங்க நல்லாருக்கீங்களா?''

''ம். நீங்க என்ன குடிக்கிங்க?'' என்று செல்வி அக்கா அவள் மாப்பிள்ளையிடம் சோம்பல் முறித்தபடி கேட்டாள்.

''நீ தேங்காய் திருவு முத்து. சட்னி அரைக்கணும்'' என்று பெரியம்மா உத்தரவிட்டாள். பெரியய்யா குளிக்கப் போனார். இவள் அவசரமாகப் போய் பாத்ரூம் கதவை அவருக்காகத் திறந்து வைத்தாள். தேங்காய் துருவ உட்காரும்போது செல்வி அக்காவிடம் பேச ஆசையாயிருந்தது. முன்பெல்லாம் இப்படித் தேங்காய் துருவினால் செல்வி அக்கா சிரித்தபடியே பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கதை பேசுவாள். ஏதாவது ஒரு கதை, சினிமாக் கதை, வாசித்த கதை, வாசிக்காத கதை, ஏதாவது ஒன்று. பேன் பார்த்து விடும்போதும் அப்படித்தான். அதை நினைக்கும்போதே முத்துவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

மிக்சியில் தேங்காய்த் துருவலைப் போடும்போது செல்வி அக்கா சமையலறைக்குள் வந்து பெரியம்மாளை ஒட்டிய மாதிரி நின்றாள்.

''பாட்டிக்கு எப்டியிருக்கு?''

''இருக்கு. நம்ம தலைல எழுதியதை யார் அழிக்க முடியும்?''

பெரியய்யாவின் அம்மாளைத்தான் சொன்னாள். கையும் காலும் இழுத்துக் கொண்ட நிலையில் உள்ரேழியில் படுக்கை. சதா மூத்திர நாற்றம் வீசும் போர்வை. அதைக்கூட இவள்தான் அலச வேண்டும். அதைச் கண்டு விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவே பிடித்துக் கொண்டு, உடலிலிருந்து ஒரு சாண் தூரத்தில் தள்ளி வைத்துக் கொண்டுதான் பெரியம்மாளே துவைக்க எடுத்துப் போடுவாள்.

''அம்மா!'' என்று மறுபடியும் கூப்பிட்டாள் செல்வி அக்கா.

''என்னடி?''

''நாற்பத்தஞ்சு நாளாச்சு'' என்று செல்வி அக்கா சிரித்தபடி சொன்னாள். பெரியம்மாள் ரொம்பவும் சந்தோஷத்தோடு ''அடிப் பொண்ணே'' என்று செல்வி அக்காவின்

கைகளைப் பிடித்துக் கொண்டான்.

பெரியய்யா குளித்து விட்டு வருவதற்குள் காலைச் சாப்பாடு தயாராக இருந்தது. எல்லோரும் பேசிக் கொண்டே சிரித்தபடி சாப்பிட்டார்கள். பெரியய்யாவின் அம்மாவுக்கென்று தனியாகக் கஞ்சி கிண்டினாள் பெரியம்மாள். பிறகு இவனைப் பார்த்து "முத்து! இதைக் கொஞ்சம் கிண்டு" என்று சொல்லிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தாள். செல்வி அக்காவின் மாப்பிள்ளை இட்லியின் மிருதுத் தன்மை குறித்துப் புகழ்ந்து கொண்டிருந்தான். பெரியம்மாள் ரொம்பவும் வெட்கப்பட்டு சிரித்துக் கொண்டிருந்தாள். கஞ்சியைக் கிண்டிக் கொண்டே முத்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். ஏனெனில், இட்லிக்கு ஊறப் போட்டுக் கழுவினது முதல் அரைத்து உப்பு சேர்த்துப் பிணைந்ததுவரை இவன் தான்.

கஞ்சியை மூடி வைத்து விட்டு துவைக்கப் போனான். செல்வி அக்கா நாலு ஷர்ட், ஆறு பேண்ட், இரண்டு புடைவைகளைத் துவைக்க வீசி விட்டுப் போனாள். இவனுக்கு எல்லாவற்றையும் துவைத்துக் காயப் போடவே ஒரு மணி நேரமாயிற்று. இப்போது அவனுக்கு அங்கணத்துக்குப் பக்கத்தில் மூன்று இட்லிகளும் சட்னியும் ஒரு தட்டில் இருந்தன. இவன் பசியோடு அவற்றை மூன்றே நிமிஷங்களில் விழுங்கினான். இரண்டு தம்ளர் தண்ணீரைக் குடித்து விட்டதும் ஏப்பம் வந்தது. புழக்கடைக்கு வந்து சத்தமாகவும் சுதந்திரமாகவும் ஓவென்று ஏப்பம் விட்டான். அப்படியே உட்கார வேண்டும் போலிருந்தது.

வீடு பெருக்கப் போனபோது செல்வி அக்கா உள்ளே பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் "பெருக்கப் போறியா? ஃபேனை அணைச்சுக்க" என்று சொல்லி விட்டு தொங்கப் போட்டிருந்த கால்களை, இவன் பெருக்கும்வண்ணம் கட்டிலின் மீது தூக்கி வைத்துச் சப்பணமிட்டுக் கொண்டாள். பெரியய்யா இறைச்சி வாங்கி வந்து "முத்து! அம்மாவுக்கு வெட்டிக் கொடுத்திடு" என்றார்.


"சரிய்யா."

இன்றைக்கு வீட்டைத் துடைக்கக் கஷ்டமாகப் போய்விட்டது. செல்வி அக்காவின் மாப்பிள்ளை குறுக்கே நடக்க நடக்க, திரும்பத் திரும்ப கால் தடங்களைத் துடைக்க வேண்டியிருந்தது. ஆனாலும் மத்தியானம் பிரியாணி போடலாம் என்கிற பேச்சு கொஞ்சம் உற்சாகத்தைத் தந்தது. பிரியாணி அவனுக்குப் பிடித்த உணவு. அதன் வாசனை மீது இவனுக்குப் பிரியங்கள் உண்டு. அப்பா குடித்து விட்டுப் பேசும் கெட்ட வார்த்தைகளின் மத்தியில் பிரியாணி வாசமும் வந்ததுண்டு. ஒரே ஒருமுறை இவனும் எங்கோ சாப்பிட்டிருக்கிறான். இன்றும் அது கிடைக்கப் போகிற அந்த உற்சாகத்திலேயே விரைவாக வீட்டைத் துடைத்து முடித்தான். தோட்டத்தைப் பெருக்கச் சொன்னால்கூட மத்தியானம் பிரியாணி சாப்பிடப் போகும் உற்சாகத்தில் கைகளை பொத்துக் கொள்ளாமல்,



ஒரு இலைகூட விடாமல் பெருக்கி விட முடியுமென்று நினைத்தான்.

பெரியம்மா சொல்லும் முன்னமே இறைச்சியை வெட்டினான். அதற்குள் பெரியம்மா அரைக்க வேண்டிய கறி மசாலை எடுத்து வைத்திருந்தாள். கறி மசாலையைப் பெரியம்மாளுக்கு அம்மியில்தான் அரைக்க வேண்டும். அப்போதுதான் மையாக இருக்குமாம். முத்து அம்மியை அவசரமாகக் கழுவி கறி மசாலை வைத்தரைத்தான். கசகசா அரைபட நேரமாயிற்று. இரண்டு தோள் பட்டைகளிலும் வலி ஒரு முள் போல கிளம்பிற்று. நாலைந்து தடவை



மாம்பழப் பிரியர்களே மனசைத் தேற்றிக் கொள்ளுங்கள் !

இந்த வருடம் மாம்பழ ர(ரு)சிகர்களுக்குப் பயங்கர ஏமாற்றம் காத்திருக்கிறது. இந்த *சீசனில்* மாம்பழம் வெகு அபூர்வமாகத்தான் கிடைக்கப் போகிறது.

''இப்போதைக்கு பெங்களூரா ரகம் ஒன்று தான் கொஞ்சமாவது காய்க்கும் போலிருக்கிறது. இமாம் பஸந்து, பங்கனபள்ளி ஒன்றுமே இல்லை! காரணம், எல்லா இடங்களிலும் சுற்றுச் சூழல் கேடு காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் பெய்த அதீத மழையும், ஆந்திரப் பகுதிகளில் ஏற்பட்ட வறட்சியும்கூட இந்த வருட மாம்பழ *சீசனுக்குப்* பாதகமாக இருந்திருக்கிறது. பம்பாயில் அல்ஃபான்ஸோ மாம்பழம் டஜன் ஆயிரம் ரூபாய் என்று கேள்விப்பட்டேன்!'' என்கிறார் சமீபத்தில் பெங்களூர், கர்நூல், அவுரங்காபாத் வரை சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த விவசாய நிபுணர் எஸ். எஸ். நாகராஜன்.

— நம்பி

கைகளை நீட்டியும் மடக்கியும் விட்டுக் கொண்டாள் முத்து.

அதற்குப் பிறகும் வேலை ஓய்ந்த பாடில்லை. வெங்காயம் வெட்டி, தேங்காய்ப் பாலெடுத்து, தழை ஆய்ந்து... என்று சமையல் வேலைகள். திடுமென இன்னொரு ஆட்டோவும் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. 'யாரு?' என்றபடி பெரியம்மாள் வெளியே போனாள். பிறகு 'வாங்க வாங்க' என்றும், ''ஏங்க, சம்பந்தியம்மால்லாம் வந்திருக்காங்க'' என்றும் சத்தம் கொடுத்தாள். செல்வி அக்காவும் மாப்பிள்ளையும் பாட்டியின் அறையை விட்டு வெளியே வருகிற சத்தமும் கேட்டது. கொஞ்ச நேரத்துக்கு ஹால் முழுக்க இரைச்சலாய் இருந்தது. குக்கரிலிருந்து ஆவி வேக வேகமாக வர, முத்து பெரியம்மாவை சன்னமாகக் கூப்பிட்டாள்.

பெரியம்மா 'வெயிட்' போடும் நேரம் பெரியய்யாவும் உள்ளே வந்தார்.

''என்ன செய்யப் போறே கமலி?'' என்றார்.

பெரியம்மா பதிலுக்கு உதட்டைப் பிதுக்கினாள். ''பாத்துக்கலாம்.''

கூட கொஞ்சம் பச்சடி செய்வதற்கு வெங்காயம் வெட்ட வேண்டியிருந்தது. கொஞ்சம் முட்டைகளையும் அவித்துக் கொண்டாள் பெரியம்மா. எல்லோரும் சாப்பாட்டு மேஜையில் உட்கார்ந்து சிரித்தபடியே சாப்பிட்டார்கள். செல்வி அக்கா முன்புபோலப் பழகாதது வருத்தமாக இருந்தாலும் அவர்களின் சிரிப்பும் சந்தோஷமும் முத்துவைத் தொற்றிக் கொண்டது.

''ஏய் முத்து இங்க வா'' என்று பெரியய்யா கூப்பிட்டார்.

''ஐயா.''

பர்ஸிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி, ''நாடார் கடைல போய் 'லைம்' வாங்கிட்டு வா. மருமவனுக்கு அது பிழிஞ்சாத்தான் பிரியாணி இறங்கும்'' என்று சிரித்தார். மற்றெல்லோரும் சிரித்தார்கள்.

தெருவில் இறங்கியதும் கால் சுட்டது. இந்த மாச சம்பளத்தில் அம்மாவிடம் ஒரு செருப்பு கேட்க வேண்டும். இன்று எப்படியும் தங்கச்சிக்குக் கொஞ்சம் பிரியாணி கொண்டு போக வேண்டும். அது சரி எலுமிச்சை பிழிந்த பிரியாணி எப்படியிருக்கும்? யோசனையில் ஆழ்ந்தவாறே கடைக்குப் போய் எலுமிச்சம் பழம் வாங்கி வந்து கொடுத்தாள்.

''ஏய் முத்து, சாப்பாடு வெச்சிருக்கேன். சாப்பிடு'' என்றாள் பெரியம்மா.

அங்கணத்தின் பக்கத்தில் அந்தத் தூக்கு இருந்தது. பாதியைச் சாப்பிட்டு விட்டு மீதியை வீட்டுக்குக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே திறந்தாள் –

நீருஞ் சோறும் நேற்றைய சுரைக்காய்க் கூட்டும் இருந்தது. ⬤



முப்பத்திரண்டாம் அத்தியாயம்

பரிசோதனை



கல்கி கலெக்ஷன்

சின்னப் பழுவேட்டரையரைக் கண்டதும் வந்தியத்தேவன் சண்டையை நிறுத்திவிட்டு அவரை நோக்கி நடந்தான். காவலர்கள் எழுந்து ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களை அவன் சிறிதும் இலட்சியம் செய்யாமல் நாலு அடி முன்னால் நடந்து வந்து, "தளபதி! நல்ல சமயத்தில் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள். இந்தப் பக்காத் திருடர்கள் என்னுடைய உடைமைகளைத் திருடிக் கொண்டதுமல்லாமல், என்னையும் கொல்லப் பார்த்தார்கள்! விருந்தாளியை இப்படித்தானா நடத்துவது? இதுவா தஞ்சாவூர் சம்பிரதாயம்? நான் தங்களுக்கு மட்டும் விருந்தாளியல்ல, சக்கரவர்த்திக்கும் விருந்தாளி; சக்கரவர்த்தினி சொன்னதைத்தான் தாங்களும் கேட்டீர்களே! பட்டத்து இளவரசரிடமிருந்து ஓலை கொண்டுவந்த தூதன். அப்படிப்பட்ட என்னை இந்தப் பாடுபடுத்துகிறவர்கள் மற்றவர்களை என்ன செய்து விடமாட்டார்கள்! இப்படிப்பட்ட திருடர்களைத் தங்கள் பணி ஆட்களாக வைத்துக் கொண்டிருப்பது பற்றி ஆச்சரியப்படுகிறேன். எங்கள் தொண்டை மண்டலத்தில் இப்படிப்பட்ட திருடர்களை உடனே கழுவில் ஏற்றிவிட்டு மறு காரியம் பார்ப்போம்!" என்று சரமாரியாய்ப் பொழிந்தான்.

மூன்று வீரர்களை ஏக காலத்தில் எதிர்த்துப் புரட்டிக் கீழே தள்ளிய வாலிபனுடைய வீரச் செயலைப் பற்றிய

அமரர் கல்கி

வியப்பு இன்னும் பழுவேட்டரையரின் மனத்தை விட்டகலவில்லை. இத்தகைய வீரனை நாம் நமது காவற் படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவருக்கு அதிகமாயிற்று. எனவே, அவர் சாந்தமான குரலில், "பொறு! தம்பி! பொறு! அப்படியெல்லாம் இவர்கள் செய்திருப்பார்கள் என்று தோன்றவில்லை! இவர்களை விசாரித்துப் பார்க்கிறேன்!" என்றார்.

"நான் கோருவதும் அதுதான்! இவர்களை விசாரியுங்கள்; விசாரித்து நீதி வழங்குங்கள்! என்னுடைய உடையும் உடைமையும் என்னிடம் திருப்பி வருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்றான் வல்லவரையன்.

"அடே! அந்தப் பிள்ளையை விட்டு விட்டு இப்படி வாருங்கள்! நான் சொன்னது என்ன? நீங்கள் செய்தது என்ன? இவன்மீது ஏன் கை வைத்தீர்கள்!" என்று கோபமாகக் கேட்டார் கோட்டைத் தளபதி!

"எஜமானே! தாங்கள் சொன்னது சொன்னபடியே செய்தோம். இவரை எண்ணெய் முழுக்காட்டிப் புதிய ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிவித்தோம். அறுசுவை உண்டி அளித்தோம். சித்திர மண்டபத்துக்கும் அழைத்து வந்தோம்! இவர் சிறிது நேரம் சித்திர மண்டபத்தில் உள்ள சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று நினைத்துக் கொண்டு இவருடைய பழைய உடைகளைக் கேட்டார். உடனே எங்களைத் தாக்கவும் ஆரம்பித்தார்!" என்றான் அவ்வீரர்களில் ஒருவன்.

"ஒரு சிறு பிள்ளையிடமா மூன்று தடியர்கள் அடிபட்டு விழுந்தீர்கள்?" என்று கூறி இரத்தக் கனல் வீச விழித்துப் பார்த்தார்.

"எஜமான்! அரண்மனை விருந்தாளியாயிற்றே என்று யோசித்தோம். இப்போது சற்று அநுமதி கொடுங்கள்; இவனை உடனே வேலை தீர்த்துவிடுகிறோம்.

"போதும் உங்கள் வீரப் பிரதாபம்! நிறுத்துங்கள்! தம்பி!... நீ என்ன சொல்லுகிறாய்?"

"இவர்களுக்கு அநுமதி கொடுங்கள் என்றுதான் சொல்கிறேன். எனக்கும் அநுமதி கொடுங்கள். சோழ குலத்துப் பகைவர்களோடு போராடிக் கொஞ்சம் நாள் ஆயிற்று. தோள்கள் தினவெடுக்கின்றன. அரண்மனை விருந்தாளிகளை எப்படி நடத்த வேண்டுமென்று இவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்றேன்!" என்றான் நமது வீரன்.

சின்னப் பழுவேட்டரையர் புன்னகை புரிந்து, "தம்பி! உன் தோள் தினவைத் தீர்த்துக் கொள்வதைச் சோழப் பகைவர்களோடேயே வைத்துக் கொள்! சக்கரவர்த்தி நோய்ப்பட்டிருக்கும் நிலையில் தஞ்சைக் கோட்டைக்குள் இவ்விதச் சண்டை, சந்தடி ஒன்றும் உதவாது என்று கட்டளை!" என்று சொன்னார்.

"அப்படியானால் என்னுடைய உடைகளையும் உடைமைகளையும் உடனே கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுங்கள்!"

"எங்கேடா அவை?"

"எஜமான்! தங்கள் கட்டளைப்படி பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்."

"தளபதி! இவர்கள் எப்படிப் புளுகுகிறார்கள், பாருங்கள்! சற்றுமுன் உடைகளை வெளுக்கப் போட்டிருப்பதாய்ச் சொன்னார்கள். இப்போது தாங்கள் 'பத்திரப்படுத்தி' வைக்கச் சொன்னதாகக் கூறுகிறார்கள். சற்றுப் போனால் தங்களுக்கே திருட்டுப் பட்டம்கூடக் கட்டிவிடுவார்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

தளபதி காவலர்களைப் பார்த்து, "முட்டாள்களா! இந்தப் பிள்ளைக்கு புது ஆடைகள் கொடுக்கும்படி மட்டுந்தானே சொன்னேன்? பழையவைகளைப் பற்றி நான் ஒன்றுமே சொல்லவில்லையே; இந்த மூடர்கள் என்னவோ உளறுகிறார்கள், தம்பி! போனால் போகட்டும், பழைய உடையைப் பற்றி எதற்காக இவ்வளவு கவலைப்படுகிறாய்? அதற்குள் ஏதாவது உயர்ந்த பொருள் வைத்திருந்தாயோ?" என்று கேட்டார்.

"ஆம்; வழிநடைச் செலவுக்காகப்

பொற்காசுகள் வைத்திருந்தேன்..." என்று வந்தியத்தேவன் சொல்வதற்குள், "அதற்காக நீ கவலைப்பட வேண்டாம். உனக்கு வழிச் செலவுக்கு எவ்வளவு பொன் வேண்டுமோ அவ்வளவு தருகிறேன்!'' என்றார் பழுவேட்டரையர்.

''தளபதி! நான் இளவரசர் கரிகாலருடைய தூதன்.



பிறரிடம் கை நீட்டிப் பணம் பெறும் வழக்கம் என்னிடம் கிடையாது...''

"அப்படியானால், உன்னுடைய உடைகளையும் அதற்குள்ளிருந்த பொற்காசுகளையும் திருப்பி உன்னிடம் சேர்ப்பிக்கச் செய்கிறேன். கவலைப் படாதே! உன் உடையில் வேறு பொருள் ஒன்றும் இல்லையல்லவா?''

வல்லவரையன் ஒரு கணம் யோசித்தான். அந்தத் தயக்கத்தைச் சின்னப் பழுவேட்டரையரும் பார்த்துக் கொண்டார்.

"வேறொரு முக்கியமான பொருளும் என் அரைச்சுற்று ஆடையில் இருக்கிறது. அதை உங்கள் ஆட்கள் தொட்டிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். தொட்டிருந்தால் அவர்கள் தொலைந்தார்கள்...''

''ஆகா! உனக்கு எத்தனை கோபம் வருகிறது? எங்கே, யாரிடத்தில் பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டே பேசுகிறாய். சிறு பிள்ளையாயிற்றே என்று மன்னித்து விடுகிறேன். அப்படிப்பட்ட பொருள் என்ன?''

''தளபதி, அதைச் சொல்வதற்கு இல்லை. அது அந்தரங்க விஷயம்!''

''தஞ்சைக் கோட்டைக்குள் எனக்குத் தெரியாத அந்தரங்கம் ஒன்றும் இருக்க முடியாது!''

"இளவரசர் கரிகாலர் என்னிடம் ஒப்புவித்த அந்தரங்க விஷயம்.''

''இளவரசர் வடதிசையின் மாதண்ட நாயகர். அவருடைய அதிகாரம் பாலாற்றுக்கு வடக்கே செல்லும். இங்கே சக்கரவர்த்தியின் அதிகாரந்தான் செல்லும்.''

"தளபதி! புலிக் கொடி பறக்கும் இடமெல்லாம் சக்கரவர்த்தியின் அதிகாரந்தான். அதில் என்ன சந்தேகம்?''

"ஆகையினால்தான், இந்தக் கோட்டைக்குள்ளே எனக்குத் தெரியாத அந்தரங்கம் எதுவும் இருக்க முடியாது என்று சொல்கிறேன். சக்கரவர்த்தியின் க்ஷேமத்தைக் கருதித்தான்!...''

"தளபதி! சக்கரவர்த்தியைக் கண்ணுங்

கருத்துமாய்க் காப்பாற்றி வருவதற்காக தங்களுக்கும் பெரிய பழுவேட்டரையருக்கும் சோழ சாம்ராஜ்யம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது. இன்றைக்குச் சக்கரவர்த்தி தங்களைப் பாராட்டியதும் என் காதில் விழுந்தது. தங்களுக்குப் பயந்து கொண்டு தான் யமன் தஞ்சைக் கோட்டைக்குள் புகுந்து வராமல் தயங்கிக் கொண்டிருக்கிறான் என்று சக்கரவர்த்தி சொன்னாரே? அது எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தை!"

"ஆம், தம்பி! பழையாறையிலிருந்து சக்கரவர்த்தியை நாங்கள் இங்கே அழைத்து வந்து கட்டுக் காவலுக்குள் வைத்திராவிட்டால், இத்தனை நாளும் என்ன விபரீதம் நடந்திருக்குமோ, தெரியாது. பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் நோக்கம் நிறைவேறியிருந்தாலும் இருக்கலாம்."

"ஆ! தாங்கள்கூட அவ்விதமே சொல்கிறீர்களே! அப்படியானால் நான் கேள்விப்பட்டது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்."

"என்ன கேள்விப்பட்டாய்?"

"சக்கரவர்த்திக்கு விரோதமாக ஒரு சதி நடக்கிறதென்றும், சக்கரவர்த்தியின் திருக்குமாரர்களுக்கு விரோதமாக இன்னொரு சதி நடக்கிறதென்றும் கேள்விப்பட்டேன்."

சின்னப் பழுவேட்டரையர் தம் வஜ்ரப் பற்களினால் உதட்டைக் கடித்துக் கொண்டார். இந்தச் சிறு அறியாப் பையனுடன் பேச்சுக் கொடுத்ததில் தமக்கே இத்தனை நேரமும் தோல்வி என்பதை உணர்ந்தார். ஏறக்குறைய அவனுடைய குற்றச்சாட்டுக்களுக்குத் தாம் பதில் சொல்லிச் சமாளிக்கும் நிலைமை வந்து விட்டது! எனவே, பேச்சை அத்துடன் வெட்டிவிட விரும்பினார்.

"உனக்கென்ன அதை பற்றிக் கவலை? எல்லாச் சதிகளையும் உடைத்துச் சோழ குலத்தைப் பாதுகாக்க நாங்கள் இருக்கிறோம். உன்னுடைய கோரிக்கையைச் சொல்லு. உன் பழைய ஆடைகள் உனக்கு வேண்டும்; அவ்வளவுதானே!" என்றார்.

"என் பழைய ஆடைகளும் வேண்டும்; அவற்றுக்குள் இருந்த பொருள்களும் வேண்டும்."

"என்ன பொருள்கள் என்று இன்னமும் நீ சொல்லவில்லையே!"

"சொல்லத்தான் வேண்டுமானால் சொல்லுகிறேன். அதன் பொறுப்பு தங்களைச் சார்ந்தது. இளவரசர் சக்கரவர்த்திக்குக் கொடுத்திருந்த ஓலையைத் தவிர இன்னொரு ஓலையும் என்னிடம் கொடுத்திருந்தார்...".

"இன்னொரு ஓலையா! யாருக்கு? நீ சொல்லவே இல்லையே!"

"அந்தரங்கமானபடியால் சொல்லவில்லை; நீங்கள் இப்போது வற்புறுத்துகிறபடியால் சொல்லுகிறேன். பழையாறையிலுள்ள இளையபிராட்டி குந்தவை தேவிக்கு இளவரசர் ஓலை ஒன்று கொடுத்தார்!..."

"ஓஹோ! அப்படியானால், நாளைக்குச் சக்கரவர்த்தி கொடுக்கும் திருமுகத்தை நீ உடனே எடுத்துக் கொண்டு காஞ்சிக்குப் போக முடியாது. இளைய பிராட்டிக்கு இளவரசர் ஓலை அனுப்பும்படி இப்போது என்ன அவசரம் நேர்ந்ததோ?"

"தளபதி! நான் பிறருக்கு எழுதப்படும் ஓலையைப் படிப்பதில்லை. சக்கரவர்த்தியின் ஓலையைப் படித்ததுபோல் இதையும் நீங்கள் படிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் கிடையாது. அந்தப் பொறுப்பு தங்களுடையது. என் உடையிலிருந்த பொன்னும் ஓலையும் களவு போகாமல் என்னிடம் திரும்பி வந்தால் போதும்."


"அதைப் பற்றிப் பயம் வேண்டாம். நானே பார்த்து எடுத்து வருகிறேன்" என்று சின்னப் பழுவேட்டரையர் நடந்தார். அவர் பின்னோடு வந்தியத்தேவனும் தொடர்ந்தான். அதையறிந்த கோட்டைத் தளபதி கண்களினால் சமிக்ஞை செய்யவே ஐந்தாறு வேல் பிடித்த வீரர்கள் வந்து வாசற்படியண்டை குறுக்கே நின்றார்கள். அவர்களுடன் சண்டை பிடிப்பதில் அனுகூலம் ஒன்றுமில்லையென்று கருதி வந்தியத்தேவன்

அங்கேயே நின்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் சின்னப் பழுவேட்டரையர் திரும்பி வந்தார். அவருக்குப் பின்னால் ஒருவன் ஒரு தட்டில் சீர் வரிசை ஏந்திக் கொண்டு வருவது போல் வந்தியத்தேவனுடைய பழைய ஆடைகளை எடுத்து வந்தான்.

"தம்பி! இதோ உன் ஆடைகள், பத்திரமாயிருக்கின்றன. நன்றாகச் சோதனை செய்து பார்த்துக் கொள்!" என்றார் கோட்டைத் தளபதி.

அவ்விதமே வந்தியத்தேவன் சோதனை செய்து பார்த்தான். அரைச் சற்றுச் சுருளில் அவன் வைத்திருந்ததைக் காட்டிலும் அதிகமாகப் பொற்காசுகள் இருந்தன. குந்தவை தேவியிடம் சேர்ப்பிக்க வேண்டிய ஓலையும் இருந்தது. அதிகப் பொற்காசுகள் எப்படி வந்தன? முதலில் அவன் தேடிப் பார்த்தபோது இல்லாத ஓலை இப்போது எப்படி வந்தது? சின்னப் பழுவேட்டரையரிடம் அது அகப்பட்டிருக்க வேண்டும். அதைப் பார்த்துவிட்டு இப்போது



திரும்பி வந்த பிறகு அவர் அந்த ஓலையைத் திரும்பச் செருகியிருக்க வேண்டும்! எதற்காக இப்படிச் செய்திருக்கிறார்? பொற்காசுகள் எதற்காக அதிகம் வைத்திருக்கிறார்? பொல்லாத மனிதர் இவர்! இன்னும் எப்படியெல்லாம் தன்னைச் சோதிக்கப் போகிறாரோ, தெரியாது! இவரிடம் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். ஏமாந்து போகக் கூடாது!

"எல்லாம் சரியாயிருக்கிறதா, தம்பி! நீ கொண்டு வந்த பொன், பொருள் எல்லாம்?" என்று சின்னப் பழுவேட்டரையர் கேட்டார்.

"இதோ பார்த்துச் சொல்கிறேன்" என்று கூறி வந்தியத்தேவன் பொற்காசுகளை எண்ணினான். அதிகப்படி காசுகளை எடுத்துத் தனியாக பழுவேட்டரையர் முன்பு வைத்துவிட்டு, "தளபதி! வாணர் குலத்தில் பிறந்தவன் நான்; ஆதித்த கரிகாலரின் தூதன்; பிறர் பொருளுக்கு ஆசைப்படுவதில்லை!" என்றான்.

"உன்னுடைய நேர்மையை மிக மெச்சுகிறேன். ஆயினும் உன்னுடைய வழிச் செலவுக்கு இதை நீ வைத்துக் கொள்ளலாம்! எப்போது புறப்பட விரும்புகிறாய்? இன்றைக்கே புறப்படுகிறாயா? அல்லது இன்றிரவு தங்கி இளைப்பாறிவிட்டு, பெரியவரையும் பார்த்துவிட்டுப் போகிறாயா?" என்று கேட்டார் தளபதி.

"அவசியம் இன்றிரவு இங்கே தங்கிப் பெரிய பழுவேட்டரையரையும் தரிசித்துவிட்டுத்தான் போக எண்ணியிருக்கிறேன். ஆனால் உங்கள் ஆட்களிடம் மட்டும் கொஞ்சம் சொல்லி வையுங்கள். என் பொருள்களில் கை வைக்க வேண்டாம் என்று!"– இவ்விதம் சொல்லிக் கொண்டே அதிகப்படியாயிருந்த பொற்காசுகளையும் வந்தியத்தேவன் எடுத்துத் துணிச்சுருளில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

"மிக்க சந்தோஷம். உனக்கு இங்கே எந்தவிதமான இடைஞ்சல்களும் இனிமேல் இராது. உனக்கு என்ன வேண்டுமோ, தாராளமாய்க் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்."

"தளபதி! இந்தத் தஞ்சை நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாயிருக்கிறது. பார்க்கலாம் அல்லவா?"

"தாராளமாகப் பார்க்கலாம். இதோ இவர்கள் இருவரும் உன்னோடு வந்து கோட்டைக்குள் எல்லா இடங்களையும் காட்டுவார்கள். கோட்டைக்கு வெளியில் மட்டும் போக வேண்டாம். சாயங்காலம் கோட்டைக் கதவுகளைச் சாத்திவிடுவார்கள்! வெளியில் போய்விட்டால் திரும்பி இரவு வரமுடியாது. கோட்டைக்குள்ளே உன் விருப்பப்படி சுற்றி அலையலாம்!"– இவ்விதம் கூறிவிட்டு இரண்டு புதிய ஆட்களைச் சின்னப் பழுவேட்டரையர் தம் அருகில் அழைத்து அவர்களிடம் ஏதோ சொன்னார். அவர் சொன்னது என்னவாயிருக்கும் என்று வந்தியத்தேவன் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டான்.

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

மரத்தில் ஒரு மங்கை!

கோட்டைத் தளபதியின் இரு ஆட்களும் தன் இரண்டு பக்கத்தில் வர, வந்தியத்தேவன் தஞ்சைக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். தான் தப்பித்து ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ளவே அவர்கள் தன்னுடன் வருகிறார்கள் என்பதைப் பற்றி அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. கோட்டை வாசல் வழியாக வெளியே யாரையும் போக விடாமல் பார்த்துக் கொள்ளும்படி கட்டளை பிறந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனாலும் அவன் அன்று முன்னிரவுக்குள் தப்பிச் சென்றே தீரவேண்டும். பெரிய பழுவேட்டரையர் வந்துவிட்டால், பிறகு தப்பித்துச் செல்வது இயலாத காரியம்; உயிர் பிழைத்


திருப்பதே முடியாத காரியமாகிவிடும்!

ஆகவே, தஞ்சாவூர் கோட்டைக்குள் வந்தியத்தேவன் அங்குமிங்கும் அலைந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது, அவனுடைய மனம் தப்பிச் செல்லும் வழிகளைப்பற்றி ஆலோசித்துக் கொண்டேயிருந்தது. முதலில் இந்த யம கிங்கரர்களிடமிருந்து தப்ப வேண்டும்; பின்னர், கோட்டையிலிருந்து தப்பிச் செல்ல வேண்டும். எப்படித் தப்புவது; அதுதான் தெரியவில்லை.

பார்க்கப்போனால் இவர்களிடமிருந்து தப்புவது பெரிய காரியமில்லை. இரண்டு பேரையும் ஒருவிநாடி நேரத்தில் தாக்கிக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிடலாம். ஆனால் எங்கே ஓடுவது? தஞ்சைக் கோட்டையைப் பழுவேட்டரையர்கள் எவ்வளவு பலப்படுத்திக் கட்டியிருக்கிறார்கள் என்பது நாடறிந்த செய்தி. அவர்களுடைய அநுமதியின்றித் தஞ்சைக் கோட்டைக்குள் காற்றுக்கூட நுழையமுடியாது என்று ஜனங்கள் சொல்லுவார்கள். யமனும் வரமுடியாது என்று சக்கரவர்த்தியே இன்று காலையில் சொன்னார். அத்தகைய கோட்டையிலிருந்து எப்படிச் செல்வது? இந்த இருவரையும் தொட வேண்டியதுதான்; அவர்கள் உடனே கூச்சல் கிளப்பிவிடுவார்கள். அடுத்த கணத்தில் தான் பாதாளச் சிறைக்குப் போக நேரிடும். அல்லது உயிரிழக்க நேரிடும். இவர்களைத் தாக்குவதில் பயனில்லை; தாக்காமல் தந்திரத்தினாலேயே தப்பிக்க வேண்டும். அப்படித் தப்பித்த பிறகு கோட்டையிலிருந்து வெளியேற வழிதேட வேண்டும். அவ்வளவு பலமான கோட்டயாயிருந்தாலும் இரகசியச் சுரங்கவழி இல்லாமற் போகாது. அதை எப்படிக் கண்டுபிடிப்பது? அது யாருக்குத் தெரிந்திருக்கும்? தெரிந்தவர்கள் யாரேனும் இருந்தாலும், தனக்குச் சொல்வார்களா?

இப்படிப் பலவகையாகச் சிந்தித்துக் கொண்டே நடந்த போது, சட்டென்று பழுவூர் இளைய ராணியின் நினைவு வந்தது. ஆகா! அந்தக் கோட்டைக்குள் யாராவது தனக்கு உதவி செய்வதாயிருந்தால், அந்த மாதரசிதான் செய்யக்கூடும். அதுவும் சந்தேகந்தான்; ஆனால் ஆழ்வார்க்கடியானின் பெயரைச் சொல்லி ஏதேனும் தந்திர மந்திரம் செய்து பார்க்கலாம். அப்படிப் பார்ப்பதற்கு முதலில் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையைக் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்தாலும், தான் அங்கே ராணியைப் பார்க்கச் செல்வது இந்தத் தடியர்களுக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் இவர்கள் போய்ச் சின்னப் பழுவேட்டரையரிடம் சொல்லிவிடுவார்கள். அதிலிருந்து என்ன விபரீதம் நேருமோ, யார் கண்டது? ஒருவேளை, பெரிய பழுவேட்டரையர் அரண்மனையில் நாம் இருக்கும்போது அவரே வந்துவிட்டால் என்ன செய்வது? சிங்கத்தின் குகைக்குள் நாமாகச் சென்று தலையைக் கொடுப்பது போல ஆகுமே?

வந்தியத்தேவனுடைய மனம் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அவனுடைய வாயும் கண்களும் சும்மா இருந்துவிடவில்லை. பின்னோடு வந்தவர்களை "அது என்ன?" இது என்ன?", "அது யார் அரண்மனை?'', ''இது யார் மாளிகை?", "இது என்ன கட்டடம்?", "அது என்ன கோபுரம்?" என்றெல்லாம் அவன் வாய் கேட்டுக் கொண்டேயிருந்தது. அவனுடைய காதுகள் "இது பெரிய பழுவேட்டரையர் அரண்மனை" அல்லது "பழுவூர் இளைய ராணி அரண்மனை" என்ற மறுமொழி வருகிறதா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தன. அவனுடைய கண்களோ அப்புறமும் இப்புறமும் நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக் கொண்டு வந்தன. அப்படிப் பார்த்து வந்தபோது ஒரு விஷயம் அவன் கண்கள் வழியாக மனத்தில் நன்கு பதிந்தது. கோட்டைக்குள்ளே பிரதான வீதிகள் விசாலமாயும் ஜனப் போக்குவரவு நிறைந்ததாயும் இருந்தபோதிலும் சந்து பொந்துகளும் ஏராளமாயிருந்தன. மரமடர்ந்த தோட்டங்களும் அதிகமாயிருந்தன. அந்தச் சந்து பொந்துகளின் வழியாகச் சென்று அடர்ந்த தோட்டங்களுக்குள் புகுந்து மறைந்து கொள்வது அசாத்தியமான காரியம் அல்ல. ஒரு நாள், இரண்டு



நான் கூடத் தலைமறைவாக இருப்பது சாத்தியந்தான். ஆனால் யாரும் பாராத சமயத்தில் மறைந்து கொள்ள வேண்டும்; யாரும் தேடாமலும் இருக்க வேண்டும். சின்னப் பழுவேட்டரையர் அவருடைய கணக்கற்ற ஆட்களைத் தேடுவதற்கு ஏவிவிட்டால் மறைந்திருப்பது சாத்தியமல்ல. அல்லது யாருடைய வீட்டுக்குள்ளாவது புகுந்து அடைக்கலம் பெற வேண்டும். அம்மாதிரி தஞ்சைக் கோட்டைக்குள் தனக்கு அடைக்கலம் யார் கொடுப்பார்கள்? பழுவூர் ராணி கொடுத்தால் தான் கொடுத்தது. தன்னுடைய கற்பனா சக்தியையெல்லாம் பிரயோகித்து அவளிடம் கதை கட்டிச் சொல்லி நம்பும்படி செய்ய வேண்டும். அதற்கு முதலில், இவர்களிடமிருந்து தப்பித்து நழுவ வேண்டும்...



ஆகா! இது என்ன கோஷம்? இது என்ன ஆர்ப்பாட்டம்?- ஓ! இவ்வளவு கூட்டமாகப் போகிறார்களே, இவர்கள் யார்? தெய்வமே நீ என் பக்கத்தில் இருக்கிறாய் என்பதில் சந்தேகமில்லை. இதோ ஒரு வழி புலப்படுகிறது! இதோ ஒரு துணை தோன்றுகிறது!...

குறுக்கு வீதியில் ஒரு திருப்பத்துக்கு வந்ததும், பிரதான வீதி வழியாக ஒரு பெரிய கும்பல் வாத்திய கோஷ ஜய கோஷ முழக்கங்களுடன் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து வந்தியத்தேவன் மேற்கண்டவாறு நினைத்தான். அந்தக் கும்பலில் சென்றவர்கள் வேளக்காரப் படையினர் என்பதைத் தெரிந்து கொண்டான். வழக்கம்போல் மகாராஜாவைத் தரிசனம் செய்துவிட்டு அவர்கள் கோட்டையை விட்டு வெளியேறுகிறார்கள் போலும்! இந்தக் கூட்டத்தில் தானும் கலந்து விட்டால்?... ஆகா! தப்புவதற்கு இதைக் காட்டிலும் வேறு சிறந்த உபாயம் என்ன?

பின்னோடு வருகிறவர்கள் அவ்வளவு சுலபத்தில் தன்னை விட்டுவிடமாட்டார்கள். தான் கூட்டத்தில் கலந்தால் அவர்களும்கூடத் தொடர்ந்து வருவார்கள். கோட்டை வாசல் வழியாக வெளியேறுவதும் எளிதாயிராது! வாசற் காவல் செய்வோர் அவ்வளவு ஏமாந்தவர்களாக இருந்துவிடுவார்களா? தன்னைக் கண்டு பிடித்துத் தடுத்து நிறுத்திவிடமாட்டார்களா? ஆயினும் ஒரு பிரயத்தனம் செய்து பார்க்க வேண்டியதுதான். வேறு வழியில்லை. கடவுளே பார்த்துக் காட்டியிருக்கும் இந்த வழியை உபயோகித்துக் கொள்ளாவிட்டால் தன்னைப் போன்ற மூடன் வேறு யாரும் இல்லை.

வழக்கம்போல், பின்னோடு வந்தவர்களைப் பார்த்து, "இது என்ன கூட்டம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "வேளக்காரப் படை" என்று சொன்னதும், அந்தப் படையைப் பற்றிய விவரங்களைக் கேட்கலானான். அத்தகைய வீரப் படையில் சேர்ந்துவிட விரும்புவதாகவும், ஆகையால் நெருங்கிப் பார்க்க வேண்டுமென்றும் சொன்னான். இப்படியெல்லாம் பேசிக் கொண்டே வேளக்காரப் படையை அணுகினான். சிறிது நேரத்தில் "முன்னால் தாரை தப்பட்டை முழக்குகிறவர்களைப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே வேளக்காரப் படைக் கூட்டத்தில் கலந்துவிட்டான்.

கூட்டம் மேலே போகப் போக, இவனும் ஒரே இடத்தில் நில்லாமல் மேலும் கீழும் அப்பாலும் இப்பாலும் நகர்ந்து கொண்டிருந்தான். வேளக்காரப் படை வீரர்களைக் காட்டிலும் அதிக உற்சாகத்துடன் கோஷங்களைச் செய்தான். அவ்வீரர்களில் சிலர் இவனை உற்று உற்றுப் பார்த்தார்கள். "இவன் யார் பைத்தியக்காரன்?" என்ற பாவனையில் சிலர் பார்த்தார்கள். "மிதமிஞ்சி மதுபானம் செய்தவன் போலிருக்கிறது!" என்ற பாவனையில் சிலர் பார்த்தார்கள். ஆனால் யாரும் அவனைத் தடுக்கவோ, அப்புறப்படுத்தவோ முயலவில்லை.

அவனுடன் வந்த சின்னப் பழுவேட்டரையரின் ஆட்களோ, வேளக்காரப் படைக்குள் நுழையத் துணியவில்லை. "எப்படியும் அவன் வெளியில் வருவான். அப்போது மீண்டும் பற்றிக் கொள்ளலாம்" என்ற நம்பிக்கையுடன் வேளக்காரப் படையின் ஓரமாகச் சற்று விலகியே அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் வீதியில் எதிர்ப்புறமாகத் தயிர்க் கூடையுடன் வந்து கொண்டிருந்த ஒரு ஸ்திரீ வேளக்காரப் படைக்கு ஒதுங்கி ஒரு சந்தில் நின்றாள். அந்த வீரர்களில் ஒருவன், "அம்மா! தாகமாயிருக்கிறது; கொஞ்சம் தயிர் தருகிறாயா?" என்று கேட்டான். அந்தப் பெண் துடுக்காக, "தயிர் இல்லை; கன்னத்தில் இரண்டு அறை வேணுமானால் தருகிறேன்!" என்றாள்.

அதைக்கேட்ட ஒரு வீரன் "ஓகோ! அதைத்தான் கொடுத்துவிட்டுப் போ!" என்று அந்தப் பெண்ணை அணுகிச் சென்றான். தயிர்க்காரப் பெண் பயந்து ஓடினாள். வீரன் அவளைத் தொடர்ந்து ஓடினான். அவளைப் பிடித்துக் கொண்டு வருவதற்காக இன்னும் இரண்டு வீரர்கள் ஓடினார்கள். ஓடியவர்கள் அனைவரும் தலைக்குத் தலை ஒவ்வொரு விதமாகக்

கூச்சல் போட்டுக் கொண்டு ஓடியபடியால் விஷயம் என்னவென்பதே யாருக்கும் தெரியவில்லை. ஏதோ தமாஷ் என்று மட்டும் எல்லாரும் எண்ணினார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் வல்லவரையன். அந்த ஒரு கணத்தில் அவன் மனத்திற்குள் தீர்மானத்துக்கு வந்து விட்டான். தீர்மானிப்பதும் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவதும் வந்தியத்தேவனுக்கு ஒன்றுதான் என்பதை நாம் ஏற்கெனவே பல முறை பார்த்திருக்கிறோம். தீர்மானித்த பிறகு தயங்குவதென்பது அவனுடைய இயற்கைக்கு விரோதமானது. எனவே, "ஓடு! ஓடு!", "பிடி!பிடி!" என்று கூவிக் கொண்டே வந்தியத்தேவனும், தயிர்க்காரப் பெண்ணைத் துரத்திக் கொண்டு ஓடியவர்களைத் தொடர்ந்து தானும் ஓடினான். அந்தப் பெண் சற்றுத் தூரம் ஓடி, ஒரு குறுகிய சந்தில் திரும்பினாள். பின் தொடர்ந்து ஓடியவர்கள் அங்கே போய்ப் பார்த்தபோது தயிர்க்காரப் பெண்ணைக் காணவில்லை. மாயமாய் மறைந்து விட்டாள்! துரத்தி வந்த வீரர்களும் அவளைப் பற்றி அப்புறம் கவலைப்படவில்லை, திரும்பிவிட்டார்கள். வந்தியத்தேவன் மட்டும் திரும்பவில்லை. அந்தப் பெண் புகுந்து சென்ற சந்து வழியாகவே மேலும் ஓடினான். இன்னும் இரண்டு மூன்று சந்துகள் புகுந்து திரும்பிய பிறகே ஓட்டத்தை நிறுத்தி மெதுவாக நடக்கலுற்றான்.



வேளக்காரப் படை சாதாரணமாகக் கோட்டையிலிருந்து வெளியேறும் நேரம் சூரியாஸ்தமன நேரம் அல்லவா? வந்தியத்தேவன் இப்போது புகுந்து சென்ற சந்துகளில் ஏற்கெனவே இருள் சூழ்ந்து விட்டது. இருபுறமும் சில இடங்களில் மதில் சுவராயிருந்தது. சில இடங்களில் செடி கொடிகள் அடர்ந்த வேலியாயிருந்தது. வந்தியத்தேவன் எங்கும் நிற்காமல் போய்க் கொண்டேயிருந்தான். திசையைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பெரிய வீதிகளில் புகாமல் சந்து பொந்துகளின் வழியாகப் புகுந்து போனால் எப்படியும் கோட்டை வெளிச் சுவரை அடைந்தே தீர வேண்டும். கோட்டைச் சுவரை அடைந்த பிறகு என்ன செய்வது என்பதைப் பிறகு தீர்மானித்துக் கொள்ளலாம். யோசித்து யுக்திகள் கண்டு பிடிப்பதற்குத்தான் இரவெல்லாம் நேரம் இருக்கிறதே!

சற்று நேரத்துக்கெல்லாம் நன்றாக

இருட்டிவிட்டது. அவன் சென்ற பாதை கடைசியில் ஒரு மதில் சுவரில் வந்து முடிந்தது. இருட்டில் நடந்து வந்த வந்தியத்தேவன் அச்சுவரின் மேல் இலேசாக மோதிக் கொண்டான். சுவர் என்று மட்டும் தெரிந்தது. அது என்ன சுவர், எவ்வளவு உயரமான சுவர் என்பது ஒன்றும் தெரியவில்லை. அநேகமாக அது கோட்டை மதில் சுவராகவே இருக்கலாம். அப்படியானால் இங்கேயே உட்கார்ந்து விடுவதுதான் சரி. சிறிது நேரத்துக்கெல்லாம் சந்திரன் உதயம் ஆகும். அப்போது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அதுவரை ஒளிந்திருப்பதற்கு இதைக் காட்டிலும் நல்ல இடம் இருக்க முடியாது. இத்தனை நேரம் சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் திரும்பிப் போய்ச் சொல்லியிருப்பார்கள். கோட்டைத் தளபதி தன்னுடைய ஆட்களை நாலா புறமும் ஏவியிருப்பார். ஒருவேளை வேளக்காரப் படையுடன் தான் வெளியேறியிருக்கலாம் என்றும் சந்தேகித்திருப்பார். கோட்டைக்கு உள்ளேயும் வெளியிலேயும் தன்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள். தேடட்டும்; தேடட்டும்; நன்றாகத் தேடட்டும். அவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு, நான் இக்கோட்டையை விட்டுத் தப்பித்துச் செல்லாவிட்டால் நான் வாணர் குலத்தவன் அல்ல! என் பெயரும் வந்தியத்தேவன் அல்ல!

ஆனால் சந்திரன் உதயமாகி நிலா அடிக்கத் தொடங்கி விட்டால் பழுவேட்டரையர் ஆட்களுக்கும் வசதியாகப் போய்விடும். தன்னைத் தேடி இங்கே வந்தாலும் வந்துவிடுவார்கள். வந்தால் வரட்டும்; தாராளமாய் வரட்டும்; இந்த அடர்ந்த தோப்புக்குள் ஒளிந்து கொண்டால் யார்தான் தேடிக் கண்டு பிடிக்க முடியும்?

இப்படி எண்ணிக் கொண்டே சுவரின் மீது சாய்ந்து கொண்டு வந்தியத்தேவன் உட்கார்ந்தான். இளம்பிள்ளையாதலாலும் பகலெல்லாம் அலைந்து களைத்திருந்த படியாலும் கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. மேலக்காற்றில் மரக் கிளைகள் ஆடி ஒன்றோடொன்று உராய்ந்து உண்டாக்கிய சத்தம் தாலாட்டுப் பாடலைப்போல் மயக்கத்தை உண்டு பண்ணியது. அப்படியே தூங்கிவிட்டான்.

அவன் தூக்கம் நீங்கிக் கண் விழித்த போது சந்திரன் உதயமாகிக் கீழ்வானத்தில் சிறிது தூரம் மேலே வந்திருந்தது. அடர்ந்த மரக்கிளைகளின் வழியாக நிலா வெளிச்சம் வந்து சுற்றுப்புற காட்சிகளை அரைகுறையாக அவனுக்குக் காட்டியது. தனது நிலை என்னவென்பதை வந்தியத்தேவன் ஞாபகப்படுத்திக்கொண்டான். சுவரில் சாய்ந்தபடி தான் தூங்கிவிட்டது அவனுக்கு வியப்பை அளித்தது. அதைக் காட்டிலும் துயில் நீங்கி விழித்துக் கொண்டது ஆச்சரியம் அளித்தது. தன்னுடைய துயிலை நீக்கி விழிக்கச் செய்த காரணம் யாது? ஏதோ ஒரு குரல் கேட்டதுபோல் தோன்றியதே? அது மனிதக் குரலா? அல்லது விலங்கின் குரலா? அல்லது இரவில் விழித்திருக்கும் பறவையின் குரலா?– குரல் கேட்டதுதான் உண்மையா?

வந்தியத்தேவன் அண்ணாந்து பார்த்தான். அரைகுறையான நிலா வெளிச்சத்தில் செங்குத்தான சுவர் தெரிந்தது. ஆ! இது கோட்டைச் சுவராயிருக்க முடியாது. கோட்டைச் சுவர் இன்னும் உயரமாயிருக்கும். ஒருவேளை வெளிக்கோட்டைச் சுவருக்குள்ளே இன்னொரு சிறிய கோட்டைச் சுவராக இருக்குமோ? அல்லது பெரியதொரு அரண்மனைத் தோட்டத்தின் மதில் சுவரோ?

அண்ணாந்து பார்த்துக் கொண்டே வந்தியத்தேவன் எழுந்தான். ஒருகணம் அவனுடைய இருதயத் துடிப்பு நின்று போயிற்று. வயிற்றிலுள்ள குடல் மேலே மார்புவரை விம்மி வந்து அடைத்தது. அவ்வளவு பீதி உண்டாயிற்று. அதோ அந்த மதில் சுவருக்கு மேலேயுள்ள மரக் கிளையில் இருப்பது என்ன? மரங்களில் வசிக்கும் வேதாளம் என்னும் பிசாசைப் பற்றி அவன் கேட்டிருந்த கதைகள் பலவும் நினைவுக்கு வந்தன.

ஆனால் வேதாளம் பேசுமா? மனிதக் குரலில் பேசுமா? அதுவும் பெண்ணின்

குரலில் பேசுமா? இந்த வேதாளம் அவ்வாறு பேசுகிறதே? என்ன சொல்கிறது என்று கேட்கலாம்.

"என்ன ஐயா! சுவரில் சாய்ந்தபடி தூங்கிவிட்டாயா? எத்தனை தடவை கூப்பிடுகிறது?"

ஆ! இது வேதாளம் அல்ல. மனித குலத்துப் பெண்மணிதான் பேசுகிறாள். மரக்கிளையின் மீது உட்கார்ந்திருப்பவள் ஒரு பெண்மணிதான்! இது என்ன கனவா? அல்லது உண்மையில் நடப்பதா?

"அழகுதான்! இன்னும் தூக்கம் கலைய வில்லை போலிருக்கிறது. இதோ ஏணியை வைக்கிறேன். ஜாக்கிரதையாக ஏறி வா! கீழே விழுந்து தொலைக்காதே!"

இப்படிச் சொல்லிக் கொண்டே அப்பெண் சுவரின் உட்புறத்திலிருந்து மெல்லிய மூங்கிலினால் ஆன ஏணி ஒன்றை எடுத்து வெளிப்புறத்தில் சுவர் ஓரமாக வைத்தாள்.

வந்தியத்தேவனுக்கு ஒன்றும் விளங்க வில்லைதான்! ஆனாலும் இப்படிப்பட்ட அரிய சந்தர்ப்பத்தை, தன்னைத் தேடி வரும் சந்தர்ப்பத்தை அவன் விட்டு விடுவானா?

வருகிறது வரட்டும். பிறகு நடப்பது நடக்கட்டும். இப்போது இந்த ஏணியில் ஏறலாம்; சுவரின் உச்சியை அடைந்த பிறகு மற்ற விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஏணியில் முக்கால் பங்கு அவன் ஏறிய போது அந்தப் பெண் மறுபடியும், "நல்ல தாமதக்காரன் நீ! அங்கே இளைய ராணி யம்மாள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நீ மதில் சுவரில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாய்!" என்றாள். அப் போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் வந்தி யத்தேவன் ஏணியிலிருந்து நழுவி விழுந்து விட இருந்தான். நல்லவேளையாக, அங்கே சுவரில் நீட்டிக் கொண்டிருந்த கல்லைப் பிடித்துக் கொண்டு சமாளித் தான்.

இளைய ராணியென்றால், பழுவூர் இளைய ராணியாகத்தான் இருக்கும்! தான் இங்கே வந்து உட்கார்ந்தது அவ ளுக்கு எப்படித் தெரிந்தது? மாயமந்திரம் ஏதோ அவள் அறிந்திருக்க வேண்டும்! தன்னைப் பார்ப்பதில் அவளுக்கு இவ் வளவு சிரத்தை ஏற்படக் காரணம் என்ன? ஒரு வேளை, - ஒரு வேளை, - எவனுக்காகவோ வைத்த ஏணியில் நான் ஏறி விட்டேனோ? எப்படியிருந்தாலும் இருக்கட்டும்! முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது! எல்லாம் சற்று நேரத்தில் தெரிந்து போய்விடுகிறது.

சுவரின் உச்சியருகில் வந்ததும் அவனு டைய கையைப் பிடித்து அந்தப் பெண் தூக்கிவிட்டாள். அப்போது நிலா வெளிச் சம் அவள் முகத்தில் அடித்தது. இதற்குள் ஆச்சரியப்படும் சக்தியையே வந்தியத் தேவன் இழந்து விட்டான். அதனால்தான் அவளுடைய முகம் வேளக்காரப் படை யினர் துரத்திய தயிர்க்கூடைக்காரியின் முகம்போலத் தோன்றியும், அவன் சுவரி லிருந்து தவறி விழவில்லை. இன்றிரவு இதற்குமேல் என்னென்ன வியப்பான நிகழ்ச்சிகள் நடந்தாலும் வியப்படை வதற்கு இடமில்லைதான்.

"ஊம்! ஏன் விழித்துக் கொண்டு சுவர் மேலேயே உட்கார்ந்திருக்கிறாய்? ஏணியை எடுத்து உள்ளே இறக்கிவிட்டுக் குதி சீக்கிரம்!" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெண் சரசரவென்று மரக்கிளையிலிருந்து கீழே இறங்கினாள்.

வந்தியத்தேவன் அவள் கூறியவாறே செய்தான். அவன் இறங்கிய இடம் ஒரு விஸ்தாரமான தோட்டம் என்று தெரிந் தது. சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய அரண் மனையின் மாடகூட கோபுரங்களும் சிகரங்களும் மங்கிய நிலா வெளிச்சத்தில் சொப்பன உலகக் காட்சியைப்போல் தோன்றின.

அது யாருடைய அரண்மனை என்று கேட்பதற்காக வந்தியத்தேவன் தொண் டையைக் கனைத்துக் கொண்டான். உடனே அந்தப் பெண் "உஷ்!" என்று சொல்லி, உதட்டில் விரலை வைத்து எச்சரித்துவிட்டு முன்னால் நடந்தாள். வந்தியத்தேவன் அவளைத் தொடர்ந்து சென்றான்.

(தொடரும்)

சாஞ்சி



கல்கி கலெக்ஷன்

மத்திய பாரதப் பிரதேசத்தில் உள்ள சாஞ்சி க்ஷேத்திரத்தில் சென்ற ஞாயிற்றுக் கிழமை நிகழ்ந்த புனித வைபவம் பாரத நாட்டுக்கு மாத்திரமல்ல, இந்தப் பூவுலகத் துக்கே முக்கியமானது. சாஞ்சிக் குன்றிலே அமைக்கப்பட்டுள்ள விஹாரத்தில் அன்று புத்த பிரானின் பரம சீடர்களான சாரி புத்தர், மகா மொகலன்னர் இவர்களின் சின்னங்கள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மேற்படி சின்னங்களைப் பிரிட்டிஷார் சாஞ்சிப் பிரதேசத்திலிருந்து எடுத்துச் சென்று இங்கிலாந்தில் உள்ள கண்காட்சி சாலையில் வைத்திருந்தனர். இந்திய மகா போதி சங்கத்தின் பெரு முயற்சியால் அந்தச் சின்னங்கள் இப்போது யதாஸ்தானத்துக்கே திரும்பி வந்து விட்டன.

சாஞ்சியில் நடந்த மேற்படி வைபவத்தில் இந்தியாவின் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு, உப ஜனாதிபதி சர் ராதாகிருஷ்ணன், பர்மா பிரதமர் தக்கின் நூ, இலங்கை உள்நாட்டு மந்திரி ஸ்ரீ ரத்னாயகா உள்பட இலங்கை, பர்மா, தாய்லாந்து, ஜப்பான் முதலிய பல நாடுகளிலிருந்தும் விஜயம் செய்துள்ள இருநூறு பௌத்த பிக்ஷுக்களும் சுமார் ஐம்பதினாயிரம் பக்தர்களும் கலந்து கொண்டார்கள்.

புத்த பகவானின் அரிய உபதேச மந்திரங்களான சத்தியம், அன்பு, சகிப்புத் தன்மை, ஜீவகாருண்யம் இவற்றின் பெருமையைப் பல பிரமுகர்களும் மனம் உருகி மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

யுத்தத்தைத் தடுத்து, உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகச் சர்வதேச அரசியல் மேடையில் இந்தியப் பிரதிநிதிகள் செய்து வரும் பெரு முயற்சிக்குச் சாஞ்சியில் நிகழ்ந்த வைபவம் ஆக்கம் அளிக்கவல்லது என்று கூறலாம்.

மகாராஜனின் குடும்பத்தில் ஜனித்த கௌதம புத்தர் ராஜ்யாதிகாரத்தையும் சுக போகங்களையும் துறந்தார். மானிட வர்க்கத்துக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்வின் லட்சியமாகக் கொண்டார். மானிட சமூகத்தை அல்லல்படுத்தி வந்த வறுமை, பிணி, துன்பம், துவேஷம் முதலிய கொடுமைகளைத் தம்முடைய புனிதமான உபதேசங்களால் அகற்ற முயன்றார்.

போரில் மகத்தான வெற்றி பெற்ற அசோகச் சக்கரவர்த்தி, புத்த முனிவரின் உபதேசங்களால் மயக்கம் தெளிந்து, போரில் ஏற்பட்ட உயிர்ச் சேதத்தைக் கண்டு கண்ணீர் வடித்தார். பிறகு ஆயுதங்களைத் தூர எறிந்து விட்டு, அன்பு வழியைப் பின்பற்றி, அமைதியை நிலைநிறுத்த அரும்பாடுபட்டார்.


புத்த பகவானின் காலத்தில் உலக மக்களில் மூன்றில் ஒருவர் விகிதம் பௌத்த மதத்தைத் தழுவினார்கள் எனில், அவரது உபதேசங்கள் எவ்வளவு தூரம் மானிட வர்க்கத்தின் மனத்தைக் கவர்ந்திருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அன்று உலகத்தின் பெரும் பகுதியில் வெற்றிக் கொடி நாட்டிய அசோகச் சக்கரவர்த்தி ஆயுதங்களைத் துறந்தது போல், இரண்டாவது உலக மகா யுத்தத்தில் வெற்றி பெற்ற வல்லரசுகள் ஆயுதப் பரிகரணம் செய்ய முற்பட்டிருக்குமாயின், உலகம் இன்றுள்ள பயங்கரமான நிலைமைக்கு வந்திராது.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது பட்டணங்களுக்கும் பொது ஜனங்களுக்கும் அழிவு ஏற்படாமல் போர்கள் நிகழ்ந்த அக்காலத்திலேயே அசோகச் சக்கரவர்த்தியினால்

அமரர் கல்கி

குன்றில் அன்பு ஒளி



போரின் வெறியையும் கொடுமையையும் சகிக்க முடியவில்லையெனில், ஹைட்ரஜன் குண்டு சகாப்தத்தில் சிக்கிக் கொண்டுள்ள இன்றைய உலகத்தைப் பற்றி என்ன சொல்வது!

அன்பும் கருணை உள்ளமுமே மானிட வர்க்கத்தை உய்விக்க முடியும் என்பதைத் புத்த பகவான் உலகத்துக்கு உபதேசித்தார். அவரது முக்கிய சீடர்களான சாரி புத்தரும், மகா மொகலன்னரும் அந்த உபதேசத்தின் உதாரண புருஷர்களாக விளங்கினார்கள்.

ஆயுத வழியைத் துறந்து அன்பு வழியினால் ராஜ்யத்தை ஆட்சி புரியலாம் என்பதற்கு அசோகச் சக்கரவர்த்தி உதாரணமாகத் திகழ்ந்தார்.

சமீபத்தில் காந்தி மகான் அதே அன்பு வழியைப் பின்பற்றி, மகத்தான சுதந்திரப் போரில் மாபெரும் வெற்றியைக் கண்டார்.

புத்த பகவானின் அரிய உபதேசமே பாரதத் தாயின் மணிக் கொடியில் அசோகச் சக்கரமாக உருப்பெற்றுத் திகழ்கிறது.

''தனிப்பட்டவர்களின் பிரச்னைகளாயினும் சரி, சர்வதேசப் பிரச்னைகளாயினும் சரி, அவற்றைத் தீர்ப்பதில் புத்த பகவான் அருளிய அன்பு, சகிப்புத் தன்மை, கருணை ஆகிய சித்தாந்தங்களைப் பின்பற்ற வேண்டும்'' என்று நேருஜி சாஞ்சி வைபவத்தின் போது குறிப்பிட்டார்.

நடுக் கடலிலே தவிக்கும் மாலுமிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை தீபத்தைப் போல், சாஞ்சிக் குன்றின் மேலே சுடர் விடும் அன்பு ஒளி பகை, துவேஷம், போர் வெறியாகிற கடலில் தத்தளிக்கும் உலக மக்களுக்கு வழிகாட்டி உய்விக்குமாக!

(கல்கி, டிசம்பர் 7, 1952)



அறிவு எங்கே போகிறது?

அமரர் கல்கி

சென்னை நகரை 'அறிவின் தலை நகரம்' என்று ஜவாஹர்லால்ஜி சொன்னார். தென்னாட்டு மக்கள் அறிவிற் சிறந்தவர்கள் என்று நாமும் அடிக்கடி பெருமையுடன் சொல்லிக் கொண்டு தானிருக்கிறோம். அறிவாளிகள் பலர் தென்னாட்டில் உண்டு என்பதில் சந்தேகமும் இல்லை.

ஆனால் சில சமயம், "தென்னாட்டின் அறிவு எங்கே போகிறது? தென்னை மரத்தில் புல் மேயப் போய் விடுகிறதா?" என்று சந்தேகம் ஏற்படும்படியான காரியங்கள் நிகழ்கின்றன.

குறுக்கெழுத்துப் போட்டி, கோணை எழுத்துப் போட்டி, பகுத்தறிவுப் போட்டி, பக்கா அறிவுப் போட்டி, ஏபிசிடி போட்டி, என் என் ஓ பி போட்டி என்றெல்லாம் எங்கே பார்த்தாலும் மோசடிகள் நடந்து வருகின்றன. அவற்றைக் குறித்துப் போலீஸ் நடவடிக்கைச் செய்திகளும் வெளியாகின்றன. ஆயினும் மக்கள் அப்போட்டிகளுக்கு மேலும் மேலும் பணத்தை அனுப்பி, நெற்றியில் பெரிய பட்டை நாமத்தைச் சூட்டிக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள்! பிறர் ஏமாறுவதைப் பார்த்தும் போட்டிப் பந்தயங்களுக்குப் பணம் அனுப்புவதை நிறுத்துவதில்லை; தாங்களே ஏமாந்த பிறகும் நிறுத்துவதில்லை.

இதைப் பார்க்கும் போது, "தென்னாட்டின் அறிவு அவ்வப்போது விடுமுறை பெற்றுக் கொள்கிறதோ?" என்று கேட்கத் தோன்றுகிறது.

நல்ல வைரங்களையும் இமிடேஷன் வைரங்களையும் கலந்து வைத்துக் கொண்டு ஏலம் போடுகிறார்கள். பம்பாய் – கல்கத்தா ஹைகோர்ட்டுகளின் தாக்கீதுகளுடன் இந்த ஏலங்கள் நடப்பதாக விளம்பரம் செய்கிறார்கள். "கல்கத்தாவிலும் பம்பாயிலும் ஏமாந்தவர்கள் இல்லையா? சென்னையைத் தேடி ஏன் ஏலம் போட வருகிறார்கள்?" என்று கூட இங்கேயுள்ளவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. முதல் நாள் 212 சாமான்கள் என்று ஜாபிதா காட்டி ஏலம் நடத்துகிறார்கள். அன்றைக்குச் சில சாமான்கள் விற்பனையாகின்றன. ஆனால் மறுநாளும் 212 சாமான்கள் ஏலத்துக்கு இருக்கின்றன! "இது எப்படி முடியும்?" என்று கூடக் கவனியாமல் 'வைர' நகைகளை வாங்குகிறார்கள். விற்கப் போன இடத்தில் 'இமிடேஷன்' என்று அறிந்து ஓலமிடுகிறார்கள். போலீஸ் விசாரணை நடக்கிறது; பத்திரிகையிலும் வெளியாகிறது.

ஆனாலும் வைர நகை ஏலங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

"இரண்டாயிரம் ரூபாய் அனுப்பி வையுங்கள். மாதம் 75 ரூபாய் லாபம் தருகிறோம்" என்று ஒரு வடநாட்டுக் கம்பெனி விளம்பரம் செய்கிறது. இது நடக்கக்கூடிய காரியமா என்று சிந்தியாமல் பணத்தை அனுப்புகிறார்கள். முதலில் சில மாதங்களுக்கு லாபப் பணம் வருகிறது. அப்புறம் விளம்பரம் செய்த கம்பெனி இருந்த இடம் தெரியவில்லை! சில நாளைக்குப் பிறகு அதே மாதிரி விளம்பரம் இன்னொரு கம்பெனியின் பெயரால் வெளியாகிறது. மேலும் பணம் அனுப்பி ஏமாறுகிறவர்கள் இச்சென்னை மாகாணத்தில் இருக்கிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போதுதான், "தென்னாட்டின் பிரசித்தி பெற்ற அறிவு சில சமயம் தென்னை மரத்தில் புல்லுப் பிடுங்கப் போய் விடுகிறதோ?" என்று வியக்க வேண்டியிருக்கிறது.

(கல்கி, நவம்பர் 9, 1952)

இந்த வார இளைஞர்!

இலவசமாக ஒரு டியூஷன் பள்ளி!

"குன்றத்தூருக்குப் பக்கத்துல இருக்கற தண்டலம் கிராமத்துல நான் பள்ளியில படிக்கிறப்போ, சாயந்தரம் டியூஷன் கிளாசில் படிக்க வேண்டியிருந்தது. ஒரு சப்ஜெக்ட்டுக்கு ஒரு ரூபா. மொத்தம் ஆறு ரூபா கட்டணும், மாசத்துக்கு. அதைக்கூடக் கட்ட வழியில்லாம எவ்வளவோ அவஸ்தைப் பட்டிருக்கேன். 'படிச்சு முடிச்சு வேலைன்னு ஒண்ணு கிடைச்சா, சம்பளத்துல ஒரு பகுதியைக் கல்விக்குச் செலவு பண்றது'ன்னு அப்பவே மனசுக்குள்ள தீர்மானம் போட்டுட்டேன். இப்போ 'அம்பேத்கர் இலவச இரவுப் பாடசாலை' வேளச்சேரில நல்லா நடக்குதுன்னா, அதுதான் காரணம். நம்மால முடிஞ்ச அளவு நல்ல கல்வியைக் கொடுத்துட்டோம்னா அதுவே பெரிய சமூகப் பணி செஞ்ச மாதிரி!"

– சொல்கிறவர் ஏதோ எம்.எல்.ஏ.யோ அமைச்சரோ அல்ல. சென்னை தரமணியில், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ரீசர்ச் ஃபவுண்டேஷனில் வேலை பார்க்கிற பரசுராமன் என்ற இளைஞர். எல்லாரும் இவரை ராமன் என்றுதான் அழைக்கிறார்கள். டாக்டர் சுவாமிநாதனின் 'ரைட் ஹேண்ட்' என்கிறார்கள். காரணம்: இவரது சுறுசுறுப்பு!

"டாக்டர்தான் எனக்குத் தாய்-தந்தை மாதிரி. காலைலே நாலரை மணிக்கு எழுந்தார்னா, ராத்திரி பதினொண்ணு, பன்னண்டு வரை உழைப்புத்தான். மாசத்துல, 20 நாள் சுற்றுப்பயணம் இருக்கும். திரும்ப வர்றபோது ராத்திரி 2 மணி ஆனாக்கூட காலையிலே வழக்கம் போல எழுந்து, ஆபீஸ் வந்துடுவார். அவர் மாதிரி இன்னொருத்தரைப் பார்க்கவே முடியாது. அவர்தான் என்னோட காட்ஃபாதர்! என்று வெளிப்படையாகவே புகழ்கிறார் ராமன்.



ராமனுக்கு எல்லாமே கல்வி, கல்வி, கல்விதான்.



• படிக்கும் குழந்தைகள்....

வேளச்சேரியில் 1, பாரதியார் தெருவில், போலீஸ் குவார்ட்டர்ஸ் அருகே, குப்பை கொட்டிக் கொண்டிருந்த இடத்தை இவர் சுத்தப்படுத்தி முடித்தபோது, முதலில் அம்பேத்கர் தண்ணீர்ப் பந்தல் என்றுதான் வைத்தார். ஏனென்றால் அந்தப் பகுதியில் குடிதண்ணீர் பிரச்னை இருந்தது. ஒரு கிரவுண்டுக்கும் குறைவான இடம்தான். பிறகு தமக்கு ஆதரவு கிடைத்ததும், தாம் கனவு கண்டபடியே நைட் ஸ்கூல் ஆரம்பித்தார். கார்ப்பரேஷனிலிருந்து முன் வந்து உதவினார்களாம். ஒரு கொட்டகையும் போட்டு, போர்டும் போட்டாராம்.

இடத்தைச் சுத்தப்படுத்தின உடனேயே, அதற்குப் பக்கத்தில் நிலம் வைத்திருந்த ஒருவர், 'ஐநூறோ ஆயிரமோ தந்து விடுகிறேனே தம்பி. எனக்குக் கொடுத்து விடு!' என்று கேட்டுப் பார்த்திருக்கிறார். ராமன் மசியவில்லை.

செங்கல், சிமெண்ட், உடல் உழைப்பு எல்லாம் நண்பர்கள் கொடுத்து உதவ, ஒரே ஒரு கொத்தனாரை மட்டும் வைத்துக் கொண்டே பள்ளிக்கூடத்தைக் கட்டி விட்டார். சம்பளத்தில் 500, 1000 என்று மிச்சம் பிடித்துச் சேர்த்த பணத்தை எல்லாம் இரவுப் பள்ளிக்கே செலவழித்தார்!

"மதிவாணன், அந்தோணி, ஜகதீசன், சூசை மைக்கேல், ரவிக்குமார் எல்லாரும் பொருளாளர், செயலாளர்னு பொறுப்பா உதவினாங்க. ரவிக்கண்ணன், பி.ஏ. படிச்சவர். அவர்தான் இரவு பாடசாலை ஆசிரியர். எந்த அரசியல்வாதிகிட்டயும் போய்க் கேக்காம நாங்களே பக்கா பில்டிங் கட்டிட்டோம். இரண்டு ரூம், ஃபேன் எல்லாம் இருக்கு. ஐ.ஐ.டி.லேருந்து டாக்டர் முரளின்ற புரொபசர் இங்கிலீஷ் சொல்லித் தர்றார்..."

சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பிலிருந்து வந்து கல்வி பயிலும் குழந்தைகள், ஒழுங்காகக் கல்வியில் கவனம் செலுத்த முடிவதில்லை. ஒன்று டி.வி பார்க்கப் போய்விடுகிறார்கள். அல்லது வீட்டிலேயே சமையல் என்றும், வேலை என்றும் தம்பி-தங்கச்சிப் பாப்பாவைப் பார்த்துக் கொள்ளுவது என்றும் கூடுதலான வேலைகள்.

"அவங்க இங்க படிக்கறதுனால நிறைய மார்க்கு வாங்க முடியுது. குரோம்பேட்டைலேர்ந்து பாக்கியராஜ்னு ஒரு மாணவர் வறார். சைதாப்பேட்டை ஸ்கூல்ல படிக்கற ஸ்டெல்லா, கிளாஸ்லயே செகன்ட் வந்திருக்கா. அவ்வை ஹோம்ல 9ஆவது படிக்கிற அனிதா எக்ஸலன்ட், டேலன்ட்டட் ஸ்டூடன்ட். உமாராணி ஒரே வாரத்துல 50 திருக்குறள் படிச்சு அப்படியே ஒப்பிக்கறா... முதல் வகுப்புலேருந்து பத்தாம்

• பள்ளியைத் துவங்கி வைக்கும் எம்.எஸ். சுவாமிநாதன்



வகுப்பு வரை படிக்கற மாணவ-மாணவிகளுக்காகத்தான் இந்த இரவுப் பாடசாலை நடத்தறோம்."

முதலில் இவர்களை எல்லாம் வைத்தே அங்கே ரோடு போட்டு விட்டார் ராமன்! ஸ்டேட் வங்கியும், ரோட்டரி சங்கமும் இவருடைய செயல்பாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவ்வப்போது நிதி உதவி செய்திருக்கின்றன. சி.எஸ்.ஸின் மகன் ராஜசேகர், ரோட்டரி அமைப்புகளின் மூலம் சில நிதி உதவிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்.

"+2 வரை படிக்கிறவர்களுக்கு உதவணும். மேலே ரெண்டு ரூம் கூடப் போட்டுட்டா இன்னும் ஸ்டூடண்ட்ஸ் உட்காரலாம்... ரெண்டு டைப்ரைட்டர் நன்கொடையாக் கிடைச்சா +2 படிச்சவங்க, டைப்ரைட்டிங் பழகிடலாம். ஒரு கம்ப்யூட்டரும் கேட்டுக் கிட்டிருக்கேன்..." என்கிறார் ராமன்.

இப்போது 120 மாணவ-மாணவிகள் படித்து வருகிறார்கள். இவர்களை, மற்ற வசதியுள்ள பள்ளிக்குழந்தைகள் போலவே பிக்னிக் அழைத்துப் போகிறார். ஸ்போர்ட்ஸ் வைத்து உற்சாகப் படுத்துகிறார். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் வைத்து திறமைகளை ஊக்குவிக்கிறார். வருடத்தில் ஒருநாள் எல்லாக் குழந்தைகளுக்கும் பிரமாதமான விருந்து கூடக் கொடுக்கிறார் ராமன்!

சாலை ஒழுங்காக இல்லை என்று 95ல் நண்பர்களுடன் மறியல் செய்த அனுபவத்தைச் சொன்னார் ராமன். கார்ப்பரேஷன் எதிரேயே மறியல்! அப்போதே எக்ஸிக்யூடிவ் எஞ்ஜினீயர் லாரிகளை அனுப்பி வைத்து, ரோடு போட்டதோடு, சோடியம் வேப்பர் விளக்குகளும் போட்டு விட்டாராம். அதை விட, அவரது சொந்தச் செலவில் (சுமார் 1500 ரூபாய்!) பெரிதாக ஒரு போர்டும் செய்து கொடுத்தாராம்.

"என்னோட வீட்டுலகூட டேபிளோ சேரோ கிடையாது. ஆனா இரவுப் பாடசாலைல எல்லாம் இருக்கு... இப்போ மார்னிங் கிளாஸஸ் வேற நடத்தறோம். காலைல 5 மணி முதல் 7 மணி வரை. நாலரை மணிக்கே பசங்க வந்து கதவைத் திறந்திடுறாங்க. அவ்வளவு ஆர்வம் இருக்கு. அக்கறை இருக்கு!

"எத்தனையோ பேர் அநாவசியத்துக்கு எல்லாம் செலவு பண்றாங்க. எடுத்ததுக் கெல்லாம் பார்ட்டி! பத்துப் பேர் சேர்ந்து டீ குடிச்சா மினிமம் 20 ரூபா ஆயிடுது. அதை ஒரு சோஷியல் ஒர்க்கருக்குக் கொடுக்கலாமே!"

ராமனின் கல்யாணம் போன மாதம் தான் நடந்தது. டாக்டர் சுவாமிநாதனும், அவர் மனைவியும் தாலியை எடுத்துக் கொடுக்க, ஏராளமான நண்பர்கள் உதவ, ராஜா கல்யாண மண்டபத்தில் நடந்தது. "காதல் கல்யாணம்தான். மனைவி தனலட்சுமி. அவளுக்கும் இந்த மாதிரி சமூக வேலைன்னா பிடிக்கும். அது எனக்குப் பெரிய அதிர்ஷ்டம்! கல்யாணம் சிம்பிளாக, சீர்திருத்த முறையில் நடந்தாலும், 'கடவுள் நம்பிக்கை எல்லாம் எனக்கு உண்டு'" என்றார் ராமன். காஞ்சிபுரம் சென்றால் மடத்துக்குப் போய்ப் பெரியவரைத் தரிசிப்பதும் உண்டாம். ●

— சித்தார்த்

சுக்ராமுக்கே அல்வா!

முன்பு சுக்ராம் வீட்டைச் சோதனையிட்டபோது கற்றை கற்றையாகக் கரன்சி நோட்டுகள் கைப்பற்றப் பட்டது நினைவிருக்கும். ஒவ்வொரு கட்டிலும் நூறு நோட்டுகளுக்குப் பதில் 98,99 என்று இருக்கக் கண்டு அதிகாரிகளுக்கு



வியப்பு. சுக்ராமிடமே கேட்டபோது அவர், "பண்டல்கள் என்றால் அவற்றில் எண்ணிக்கை சரியாக இருக்கும் என்று நம்பித்தான் வாங்கி வைக்கிறோம். எனக்கே இந்தத் தில்லுமுல்லு இப்பொழுதுதான் தெரிகிறது. இந்த உலகத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது?" என்றார் விரக்தியாக!

நன்றி: "அலைகள்"

தகவல்: அ. ஷண்முகசுந்தரம்

சென்ற வாரம்...

எம்.ஏ. முடித்துவிட்டு, வேலை தேடும் சக்திவேல். அன்பே வடிவாக அவனது பெற்றோர். அவர்களைத் தவிர, அவனாகத் தேடிக் கொண்ட மற்றொரு ஆறுதல்- செவ்வந்தி! வாய்க்கால் கரையில் செவ்வந்தியைச் சந்திக்கிறான். ஏதும் பேசும் முன் ஒரு குரல், புதரிலிருந்து வருகிறது...



2

செவ்வந்தி தாழம் புதரைப பார்த்தாள். காற்று சிறுமணலை அள்ளி அள்ளித் தாழம்புதரில் வீசியது. அது ஒழுகுகிற இரைச்சல். அது இரைச்சலாய் இல்லை. ஒரு சமயம் யாரோ உள்குரலில் பாடுவது போல இருக்கும். ஒரு சமயம் யாரோ கிசுகிசுப்பது போல இருக்கும். ஒரு சமயம் பச்சைக் குழந்தையின் அழுகுரலாக இருக்கும். செவ்வந்தி முகத்திலிருந்த சிரிப்பு நகரவே இல்லை. சக்திவேல் பின் கையைக் கட்டிக் கொண்டு, கீழ் உதட்டைக் கடித்த படி, சற்று நேரம் படித்துறையைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். படித்துறையில் மொத்தம் எட்டுப்படிகள். இப்போது நாலு தான் தெரிகிறது. நாலு தண்ணீருக்குள் போயிற்று. இந்த நாலும் பட்டை பட்டையாய் நல்ல அகலம். பளபளவென்று மின்னும் கருங்கல். ஒரு பச்சைப் பிசுக்கு இல்லை. ஒரு பாசி நூல் படரவில்லை. எத்தனை கால்பட்டதோ? எத்தனை குடங்கள் உரசியதோ மினுமினுவென்று ஒரு மின்னல்! எல்லாம் தண்ணீர் வாகுதான்.

இந்தத் தண்ணீர் வாகுதான் செவ்வந்தியோ? செவ்வந்தி அழகு அழகு என்றால் கன்றுக்குட்டி மாதிரி அழகு. கொழு கொழுவென்ற கன்னுக்குட்டி. துள்ளலும் துடிப்புமான



செவ்வந்தி

பாரதிபாலன்

அழகு. வயசழகா? மனசழகாவென்று தெரியவில்லை. முகத்தில் அப்படி ஓர் அழகு. குறுகுறுவென்ற கண்ணில், செதுக்கிய மூக்கில், இப்படிச் சொல்லி வைத்தாற்போல் எல்லாவற்றிலும் அழகு. இது அபூர்வம்தான். ஒரு முறை பார்த்ததும் கண் நிறைந்ததோ மனசு நிறைந்ததோ என்று இருக்க முடிவதில்லை. திரும்பவும் ஒரு முறை பார்க்க வேண்டும். பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.


செவ்வந்தி வாய்க்காலின் நீரில் கணுக்கால் அளவு நின்று கொண்டு, குடத்தால் நீரை இப்பாலும் அப்பாலும் ஒரு தட்டுத் தட்டினாள். பின்பு குடத்தின் வாயை நீரிடம் காட்டினாள். கொட கொடவென்ற கூச்சலோடு நீர் குடத்திற்குள் தாவிற்று. குடத்தைச் சுமந்து கொண்டு படித்துறையில் ஏறினாள். சக்திவேல் அதே காட்சியின் நடுவே தான் நின்று கொண்டிருந்தான். லேசாக, மிக லேசாகத் தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அது பூ வீசுகின்ற பார்வையல்ல. புதிர் போடுகின்ற பார்வை இல்லை. உதட்டை ஈரப்படுத்தாமல், உள்ளத்தைத் திறக்கின்ற பார்வை. எல்லாவற்றையும் விட அந்தப் பார்வையில் நேர்மை இருக்கும். அவள் பார்வையை ஒரு போதும் ஆயுதமாகப் பயன்படுத்தியது கிடையாது. அதனாலே அதை வேண்டாம் என்று விலக்கித் தள்ள முடியாது. அதற்கு அத்தனை வலு. சக்திவேல் அந்தப் பார்வையை அனுபவித்தான். அவன் மனம் துள்ளிற்று. அது விடலைத் துள்ளல் இல்லை.

செவ்வந்தி சட்டென்று நகர்ந்து விட்டாள். எத்தனை நாளைக்குத் தான் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருப்பது? சரசரவென்று நடந்தாள். காலடியில் இலைச் சருகுகள் நொறுங்கின!

வாய்க்காலின் வலது கோடியில் ஒரு பிள்ளையார் கோவில். கோவில் என்றால் வர்ணம் பூசிய கோபுரமில்லை. காண்டா மணியும், தேக்கில் இழைத்த கதவும் கொண்ட கட்டடமில்லை. ஒரு மேடை. அகலமான மேடை. பாளம் பாளமாய்க் கருங்கல் பதித்த மேடை. செம்மண் பட்டையும் வெள்ளைச் சுண்ணாம்பும் பூசிய மேடை. மேடை நடுவில் அரசும் வேம்பும் ஒன்றோடு ஒன்றாய், ஒரே பிறப்பாய் இருந்தது. அதனடியில் ஒரு விநாயகர். நாலடி உயரம். நல்ல அகலம். தினசரி விநாயகருக்குச் செவ்வந்திதான் நீர் ஊற்றுவாள். குடம் குடமாய் ஊற்றுவாள். விநாயகர் உடம்பில் ஒரு எண்ணெய்ப் பிசுக்கு இருக்கப்படாது. அவள் சாமி கும்பிடும் தினுசே வேறு. படபடவென்று, ஓட்டமும் நடையுமாய் கோயிலைச் சுற்றி. அவளுக்கு எதையும் சுழிக்கத் தெரியாது. உக்கிபோடுகிறேன் என்று விசுக்கு விசுக்கு என்று பாதி உடம்பை மட்டும் குறுக்கி எழுந்து கண் மூடிச் சிறிது நேரம் நிற்பாள். சிறிது நேரம் என்பது ஐந்து நிமிஷமோ, பத்து நிமிஷமோ. சில நேரம் அது இருபது நிமிஷமாகக் கூட நீளும். இன்றுதான் என்றில்லை. தினமும் இப்படித் தான். சக்திவேல் ஒரு பார்வை அவளையும் மறுபார்வை வாய்க்காலையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு செடியும், ஒவ்வொரு கொடியும் தலையை நீரில் தொங்கப் போட்டுக் கொண்டு கனவு கண்டு கொண்டிருந்தது!

செவ்வந்தி குளித்து முடித்து, நெற்றியில் திருநீரு பூசி ஈரமும் பக்தியும் சொட்டச் சொட்ட வந்தாள். தெரு முழுக்க வெயில்.





சுளீரென்று முதுகைக் கடித்தது. அம்மா வீட்டு வாசலில் அடுப்பு மூட்டிவிட்டாள். அவளைச் சுற்றிலும் ஒரு கூட்டம். கால், அரை, முக்கால், முழுசு என்று வாண்டுகள் கூட்டம். ஒன்றுக்குக் கொடுவாய் ஒடுகிறது. ஒன்று உட்கார்ந்த நிலையிலே தூங்குகிறது. ஒன்று வெயில் தாளாது உடம்பை அசைக்கிறது. எல்லோருக்கும் அம்மாவின் அடுப்பு முன்புதான் விடியும். பணியாரம், ஆப்பம் என்று ஆளாய்ப் பறக்கும். இந்தப் பணியாரத்திற்கும் ஆப்பத்திற்கும்தான் விடிந்து விட்டாற்போல் ஒரு பரபரப்பு!

"என்ன செவ்வந்தி அதுக்குள் போயிட்டு வந்துட்டியா?" ஒருத்தி செவ்வந்தியை வழி மறித்தாள்.

"இப்பத்தேன் விடியுதாக்கும்?"

"உனக்கென்னடியம்மா ஒத்தைக் கட்டை. நாங்க அப்படியா? விடிஞ்சதும் ஒண்ணு, ஒண்ணுக்கு வருதுங்கும். ஒண்ணு, வெளிக்கு வருதுங்கும், ஒண்ணு பசிக்குதுங்கும். இதுகளைப் பார்க்கிறதுக்கே பொழுது சரியா இருக்கும்!"

"வெள்ளணமா எந்திரிக்கணும், மதினி!"

"எங்க, படுக்கவே சாமம் ஆயிடுது."

"ஏழுக்கே வேலையெல்லாம் ஒழிச்சுடுறீங்களே. படுக்க வேண்டியது தானே மதினி. உங்களை யார் பிடிச்சு வெச்சிருக்கா?"

''இதை உங்க அண்ணங்கிட்டச் சொல்லு.''

செவ்வந்திக்கு உதட்டோரம் ஒரு சிரிப்புச் சுழி யிட்டது. சரசர வென்று நடந்தாள். வாசலில் நுழையும் போது, அம்மா தலையை மட்டும் உயர்த்திப் பார்த்தாள். அவளைச் சுற்றிலும் புகை. பச்சை வாழை மட்டையைப் போட்டு எரிக்கிறாள். காய்ந்த மட்டை என்றால் மடமடவென்று எரியும். காற்று வேறு வீசியது. வீடு முழுக்கப் புகை ஓடியது. செவ்வந்திக்கு எரிச்சலாக இருந்தது.

"செவ்வந்தி, அந்த சில்வர் கும்பாவை எடு."

"எதுக்குமா?"

"நீ, சாப்பிடலை?"

''வேண்டாம். நான் பழைய சோறு சாப்பிடுறேன்.''

"தலைக்கு ஊத்திட்டு எதுக்கும்?"

"வேண்டாம்."

"சொல் பேச்சுக் கேட்டாத்தானே?"

செவ்வந்தி உடை மாற்றினாள். ஈரத் துணிகளை, எரிப்பதற்காக வாங்கிவைத்திருந்த பருத்தி மாரில் விரித்து விட்டாள். அடிக்கின்ற வெயிலில் அஞ்சு நிமிஷத்தில் காய்ந்து உதிர்ந்து விடும். ஒரு சில்வர் தட்டில் பழைய சோறைப் போட்டாள். கெட்டியாகத் தயிரை விட்டுப் பிசைந்தாள். வற்றலும் மாவடுவும் எடுத்து வைத்துக் கொண்டாள். அன்றைய பொழுது அற்புதம் தான். அவளுக்குப் பழைய சோறு ரொம்பப் பிடிக்கும். ஆனால் அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. அவளுக்குக் காலையில் ஆப்பமோ, அடையோ தான் வேண்டும். ருசியாகச் சமைக்கத் தெரிந்தவர்களுக்கு, ரசித்துச் சாப்பிடத் தெரியாது. ரசித்துச் சாப்பிடுபவர்களுக்கு ருசியாகச் சமைக்கத் தெரியாது, என்பார்கள். அம்மா இரண்டிலும் கெட்டி!

"அப்பா எங்கம்மா?"

"உரம் ஏத்திட்டுப் போகணும்னார்."

"எப்ப வருவார்?"

"யார் கண்டா?"

''அவருக்கு எதுனா எடுத்து வைக்கணுமா?''

''சோறுதேன் கேட்பாரு. கொஞ்சம் எடுத்து வை.''

"எந்த வயலுக்குப் போயிருக்கார்?"

"எனக்கென்னடி தெரியும். நான் வயலைக் கண்டேனா? வரப்பைக் கண்டேனா?"

அம்மா வயல், வரப்பு வாய்க்கால் என்றெல்லாம் போக மாட்டாள். அவளுக்கு அடுப்பும் அடுப்புப் புகையும்தான். அம்மாவுக்கு எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். ஆப்பம், அடை, பணியாரம், முறுக்கு, அதிரசம் என்று எதையாவது செய்து கொண்டிருப்பாள். அதில் அவளுக்கு ஒரு ஆவல். அடங்காத ஆவல். அந்த ஆவல் தான் அவளை ஆப்பக்காரியாகிவிட்டது. ஊரில் அம்மாவின் பெயர் யாருக்குமே தெரியாது. ஆப்பக்காரி என்றுதான் தெரியும். விடிந்ததும் விடியாததுமாய் ஆப்பம், பணியாரம் என்று வாசலில் உட்கார்ந்து விடுவாள். மதியம் முறுக்கு, அதிரசம் என்று அடுப்புப் புகையில் கரைவாள். அம்மாவின் கை பக்குவம் ஊர் முழுக்க வெளிச்சம். எதைச் செய்தாலும் எப்படிச் செய்தாலும் ருசி. நாக்கைச் சப்புக் கொட்ட விடுகின்ற ருசி. அந்த வித்தைக்கு அம்மா விலை வைத்துவிடுவாள். பாலைத் தயிராக்கி, தயிரை மோராக்கி, மோரைக் காசாக்கிவிடுவாள். செவ்வந்தி நாலு கவளம் சாதத்தை உருட்டி வாயில் போட்டிருப்பாள். சட்டென்று ஒரு மின்னல் சொடுக்கிற்று. பரபரவென்று எழுந்து விட்டாள். கையை அலம்பினாள். நாலு பணியாரம் இரண்டு ஆப்பத்தை ஒரு சில்வர் பாத்திரத்தில் எடுத்தாள். தாவணி முந்தானையால் மூடிக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

"எங்கடீ?"

"சரசு அத்தை வீட்டுக்கு..."

"சாப்புட்டியா...?"

"ம்."

"செத்த பொறு. சூடா எடுத்துத் தர்றேன்."

"இருக்கட்டும்."

"சொல் பேச்சு கேளும்மா!"

"வர்றேன்."

"நீ என்னைக்குச் சொல் பேச்சக் கேட்டே?"

கடகடவென்று தெருவைத் தாண்டினாள். ஏழு எட்டு வைத்தாள். இடது புறம் சக்திவேல் வீடு. அந்தத் தெருவிலே இந்த வீட்டில் தான் மாடி இருக்கிறது. அதில் ஓர் அறையும் இருக்கிறது. மற்ற வீடுகள் எல்லாம் இப்படி அல்ல. எல்லாம் சீமை ஓடும் நெளிவு நெளிவாய் துருப்பிடித்த தகரமும் தான். செவ்வந்தி வேலிக் கதவைத் திறந்தாள். உள்ளே மரக்கதவு பூட்டிக் கிடந்தது. பார்வையை மாடிக்கு ஓட்டினாள். ஜன்னல் திறந்திருந்தது.

"அத்தே..."

"......"

"அத்தே..."

"......"

"யாரது?"

"நான் தான்..."

"செவ்வந்தியா?"

"குளிக்குறீங்களாக்கும்."

"இதோ ஆச்சு. வந்துட்டேன்."

சற்று நேரத்தில் கதவு திறந்தது. குப்



பென்று சோப்பு வாசனை! கூந்தலில் ஈரம் கசிந்தது.

"உள்ளே வா..."

"இந்தாங்க" என்று பாத்திரத்தை நீட்டினாள்.

"எதுக்குமா இதெல்லாம்."

செவ்வந்தி பதில் பேசவில்லை. சரஸ்வதியம்மாள் வாசல் நிலையிலே நின்றிருந்தாள். செவ்வந்தியை வைத்த கண் வாங்காமல் அரை நிமிடம் பார்த்தாள். அவள் முகத்தில் பிரகாசம் கூடிற்று. பின் "வாம்மா" என்று அழைத்துக் கொண்டே விடுவிடுவென்று உள்ளே நடந்தாள். ஈரத்

சொந்தச் செலவில் ஒரு புறவழிச்சாலை!



கோவை நீலம்பூர் துவங்கி மதுக்கரை வரை ஒரு பை-பாஸ் ரோடு தயாராகி வருகிறது. இந்தியாவிலேயே இத்தனை நீளமான பை-பாஸ் சாலை இதுதான். நீளம் 28 கி.மீ. 93 கோடி ரூபாய்ச் செலவிலான இச்சாலையின் பணிகள் இரவு பகல் பாராமல் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சாலையில் ஒரு விசேஷம் என்ன தெரியுமா?

லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் தனது சொந்தச் செலவில் இந்தச் சாலையைப் போட்டு வருகிறது. சாலை போடப்பட்டு முப்பதாண்டுகள் வரை இச்சாலையைப் பயன்படுத்தும் வாகனங்களிடமிருந்து நுழைவுக் கட்டணம் வசூலித்துப் போட்ட பணத்தைத் திரும்ப எடுத்துக் கொண்டு விடும்! அதன் பிறகுதான் இச்சாலையை அரசுக்கு ஒப்படைக்கும்.

படம், தகவல் : **கா.க.வே.**

துணியால் சுற்றிவைத்திருந்த செவ்வந்திச் சரத்தை எடுத்தான். குப்பென்று வாசனை. அவளே செவ்வந்தியின் தலையில் வைத்து விட்டாள். தளதளவென்று தோள்வரை தொங்கியது.

"ஏது அத்தை?"

"வாங்கினேன். பாப்பம்மா கொண்டு வந்தாள். இன்னைக்கு வெள்ளிக் கிழமை யாச்சேன்னு வாங்கினேன். கட்டிவெச்சுட்டுத்தேன் குளிக்கலாம்னு போனேன்."

"சாப்பாடு?"

"இதோ உலை வெச்சிருக்கேன்."

"தொட்டுக்க."

"கீரை. ஜனம்பூக்கீரை. ராவுத்தர் தோட்டத்துல உருவிட்டு வந்தேன். நீ சாப்பிட்டியா?"

"ஆச்சு."

"உங்க வீட்டுலெ என்ன குழம்பு?"

"சோறு. பழைய சோறு."

"ஏன் நாளும் கிழமையுமா பழைய சோறைத் திம்பானேன்?"

"அதுதேன் எனக்கு உசுரு."

"நல்ல பிள்ளையம்மா! உங்க அம்மாக்காரிக்கு நேர் எதிர்!"

அப்போது மாட்டுத் தொழுவத்தில் இருந்து ஒரு குரல். மாடு கத்துகிற குரல். "ம்மா...ம்மா..." என்று அடிவயிற்றுக் குரல். அந்தக் குரல் விட்டு விட்டு வந்தது. "மாடு சினைபிடிச்சிருக்கு. தோ ஒரு எட்டு பார்த்துட்டு வர்றேன்" என்று சரஸ்வதியம்மாள் எழுந்து கொண்டாள்.

செவ்வந்தியின் பார்வை மாடிப்படியேறிற்று. சக்திவேல் வந்திருக்குமா? இன்னுமா வாய்க்காலில் உட்கார்ந்து இருக்கும்? ஒருவேளை மாடியில் வந்து படித்துக் கொண்டிருக்குமோ? அது இருப்பதும் தெரியாது இல்லாததும் தெரியாது. செவ்வந்திக்குக் கேள்வி மனத்தை மொய்த்தது. இல்லை வாய்க்கால் மணலிலே சாய்ந்து விட்டதோ? அறிந்து கொள்ளாவிட்டால் தலை வெடித்து விடும் போல் இருந்தது. இங்கும் அங்கும் பார்வையை ஓட்டினாள். கண்டுபிடிக்க முடியவில்லை. பத்து நிமிடம் இருபது நிமிடமாய் ஓடிற்று. சரஸ்வதியம்மாள் வந்து உட்கார்ந்தாள். அதற்குப் பிற்பாடு பேச்சு இருந்ததே தவிர கவனம் இல்லை. தண்ணீர் குடிக்கப் போவது போல் எழுந்து போனாள். ஒரு அரவமும் இல்லை.

"தம்பியை இன்னும் காணோம்?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். சக்திவேலின் அப்பா வேலுப்பிள்ளை. செவ்வந்தி எழுந்து கொண்டாள். அவர் தலைப்பாகை அவிழ்த்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார். செவ்வந்திக்கு முகம் இலேசாய்ச் சிவந்தது. நாணம் ஏறிற்று.

"சாப்பிடும்மா..."

"சாப்பிட்டேன் மாமா..."

"அத்தே, நான் அப்புறமா வர்றேன்."

"ஏன், இரும்மா..."

இந்தக் குரல் அவள் காதை எட்டவில்லை. நாலு கால் பாய்ச்சலில் ஓடினாள். தெருவைத் தாண்டி வீட்டிற்குப் போனாள். வாசலில் அம்மா இல்லை. அடுப்பு இல்லை. அள்ளி எறியப்பட்ட சாம்பல் தடம் மட்டும் இருந்தது. சிதறிக் கிடந்த ஒன்றிரண்டு பணியாரத் துகள்களைக் கோழிகள் கொத்திக் கொண்டிருந்தன. வாசலில் அந்தச் செருப்பு! டயர் செருப்பு! ராமர் பாதுகை மாதிரிச் செருப்பு! பளபளவென்று மெருகேற்றப்பட்டிருந்தது. அந்தச் செருப்பைப் பார்த்ததும் செவ்வந்தியின் முகம் சிறுத்துப் போயிற்று!

(தொடரும்)

நடிப்பு: **பார்கவி**

படம்: **யோகா**



நிலவில் குடியேற முடியுமா?

சில நாட்களுக்கு முன்பு செவ்வாய் கிரகத்தில் உயிரின வாழ்வை ஆராய பாத்-பைண்டர் கலம் ஏவப்பட்டது அல்லவா...?

அதே விதமாக நிலாப்பரப்பை ஆராய அமெரிக்கா ஏவிய விண்கலம் லூனார் பிராஸ்பெக்டர் (LP) குறிப்பாக, நிலாப் பரப்பில் ஹைட்ராஜன் உள்ளதா என உறுதி செய்வது இந்த விண்கலத்தின் முதல் பணியாய் இருந்தது. நிலாவில் LP மேற்கொண்ட முதற்கட்ட நடவடிக்கைகளில் கிடைத்த புகைப் படங்கள், நிலாவின் தென் மற்றும் வட துருவங்களில், ஐஸ் கட்டிகளாய் இறுகிப் போன நீர் ஏரிகள் இருப்பதைப் பறை சாற்றியிருக்கின்றன.

LP கலம், சந்திரனைக் கடந்து சென்றபோது, சந்திரனின் வட மற்றும் தென் துருவப் பகுதிகளில், ஆயிரமாயிரம் கிலோ மீட்டர் பரப்பு கொண்ட இருண்ட சுரங்கம் போன்ற பெரும் பள்ளத்தாக்குப் பகுதிகளில், அங்குமிங்குமாக, ஐஸ் கட்டிகளாலான ஏரிகள் சிதறிக் கிடப்பது அறியப்பட்டிருக்கிறது.

புத்தம் புதிதாய்க் கண்டறியப்பட்டுள்ள (அல்லது உருவாக்கப்பட்டுள்ள?) ஏரிகள் ஐஸ் ஏரிகளே என்பது உறுதிதான். ஆனாலும், H_2O எனும் தண்ணீருக்கான வேதிக்கலவையின் அறிகுறி மிகக் கம்மியாகத்தானிருக்கிறது! 'தண்ணீர்தான் இது' என்று நிரூபணமாகும் பட்சத்தில், தண்ணீரும் அதனால் ஹைட்ராஜனும் ஆக்ஸிஜனும் நிலாவிலேயே கிடைப்பது நிச்சயமாகி விடுகிறது. அப்போது மனித வாழ்க்கை அங்கு சாத்தியமாகுமோ இல்லையோ, நீரின் இருப்பினை முக்கியமாய்க் கொண்டு இயங்கும் பல நிலா - ஆய்வு மையங்களை நிச்சயம் அங்கு உருவாக்கி விடலாம்.

ஹைட்ராஜன், ஆக்ஸிஜன் உதவியோடு, இம்மையங்கள், நிலாவிலேயே ராக்கெட் எரிபொருளைத் தயாரிக்கலாம்! இதையடுத்து - பூமியிலிருந்து அனுப்பப்படும் விண் கலங்கள், சந்திரனில் தயாரிக்கப்படும் எரி பொருளை மீண்டும் நிரப்பிக் கொண்டு, மேலும் பற் பல கோடி கிலோமீட்டர் தூரம் சென்று, அண்ட சராசரங்களை ஆராய லாம்! ⊙

— கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

விசாலம்

பத்மா ரவிசங்கர்

17-9-96 :

"விசாலம்?"

"என்ன...?"

"நீ இன்னும் முடிவு சொல்லலியே?"

"யோசிச்சுக்கிட்டு இருக்கேன்."

"யோசிச்சது போதும்! சட்டுனு சம்மதம்னு சொல்லு. முழுசா மூணு மாசம் கூட உன் திருமண வாழ்க்கை நிலைக்கலை."

"ப்ச. எனக்குத் தாலி கட்டின பாவம்தான் சந்துரு அகாலமா இறந்துட்டார். என் துரதிர்ஷ்டம் உங்களையும் –"

"நான்சென்ஸ்! இந்த யுகத்துல என்ன பேச்சு இது! சந்துரு இறந்து ரெண்டு வருஷம் ஆச்சு. இனியும் வாழ்க்கையை வீணடிக்கலாமா? மகிழ்ச்சியா வாழத்தான் வாழ்க்கை."

"........................."

"பெங்களூர்லருந்து மாற்றலாகி நான் இங்கு வந்தது என் அதிர்ஷ்டந்தான். 'என்' விசாலத்தைச் சந்திக்க முடிந்ததே! சரி. இவ்வளவு அழகான உனக்கு அதென்ன விசாலம்னு பழங்காலப் பெயர்...?"

"பேருல என்னங்க இருக்கு?"

"மனசுதாங்கிறியா?"

"ஊம்."

"எனக்கும் விசால மனசுதாம்மா. உன் மாதிரி ஒரு பெண்ணைத் திருமணம் செய்யணும்தான் மனசு அலை பாய்ஞ்சுக்கிட்டிருந்தது. மாற்றலாகி நான் இங்கு வந்து நாலு மாசமாச்சு. இன்னும் ஒத்துக்காம டபாய்க்கிறியே..."

"இன்னும் ரெண்டொரு நாள் போகட்டும்."

"இப்படியே காலத்தைக் கடத்து. இதுல யோசிக்க என்ன இருக்கு? கடந்த கசந்த காலத்தைச் சுத்தமா மறந்துரு. புதுசா வாழ்க்கை தொடங்குவோம் விசாலம். ரெண்டு பேருக்கும் ஒரே ஆஃபீஸ். நிரந்தர வருமானம். காலத்துக்கும் கஷ்டமில்லாத வசதியான வாழ்க்கை உத்தரவாதம்."

"சரி சரி. இப்ப ஆஃபீஸ் வேலையும் கொஞ்சம் பார்ப்போமாங்க..."

3-10-96 :

"அடடா. இதென்ன கால்ல விழுந்துக்கிட்டு... இந்தக் கட்டுப்பெட்டிச் சம்பிரதாயம் எல்லாம் எனக்குப் பிடிக்காது விசாலம்."

"ஸாரி! உணர்ச்சியில எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலைங்க. நன்றி பிரவாகமாகுது."

"உளறாம இப்படிப் பக்கத்துல வந்து உட்காரு டியர். என் திட்டத்தைக் கேளு. என் சம்பளம் குடும்பம் நடத்தறதுக்குப் போதும்; தாராளம். உன் சம்பளத்தை அப்படியே முழுசா பாங்குல போட்டுக்கிட்டு வருவோம் என்ன... சொந்த வீடு, கார், ஏசின்னு ஒவ்வொண்ணா வாங்கி அசத்தறேன் பாரு. எப்பவுமே நான் பேசறதுல, செய்யறதுல ஒரு நியாயம் இருக்கும் விசாகண்ணு."

"ஐ!"

"என்ன... என்ன?"

"சந்துருவும் இப்படித்தான் விசான்னு கூப்பிடுவாரு!"

"அப்ப 'விசா' இனி வேணாம் விசாலம்!"

5-10-96 :

"இந்த ஃபோனை ஏன் இப்ப கழட்டறீங்க?"

"இது சந்துரு வாங்கினதுன்னு நேத்து சொன்னியே... என்னைத் தப்பா நினைக்காதே விசாலம். நான் ரொம்ப பொஸஸிவ்! இனிமே சந்துரு ஞாபகம் உனக்கும் வேணாம்; எனக்கும் வேணாம்! நான் சொல்றது நியாயமாப்படுது இல்லியா..."

"........................."

"டட்டடாய்ங்! சூப்பரா வேற ஒண்ணு வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு."

13-10-96 :

"புதுசா இது என்ன டிஷ் விசாலம்?"

"புதுசில்லை. பழசுதான். இது நல்லாருக்கா? சந்துரு சொல்லிக் கொடுத்தது..."

"சகிக்கலை. இனிமே இதைச் செய்யாதே.

விசாலம்! ஒரு விஷயம்..."

"எ... என்ன?"

"சந்துருவுக்கு அது பிடிக்கும்... அப்படிச் செய்வாருன்னு சும்மா சந்துரு புராணம் பாடாதே. எனக்குப் பிடிக்கலை. புரியுதா?"

15-10-96 :

"இந்தப் புடைவை நல்லாருக்கு விசாலம்."

"பச்சைக் கலர்னா –"

"சொலலாம ஏன் பாதியில் நிறுத்திட்டே?"

"ஒண்ணுமில்லை. எ...எனக்கு ரொம்பப் பிடிக்கும்னு சொல்ல வந்தேன்!"

25-10-96 :

"என்ன ஒரே குஷியா இருக்கிங்க?"

"போனஸ் அறிவிச்சுட்டாங்க!"

"அதான் அந்த ஸ்பெக்ஸ் மெஸேஜா?"

"ஆமா விசாலம். இந்த வருஷத்துலருந்து எனக்கு மட்டும் இரட்டை போனஸ் – உன்னுதை சேர்த்து! ம்ம்... என்ன வாங்கலாம்..."

5-11-96 :

"எவ்வளவு சூடு! உன் போனஸ்ல சீக்கிரமா ஒரு ஏசி வாங்கி வெச்சிடணும்... அட! இந்த டிராயிங்ல சந்துருன்னு கையெழுத்துப் போட்டிருக்கு!"

"அவர் வரைஞ்சதுதான். ஃபிரேம் போட்டு எனக்குப் பரிசாத் தந்த படம் இது."



"முதல்ல இதைக் கழற்றி எறி! மறுபடி நான் எச்சரிக்கை செய்யறேன். சந்துரு தொடர்பான எதுவும் இங்கே வேணாம் விசாலம்."

"........................"

"என்ன கோவமா? முதல்ல என்னைப் புரிஞ்சுக்க. நான் கெட்டவன் இல்லை விசாலம். கடந்த காலத்தைச் சுத்தமா மறந்துடணும்னு ஆரம்பத்துலியே சொன்னேன் இல்லையா... இது புது வாழ்க்கை. உன் நினைவு முழுசும் நான்தான் இருக்கணும். சரிதானே? எப்பவுமே என் பேச்சுல ஒரு நியாயம் இருக்கும் விசாலம்."

6-11-96 :

"என்ன விசாலம்... ஆபீஸுக்குக் கிளம்பலியா? உடம்பு ஏதும்..."

"நல்லாத்தான் இருக்கேன்!"

"பின்னே?"

"வேலையை விட்டாச்சு!"

"என்னது! திடீர்னு என்ன குண்டைத் தூக்கிப் போடறே?"

"சந்துரு அகாலமா இறந்ததுனாலேதானே இந்த வேலை கிடைச்சது... அவரை ஞாபகப்படுத்தற எதுவும் உங்களுக்குத்தான் ஆகாதே... இனி உறுத்தல் எதுவும் இல்லாம நிம்மதியா இருங்க! எப்பவுமே நம்ம பேச்சு, செயல்ல ஒரு நியாயம் இருக்கணும்! சரிதானே?"

"........................!" ●

வாழ்வை உயர்த்தும் மந்திரச்

நமது பாரம்பரியம் நமக்கு சில குணங்களைத் தருகிறது. "அவர்கள் குடும்பமே எல்லோரும் அப்படித்தான், சாதுவானவர்கள்! என்று சொல்கிறோம். 'அவர்கள் பாரம்பரியமே நன்கு படித்தவர்கள், நல்ல கல்விமான்கள்' என்கிறோம். அது அவர்களது பாரம்பரியம் தந்த பரிசு. நம்முடைய தந்தை, தாய், நமது பாட்டனார் என்று அவர்களுடைய குணங்கள் நம்மிடம் பிரதிபலிப்பதை நாம் காணலாம். "விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா?" என்று கேட்கிறார்களே அதுதான் இந்தப் பாரம்பரியம். சோளம் போட்டால் சோளம்தான் விளையும் என்கிற அடிப்படை; அதுதான் பாரம்பரியம்.

அடுத்து சூழ்நிலை. நம் வாழ்வில் ஏற்படுகின்ற பல சூழ்நிலைகளால் நாம் ஒரு புதிய பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருக்கிறது. பழைய பாதை இனி உதவாது என்ற கடினமான முடிவுக்கு வருகிறோம். அதாவது நமது வாழ்வைத் திருப்பும் – திசை திருப்பும் முடிவுகளை எடுக்கிறோம். சூழ்நிலை நம்மை உருவாக்குகிறது.

நான் சீர்காழி சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் போய்ச் சேர்ந்தேன். ஓராண்டு. பி.எஸ்ஸி பட்டம் எடுத்த பின் எல்லாம் நன்றாக இருந்தது. புதிய அனுபவம். நல்ல ஆசிரிய நண்பர்கள் இருந்தார்கள். ஆறாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை விஞ்ஞான பாட ஆசிரியர் வேலை. மாணவர்கள் – சிறுவர்கள், இளைஞர்கள். எனக்கோ வீடு நாலு மைல் கடந்து வைத்தீஸ்வரன் கோவிலில். ஆனாலும் அந்தப் பள்ளியில் நான் தொடர்ந்து ஆசிரியர் வேலை பார்க்க முடியாது. காரணம் நான் ஆசிரிய பயிற்சி பெறவில்லை. என்னிடம் பி.டி. பட்டம் இல்லை. அது இருந்தால் தான் நிரந்தரமாக ஆசிரியர் வேலை பார்க்கலாம். எனவே நான் மேலே 'பி.டி.' படிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நான் வேறு வேலை தேடிக் கொண்டிருந்தேன். அடுத்த ஆண்டு அரசாங்க வேலை கிடைத்தது. குடந்தை அரசினர் கல்லூரியில் வேதியலில் ஆய்வுக்கூடத்தில் பாடம் சொல்லிக் கொடுப்பவராக. இது கல்லூரி; ஆக உயர்நிலைப்பள்ளியிலிருந்து ஒரு படி மேலே. மகிழ்ச்சியுடன் போய்ச் சேர்ந்தேன்.

ஆய்வுக்கூடத்தில் மாணவர்களுக்குச் சோதனைகளைச் செய்து காட்ட வேண்டும். சோதனைக் கூடத்தில் பல பரிசோதனைகள் மூலம் நாம் ரசாயனப் பொருள்களின் குணங்களை அறிந்து கொள்ளலாம். வேதியல், அதிகம் செய்முறைப் பாடம். பொருட்களின் விசித்திரமான மற்றும் இயல்பான குணங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

நான் அங்கே ஐந்தாண்டுகள் வேலை பார்த்தேன். அங்கும் ஒரு பிரச்னை. அதாவது பி.எஸ்ஸி பட்டத்துடன் இருந்தால் ஆயுள் பூராவும் நாம் அதே நிலையில் சோதனைக்கூட ஆசிரியராகக் காலத்தைக் கழிக்க வேண்டியதுதான்! இது என்னை மீண்டும் பிடித்துத் தள்ளியது – அதாவது மேலே படிக்க வேண்டிய கட்டாயத்தில்!

இதன் விளைவாக நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேதியலில் முதுநிலைப் படிப்புக்காக போய்ச் சேர்ந்தேன். அங்கே சேர்ந்ததும் அங்கே எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் பாலையாவைப் பார்த்தேன். அவர் அமெரிக்கா சென்று புகழ் பெற்ற 'ஸ்டான்போர்டு' பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்று விட்டு வந்திருந்தார். அவர் பாடம் சொல்லிக் கொடுத்த விதம் என்னை மிகவும் கவர்ந்தது.

இதுவரையில் நான் படித்த விதம் – ஆசிரியர்கள், புத்தகத்தில் இருப்பதைத் தெளிவாக விளக்கிச் சொல்லிக் கொடுப்பார்களே தவிர, வேறெந்த வித தாக்கமும் இருந்ததில்லை. ஆனால் பாலையா அவர்களோ நம் மனத்தில் வேதியல் பொருள்களில் இருக்கும் எலக்ட்ரான்

களை ஓட விட்டார்! ஆட விட்டார்! இதை அதுவாக மாற்றினார்! அதாவது எலக்ட்ரான் என்பது அணு



சொந்கள்!

விற்குள், அணு மையத்தைச் சுற்றி ஓடும் மிகச் சிறிய அலை போன்ற துகள். மைக்ராஸ்கோப்பில்கூட நாம் பார்க்க முடியாது. இப்படி கண்ணுக்குத் தெரியாத அணுத்துகள்கள், எப்படி மேகக் கூட்டம் போல் – வால் நட்சத்திரம் போல் – சுற்றுகின்றன, மற்ற பொருள்களின் எலக்ட்ரான்களுடன் சேர்கின்றன, பிரிகின்றன என்று அவர் சொன்னால் நேரம் போவதே தெரியாது! ஆர்வத்துடன் சொல்வார்; பேசுவார். அவரது கண்களிலும் பேச்சிலும் அந்த ஒளி, அந்த உற்சாகம் இருக்கும்! ஏதோ ஒரு மனிதன், அவற்றுடன் உறவாடுவது போலவும் – நாம் உறவாட முடியும் என்பது போலவும் - அவற்றை நாம் விரும்புகிறபடி கையால் எடுக்கலாம், மற்றவற்றுடன் சேர்க்கலாம் என்பது போன்ற பிரமையில் எல்லோரையும் ஆழ்த்தி விடுவார். அதில் நான் சொக்கிப் போனேன்!

எனது பேராசிரியரை அமெரிக்கா சென்று இந்தியா திரும்பி, இந்தியப் பல்கலைக் கழகங்களில் வந்து பாடம் சொல்லிக் கொடுக்கும் ஒரு முதல் தலைமுறை என்று சொல்லலாம். 1950ன் துவக்க காலம் அது. அதற்கு முன் நான் இளநிலைப் பட்டம் படித்தபோது அண்ணாமலையில் வேதியலில் ஆராய்ச்சி என்று யாரும் செய்யவில்லை. ஆனால் இவர் வந்தவுடன், அங்கே பல மாணவர்கள் புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தில் இரவு பகலாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். ஆராய்ச்சிக்கூடத்தில் விடிய விடிய மின் விளக்கு எரியும். ஏதோ மனிதத் திறமைகளின் புதிய எல்லைகளைத் தொடும் தேவலோகம் போல ஒளிமயமாக அது காட்சியளித்தது.

"படிப்பு இத்துடன் முடிவடைவதில் அர்த்தமில்லை. படித்தால் டாக்டர் பட்டத்திற்குப் படிக்க வேண்டும். அதுவும் அமெரிக்காவில் படிக்க வேண்டும்" என்ற எண்ணம் என்னுள் விழ ஆரம்பித்தது.

ஆசிரியர்கள் ஒரு மாணவனது வாழ்க்கையை எப்படி மாற்றி விடுகிறார்கள், கவனியுங்கள். ஒரு சொல், ஒரு உற்சாகம், ஒரு சிறு பாராட்டு, அவர்கள் செய்த சாதனையின் ஒரு சிறு விளக்கம் – அதுதான் ஒரு இளம் உள்ளத்தில் எத்தகைய பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது!

சமீபத்தில் ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகையில் படித்தேன். ஒரு பத்திரிகாசிரியர் எழுதி இருந்தார். பள்ளியில் படிக்கும்போது ஒரு கதையைப் படித்துச் சொல்லி அதன் கடைசி அத்தியாயத்தை மாணவர்களை எழுதச் சொன்னார்களாம். அந்த இளைஞர் எழுதி இருந்த பரீட்சைத்தாளில் ஆசிரியர்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

ஒரு குறிப்பு எழுதி இருந்தார். என்ன தெரியுமா? "இது மிக நல்ல கற்பனை" என்று. "நான்கு வார்த்தைகள்! மறக்க முடியாத வார்த்தைகள். நான் எழுத்தாளன் ஆனேன்!" என்று எழுதி இருந்தார் அந்த பிரபல பத்திரிகாசிரியர்.

சூழ்நிலை - அண்ணாமலைப் பல்கலைக் கழக சூழ்நிலை - எப்படி என் எண்ணங்களை உருவாக்கியது என்று எண்ணிப் பார்க்கிறேன். அங்கே சிறந்த பேராசிரியர் இருந்தார்; நல்ல ஆராய்ச்சி மாணவர்கள் இருந்தார்கள். இதைத்தான் சத்சங்கம் என்று கூறுவார்கள், நம் ஞானிகள். தேடலில் ஈடுபட்டிருக்கும் ஒத்த உள்ளம் கொண்டதுதான் சத்சங்கம். ஞானிகள் தன்னை அறியும் அறிவின் தேடலில் ஈடுபடுகிறார்கள். இங்கே விஞ்ஞானிகள் பொருளின் தன்மையை அறியும் தேடலில் ஈடுபடுகிறார்கள்.

பாரம்பரியம் மட்டும் நம்மை உருவாக்குவதில்லை; சூழ்நிலையும் உருவாக்குகிறது. நமது பாரம்பரியத்தை நாம் அறிந்து கொள்வது நல்லது; அவசியம். அதேபோல நம் சூழ்நிலையைப் புரிந்து கொள்வது அவசியம். இதைத்தான் ஆங்கிலத்தில் (AWARNESS) "விழிப்புடன் இருக்கும் நிலை" "விழிப்புணர்வு" என்பார்கள். அதாவது சூழ்நிலையைப் புரிந்து கொண்டு நாம் அத்துடன் ஒன்றாக வேண்டும்.

சூழ்நிலை என்பது பிரபஞ்ச ஓட்டம்; பிரபஞ்ச லயம். அதுவும் நமது மன ஓட்டமும் - அதாவது நமது மனோலயமும் சூழ்நிலையும் ஒன்றாகும்போது நாம் விரும்பும் காரியங்கள் நிகழ்கின்றன. நமது லட்சியங்கள் எளிதாக நிறைவேறுகின்றன. "எளிதாக" நிறைவேறுகின்றன என்று சொல்வதே தவறு. முயற்சி இல்லாமல் தானே நிறைவேறுகின்றன (EFFORT LESS EFFORT) என்று சொல்கிறார்கள் இதை, நம் ஞானிகள்.

முயற்சி வேண்டியதில்லை என்று சொன்னால் நாம் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால் எல்லாம் தானே நடக்கும் என்பதல்ல இதன் பொருள். நாம்தான் தீர்மானிக்கிறோம். "இந்த சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்! எது நல்லது?" என்று நாம்தான் தீர்மானிக்கிறோம். இந்த முடிவு நம்முடைய முடிவு. சொல்லப் போனால் நம் விதியை நாம்தான் நிர்ணயிக்கிறோம். நாம் எடுக்கும் முடிவுதான் நம் வாழ்வை நிர்ணயிக்கிறது. நாம் முடிவு எடுத்த பின், சூழ்நிலை தானாக நகர்ந்து வந்து நமக்கேற்ப நம்மைச் சுற்றி அமைகிறது.

சூழ்நிலை எப்படி நம்மை நோக்கி நகர்ந்து வரும்? அதை ஏற்படுத்துவதுதான் மனஓட்டம்; நம் மனத்தில் ஓடும் எண்ணங்கள். அது ஒரு ஒழுங்கில் ஜீவதாகமாக ஓடும்போது அங்கே நம்மைக் கறைபடுத்தும் எந்த எண்ணங்களும் நோக்கங்களும் இல்லை. அப்போது உலக நன்மையை நாடி ஓடும் பிரபஞ்ச லயத்துடன் நம்முடைய மன ஓட்டம் - மனோலயம் - ஒன்றுகிறது.

ஜே. கிருஷ்ணமூர்த்தி எழுதுகிறார். இளவயதில் தமக்குக் கற்பிக்கப்பட்ட அறிவுரைகள். அதில் "மேல் நோக்கிய பரிணாம வளர்ச்சியில்தான் இப் பிரபஞ்சம் செல்கிறது. அதுதான் கடவுளின் திட்டம்" என்று எழுதுகிறார்.


நமக்கு ஏற்படும் அறிவுத் தாகம் தவறல்ல. அறிவின் வளர்ச்சியில் - ஞானப் பெருக்கில்தான் - பரிணாம வளர்ச்சி நடைபெறுகிறது. நாம் அறிவின் தேடலில் ஈடுபடுவது உயர்ந்த காரியம்தான்.

"ஆனால் நாம் நம்மை உயர்த்திக் கொள்ளத் தானே நாம் மேல் படிப்புக்கு, ஞானியின் சீடனாகவும் போகிறோம். இது சுயநலமல்லவா?" என்று சிலர் கேட்கக் கூடும். நாம் புரிந்து கொள்ள வேண்டும். "பிற நலத்தில் என் சுயநலமும் அடங்கி இருக்கிறது. இந்த ஊரும் நாடும் நன்றாக இருக்க வேண்டும் என்று நாம் பாடுபடுகிறோம் என்றால் அதில் நமது சுயநலமும் அடங்கி இருக்கிறது. நாடு நன்றாயிருக்கும்போது நாமும் அதன் விளைவாக நல்வாழ்வு பெறுகிறோம்.

வேலைக்காகத்தான் பத்திரிக்கை நிருபர்களாகச் சேர்கிறார்கள். ஆனால் அதில் நாட்டு நலமும் அடங்கி இருக்கிறது. வேலைக்காகத்தான் தாலுகா ஆபீசில் சேர்கிறார்கள். மக்களுக்கு உதவும் பணியும் அதில் பாந்து நிற்கிறது. மகான் அசிசி எழுதுகிறார். "பிறருக்காக வாழ்வதில், தியாகம் செய்வதில்தான் நான் அமரத் தன்மை எய்துகிறேன்" என்று.

கதைக்கு வருவோம்! எனது பேராசிரியர் பாலையா அவர்கள் கொடுத்த உந்துதல்தான் நான் மேலே எம்.எஸ்ஸி என்ற மற்றோர் முதுநிலைப் பட்டம் பெறவும், அமெரிக்கா செல்லவும் காரணமாயிற்று.

அமெரிக்கா சென்றதும், பாரம்பரியமும்



• தாம் ஆய்வு செய்த ஆய்வுக்கூடத்தின் முன்பாக உதயமூர்த்தி

டாக்டர் பட்டத்திற்கான படிப்பை முடித்து ஆராய்ச்சியில் இறங்கியபோது எனது ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வெளி வந்தது.

எனினும் என் மனத்தில் சில எண்ணங்கள் எழுந்தன: புதிய கண்டுபிடிப்புக்கள் எல்லாம் எதில் அடங்கி இருக்கின்றன? சோதனைக் கூடத்தின் உடல் உழைப்பிலா? அல்லது விஞ்ஞானியின் மனத்தில் ஏற்படும் புதிய புதிய எண்ணங்களிலா, அணுகுமுறைகளிலா?

சூழ்நிலையும் என்ன செய்தது என்று நீங்கள் கேட்கலாம். அந்த பாரம்பரிய பலம்தான் என்னை சொந்தத் தொழிலில் இறக்கியது என்று முன்பே எழுதி இருக்கிறேன்.

அமெரிக்காவில் நான் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன் டாக்டர் பட்டம் படிக்க; ஆராய்ச்சி செய்ய. படிப்பு சவாலாக இருந்தது. காரணம் நமது ஊர் படிப்பின் அணுகுமுறையும், அவர்களது அணுகுமுறையும் வேறுபட்டிருந்தது. எல்லாவற்றிலுமே அவர்கள் நம்மை சுயமாகச் சிந்திக்க வைக்கிறார்கள். நமது ஊர்ப் படிப்போ பெரும்பாலும் சொல்லிக் கொடுத்ததை ஞாபகத்துடன் திரும்பச் சொல்லும் முறையாக – விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் கல்வியாக இருக்கிறது.

ஆய்வுக்கூடத்தில் காலையில் 9 மணிக்குப் புகுந்தால் வீடு திரும்ப சகஜமாக இரவு 10-11 மணி ஆகும். சிலசமயம் இரவு இரண்டு மணி நேரம்வரை கூட இருக்கும்படி இருக்கும். புதிய பொருள்களைப் பிரித்தெடுக்க அங்கே 'குளோரோபாம்' (CHLOROFORM) 'மிதிலின் குளோரைடு' (METHYLENE CHLORIDE) போன்ற வேதியல் திரவங்களை உபயோகிக்க வேண்டும். இதற்கான தனி அறைகள் உண்டு. கொஞ்ச நேரத்தில் அறை பூராவும் 'குளோரோபா'மினுடைய ஆவி நிறைந்து விடும். நம்மை அறியாமலே நமக்கு உணர்வு மங்கிப் போகும்; லேசான மயக்கம் ஏற்படும். இப்படித்தான் நான்

இதுதான் கேள்வி. உண்மையிலேயே பெரிய கேள்வி! சோதனைக் கூடத்தின் உடல் உழைப்புதான் புதிய பொருளைத் தருகிறது என்பதிலும், அதன் தன்மைகளையும் விளக்கும் ஆதாரங்களைத் தருகின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

எனினும் இதற்குப் பின்னால் இருக்கும் மனித மனமும், அதன் சிந்திக்கும் திறனும், அணுகுமுறையும்தான் வெற்றிக்கு அடிகோலுகின்றன. இதுதான் பெரிய உண்மை என்று எனக்குப் பட்டது.

உடலால் உழைப்பவர்கள் கொத்தவால் சாவடியிலும் கோயம்பேட்டிலும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அதுவும் தேவைதான். ஆனால் மனித முன்னேற்றத்திற்குப் பெரிதும் காரணமாயிருப்பது மனித மனம்தான்!

எனது ஆராய்ச்சியை முடித்துப் பட்டம் பெற்று வெளியே வந்தபோது இந்தச் சிந்தனைதான் என்னுள் மேலோங்கி நின்றது.

''விஞ்ஞானிகள் எப்படிக் கண்டு பிடிக்கிறார்கள்? அவர்களது எண்ண ஓட்டம் என்ன? அவர்களுக்குள் படிப்படியாகச் செல்லும் சிந்தனா முறை – அணுகுமுறை – என்று ஒன்று இருக்கிறதா?

இந்த எண்ண ஓட்டத்தில் – இந்த ஆராய்ச்சியில் இறங்கினேன். இதுதான் நான் மனவியலில் புகக் காரணம். எண்ணம்! என்னைச் செதுக்கிய எண்ணம்!

(தொடரும்)

சினிமாவில் என்னை அசிங்கப் படுத்தப் பார்க்கிறார்கள்...

– நடிகை சச்சு குமுறல்

நிரந்தர டீவி ஸ்டார் ஆகிவிட்ட சச்சுவை 'மகாராணி செங்கமலம்' சீரியலின் நிறைவு விழாவில் சந்தித்து, தொலைக்காட்சி தங்களின் சினிமா இமேஜை பாதித்ததா... அல்லது சினிமாவில் வாய்ப்பேயில்லையா...?' எனக் கேட்டோம்.



''தொலைக்காட்சியென்ன... சினிமா என்ன? நடிப்பில் எல்லாம் ஒன்றுதான். சினிமாவிலிருந்து டீ.வி.யில் கூடுதலாய் ஒன்றை நன்றாய்க் கவனிக்க முடியும். அது நடிப்பு. சினிமாவில் அது முடிவதில்லை. அதற்கு யாரும் தயாரும் இல்லை. வீட்டுக்குள் நிறையப் பேர் அமர்ந்து பார்ப்பது என்பதால் டீ.வி சீரியல்களை யாரும் தரக்குறைவாய்த் தயாரித்து விடுவதில்லை. இதில் சென்சாரே கிடையாது என்பதால் யாராவது துஷ்பிரயோகம் செய்கிறார்களா...? இல்லையே! இதிலிருந்தே சின்னத்திரை, சினிமாவை விட எந்த வகையிலும் மட்டமில்லை என்று உறுதியாகச் சொல்லாம்.

''ஒரு காலத்தில் தூர்தர்ஷன் மட்டுமே இருந்தது. தனியார் டீ.விக்கள் அதிகமாக புரோக்ராம்கள் செய்வது என்னைப் போல் நடிப்பே வாழ்க்கையாகக் கொண்டுள்ளவர்களுக்கு வரப்பிரசாதம். வாரா வாரம் டீ.வி முன்பு சிறுவர் சிறுமியர் உட்பட பெரிய வர்கள்வரை உட்கார வைப்பதென்பது சாதாரண விஷயமல்ல!

''இதில் கதாசிரியர், நடிகர், டைரக்டர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர் என எல்லோருக்குமான முயற்சி. டீ.விக்கும் சினிமாவிற்கும் உள்ள வித்தியாசம், சினிமா சரியாகப் பயன்படுத்தாததை டீ.வி பயன்படுத்திக் கொள்கிறது - பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. சினிமாவை விட அதிக ஜனங்களை - 'கவர்' பண்ணும் டீ.வி எப்படி மட்டமாகும்...? நீங்கள் சொல்வதுபோல் என் இமேஜ் எப்படி பாதிக்கும்...?

''சிவாஜி சார்.... சுப்பையா சார் மாதிரியான பல 'ஆர்ட்டிஸ்ட்டுகள்'கூட நடித்ததனால் எனது நடிப்பு இப்போது சுடர் விடுகிறது. இப்போதும் 'சச்சு' என்றால் யாருக்குத் தெரிகிறதோ இல்லையோ 'மாண்புமிகு மாமியார்', 'மகாராணி செங்கமலம்' என்று சொல்லிப் பாருங்கள்... எனது வேல்யூ புரியும்.

''அதேபோல் 'அபிநயா கிரியேஷன்ஸு'க்கு' மட்டுமே நான் நடித்துக் கொடுக்கிறேன் என்பது தவறு. வேறு பல டீ.வி நாடகங்களிலும் நடிக்கிறேன். இப்போது சினிமாவிலும் செய்ய ஆசைதான். ஆனால் ஒரு சீன், இரண்டு சீன், கொடுத்து அசிங்கப்படுத்தப் பார்க்கிறார்கள்! அதனால்தான் டீ.வி.யே போதும் என்று திருப்தி பட்டுக் கொண்டிருக்கிறேன்.''

–சந்திப்பு, படம்:
கேயெஸ்வி

● எல்.எம். அபிநாட்சயா.

? வாஜ்பேயின் பெருமதிப்புக்குரியவர் ச.பாபுவா? ஜெ.லலிதாவா?

! பாபுவின் செயல் நமக்குப் பிடிக்கலாம்; பிடிக்காமலும் போகலாம்... ஆனால், வாஜ் பேயினைப் பொறுத்த மட்டில் அவரிடம் ஒரு குறிக்கோள், கொள்கையுடன் கண்ணிய மாக நடந்து கொண்டவர் ச.பாபுதானே தவிர, ஜெ அல்ல. எனவே யாரை பிரதமர் அதிகம் மதிப்பார் என்பது, வெளியே அவர் சொல்லாவிட்டாலும் நமக்குத் தெரியும்.



• காப்பின் நதிமூலம்!



• பத்தோடு பதினொன்று



• 'தேச பிரசங்கம்!'

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? 'வெண்ணெய்யைத் திருடினான்' என்று கண்ணன் மேல் புகார் சொன்னதுபோல் என் மீதும் சொல்கிறார்கள்...' என்று லல்லு பிரசாத் யாதவ் 'ஜோக்' அடிக் கிறாரே?

! 'வெண்ணெய் திருடும் பிள்ளை என் உள் ளம் கவர்ந்ததென்ன...?' என்பது அமரர் கல்கியின் பாடல் வரி. வெண்ணெய் திருடு வது என்பதன் உருவகத்தை உணர்தல் வேண்டும். 'கண்ணனின் களவு நம் உள்ளத் தைக் கொள்ளை கொள்கிறது. மானுடக் களவு அப்படியாகுமா?' என்று வித்தியாசப் படுத்திக் காட்டுகிறார் மூக்கூர்.

● கோபி. நாகராஜன், கலிங்கியம்.

? அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் முதலில் ஒரு வரையொருவர் புரிந்து கொள்ளாததால் பிரச்னை வந்தது. இப்போது ஒருவரை யொருவர் புரிந்து கொண்டு விட்டோம். அதனால் இனிமேல் பிரச்னையே வராது என்கிறாரே இல. கணேசன்?

! தேசிய செயல் திட்டம் என்பது திரைதான்; பின்னால் ஒளிந் திருக்கும் செயல் திட்டம் வேறு என்று எதிர்க் கட்சியினர் கூறியதற்குப் பதிலாக இல. கணேசன் கூறியது: "அது ஒன்றும் ஒளிக்கப் பட்ட செயல் திட்டம் அல்ல; ஒத்திப் போடப்பட்ட செயல் திட்டம்தான்!" - இந்த அம்சத்தையும் அ.தி.மு.கவும் பா.ஜ.க வும் பரஸ்பரம் புரிந்து கொண்டிருக்கின் றனவா?!

● ஜெ. கண்ணன், சென்னை - 101.

? "ஹேமமாலினியின் கன்னத்தைப் போல பீஹாரை மாற்றிக் காட்டுவேன் என்று ஒரு காலத்தில் லல்லு சூளுரைத்தார். ஆனால், இப் பொழுது பீகார், நடிகர் ஓம்பூரியின் கன்னம் போலத்தான் இருக்கிறது" என்று பா.ஜ.கவின் முரளி மனோகர் ஜோஷி பேசியிருக்கிறாரே?

! இரண்டுமே அநாகரிகமான ஒப்பீடுகள் அரசியல்வாதிகளின் உளறல்களுக்குத் தலைசிறந்த உதாரணங்கள்.

● த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? ஆன்மிகமான நாத்திகவாதி என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?

தோழியின் ஸ்ட்ரெச்சரை ஏலம் விட்டால்...?





• மதிப்பை....

! கோயிலுக்குப் போகா விட்டாலும் நேர்மையாக வாழ்கிறவர்களை.

● கே. அனிதா, கோவை-42.

? தோழியின் பிரசித்தி பெற்ற ஸ்ட்ரெச்சரை ஏலம் விட்டால் என்ன விலைக்குப் போகும்?

! ஏலம் விடுகிற அளவுக்கு அதன் உபயோகம் முடிந்து போய் விட்டதாக நினைக்கிறீர்களா என்ன...? எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஆட்சி கலைக்கப்படாது என்றுதான் நம்புகிறேன்.



• ... மதிப்பிட்டால்...

● இரா. கணேசன், சேலம் – 1 ❐

? இனிமேல் தேர்தலில் நிற்க மாட்டேன் என்று வாஜ்பேயி வேதனைப்படும் அளவுக்கு நடந்த கசப்பான நிகழ்ச்சிகள் எதுவாக இருக்கும்...?

! அ.தி.மு.கவுடன் கூட்டு என்று முடிவு செய்தபோதே, வாஜ்பேயி சொன்னார்; 'நேர்மையாகப் போராடிச் சளைத்து விட்டோம். வேறு வழியின்றி இந்த சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொள்கிறோம்' என்று... அந்த விரக்தியே இந்த முடிவுக்கும் காரணமாயிருக்கலாம்.

● திராவிடமணி மேகநாதன், திருபுவனம்.

• உளறல்....

? சோனியாவின் அதிரடி நடவடிக்கையால் காங்கிரஸ் புத்துயிர் பெறுமா?

! காங்கிரஸை சீர்திருத்துகிறேன்; அதன் செல்வாக்கை உயர்த்துகிறேன் என்று எத்தனையோ பேர் தலைமைப் பதவி ஏற்று படுதோல்வி அடைந்தாயிற்று. இப்போது லேட்டஸ்டாக சோனியா. அடிமட்டத்திலிருந்து உள்கட்சி ஜனநாயகம் தழைத்தாலொழிய எந்தக் கட்சியும் உருப்படாது. சோனியா தலைமையே ஜனநாயக ரீதியில் உருவாகாதபோது அவர் எதை சாதித்து விடப் போகிறார்?



• ... ? தாராளமாய்!



● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? இராமதாஸோ, எங்கள் அணிக்குக் கிடைத்த வெற்றி என்கிறார்; ஜெயலலிதாவோ கண் துடைப்பு என்கிறார். எது சார் நிஜம்...? பஸ் கட்டணக் குறைப்பு பற்றிக் கேட்கிறேன்...?

! ஆரம்பத்தில், பொருளாதார நிலையை உத்தேசித்து தைரியமாக 'வில் பவரோடு' ஏற்றப்பட்ட கட்டணம், தேர்தல் தோல்வியின் பயனாய், பயத்தில்தான் குறைக்கப்பட்டிருக்கிறது.

● ஏ.ஆர். முத்தமிழன், திருவாரூர் – 51.

? 'பெர்சனாலிடி' என்றால் அழகா? ஆளுமையா?

! உயர்ந்த எண்ணங்களாலும் அவற்றுடன் ஒன்றிய செயல்களாலும் ஏற்படும் ஆளுமை – அந்த ஆளுமையின் வெளிப்பாடான அழகு... இதுதாங்க personality!

● என். பாலகிருஷ்ணன், மதுரை–1.

? சாதுக்கள்கூட மோதிக் கொள்கிறார்களே...? (ஹரித்துவார் சம்பவம்...)

! எல்லா துறைகளிலும் போலவே சாதுக்களிடையேயும் போலிகள் அதிகமாகியிருப்பது தெரிந்த விஷயம்தானே!

● கே.எம். சுப்ரமணியன், பூனாம்பாளையம் தெற்கு.

? பதிமூன்று நாட்கள் பிரதமராக இருந்த வாஜ்பேயி, தற்போதைய வாஜ்பேயி... என்ன வித்தியாசம்?

'இப்போது பெரும்பான்மையும் இல்லை; பெருமையும் இல்லை! 'தர்பார் நடத்துகிறேன்' என்று கூறிவிட்டு, மக்களை சந்திக்காமலே இருந்து, அவர்கள் சாபத்தைப் பெற்றுக் கொண்டதில் பெருமை என்ன...?

● ரகு, சென்னை–5.

? இந்த வார ஹீரோ யாரு தராசே?...

! ஹீரோக்கள்னு சொல்லுங்க. கான்பூர்ல ஆஸ்திரேலிய பந்துவீச்சை நொறுக்கித் தள்ளி, 131 நிமிடத்துல 100 ரன் எடுத்த சச்சின், கொச்சியிலே அஞ்சு விக்கெட் எடுத்து ஆட்டத்தை நம்ம பக்கம் திருப்பி அசத்தினார்னா, அப்புறம் அஸாரும் ஜடேஜாவும் ஜோடி சேர்ந்து 275 ரன் எடுத்து அசத்தினாங்களே!

❐ ரூ. 50 பரிசு பெறுபவர்: இரா. கணேசன், 54, மடம் தெரு, சேலம் – 1.

வட்ட மேஜை

✉ 'குரு பெயரைக் காப்பாற்றியிருக்கிறார் சரண்' என்ற வார்த்தை நூற்றுக்கு நூறு உண்மை. 'காதல் மன்னன்' படத்திற்குத் தாங்கள் கொடுத்த தீர்ப்பு 'தராசு' முள் போன்று நடுநிலைமையோடு இருந்தது.

திருச்சி – 17, உஷா முத்துராமன்.

✉ பெருந்தலைவர் காமராஜரையே தோற்கடித்தவர்கள்தான் நம்முடைய ஜனங்கள். அதற்காக காமராஜருக்கு வாய்ஸ்ஸே இல்லையென்று சொல்லிவிட முடியுமா? அது போலத்தான், துரதிர்ஷ்டவசமாக கோவை வெடிக்கவும் அனுதாப அலைகளின் தீவிர அபிமானிகளாகிய நம் மக்கள், ரஜினியின் வாய்ஸ்ஸையும் பொருட்படுத்தாமல் போய் விட்டார்கள்! ரஜினியின் வாய்ஸ் எப்படிப்பட்டது என்பதை விரைவில் உணரத்தான் போகிறீர்கள்.

மணக்காடு, சி. தெ. ரஜினி அருள்.

✉ பாபுஜியின் சம்மர் ஸ்பெஷல்.. ஜோக்ஸ் வாசகர்களுக்குக் கிடைத்த குல்பி!

ராமராஜ்ஜியம் கூட வேண்டாம்...

திருச்சி – 14, ராஜி ராதா.

✉ கிரிக்கெட் வீரர் சித்துவின் பேட்டி வெகு ஜோர். அவரைப் பற்றிய வீணான வதந்திகளுக்கு அவரே சரியான சவுக்கடி தந்து விட்டார். சபாஷ் சித்து!

திருமானூர், ஆர். மார்ட்டின்.

✉ தொலைக்காட்சி விளம்பரத்தால் மனபாதிப்படைந்த அப்பாவிப் பெண்ணின் மனப்போக்கை மையமாக வைத்துக் கதை புனைந்த ஆர். சூடாமணி பெரிதும் பாராட்டிற் குரியவர்.. 'ஆசை வழி மனம் செல்ல' சிறுகதை மனநிறைவைத் தந்தது.

வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ ஜெர்மனியில் கடந்த முப்பது ஆண்டுகளில் ஒரே ஒரு தடவை கூட மின்சாரத் தடை ஏற்பட்டது கிடையாது என்ற செய்தியை (ஜோகிந்தர் சிங் – சுயசரிதை) படித்த போது மயங்கியே விட்டேன்!

தூத்துக்குடி, ப. சுகுமார்.

✉ தங்கபாலு பேட்டி என்றாலே வர வர சிரிப்பு நாடகம் மாதிரி ஆகிவிட்டது! 'கோவை குண்டு வெடிப்பு இல்லையென்றால் 15 சதம் ஓட்டு கிடைத்திருக்கும்! 2001-ல் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி! ஹஹா!

கமுதி, ராஜி.

✉ சபாநாயகர் தேர்வில் பி.ஜே.பி. நடந்து கொண்டவிதத்தை எடுத்துக்காட்டி, அடேயப்பா! இதுல இவ்ளோ விஷயம் இருக்கான்னு வியப்படைய வைத்து விட்டது உமது தலையங்கம். கார்ட்டூன் ஒவ்வொன்றும் கனஜோராய் இருந்த துங்கோ!

நல்லத்துக்குடி, கே.வி. சூர்யா.

✉ புயலாக வரும் புதுக்குரல் கவர் ஸ்டோரி கண்டேன். திரைப்படமே இன்னும் வெளிவராத நிலையில் நித்யஸ்ரீ பேட்டியை வெளியிட்டு அசத்தி விட்டீர்களே! சுறுசுறுப்புக்கு மறு பெயர்தான் கல்கி!

சிதம்பரம்-1, ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ நேர்மையாய் நடந்தால் நெடுந்தூரம் போகலாம் என செய்யும் தொழிலை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நலம் தரும் வகையில் கொள்கைப் பிடிப்புடன் செய்து வரும் என்.எம். அவர்களின் பண்பு இமயமாய் உயர்ந்து நிற்கிறது.

திருவண்ணாதபுரம், இ.சு. பாலசுப்பிரமணியன்.

✉ நிலையான ஆட்சியை விரும்பி மத்தியில் பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்தி, அவர்களின் சில ஆரம்ப காரியங்களில் மனம் நொந்து போயிருக்கும் வாக்காளர்களின் எண்ணங்களை உங்கள் தலையங்கம் மூலம் பிரதிபலிக்கச் செய்திருக்கிறீர்கள்! ராமராஜ்யம் கூட வேண்டாம்; சகுனி ராஜ்யத்தில் சச்சரவுகள் முற்றி மற்றுமொரு 'மகாபாரத யுத்தம்' வராமலிருந்தால் சரி!

திருச்சி – 21, கிரிஜா மணாளன்.

✉ தேனியின் அதிசய அரசியல்வாதி கட்டுரையைப் படித்து மெய்சிலிர்த்தேன்.

மோகனூர், கவிமணிசெந்தில்.

கோவையில்: அதிசய அரசியல்வாதி!

த.மா.கா.வைச் சேர்ந்த கோவை மாநகராட்சியின் கவுன்சிலர் ஹேமா ஜெயசீலன் தமது சொத்துக் கணக்கைச் சமர்ப்பித்ததன் மூலம் கோவை அரசியலில் ஒரு பரபரப் பையே ஏற்படுத்தி விட்டார்...

'எப்படி இந்தப் பெண்ணிற்கு இத்தகைய துணிச்சல் வந்தது' என்று அரசு அதிகாரி களே கூட மூக்கில் விரல் வைக்கின்றனர். தமது வருமானம் இவை... சம்பாதித்த சொத்துக் கள்... வம்சாவழியில் வந்தவை... சேகரித்த நகைகள்... வாங்கின வாக னங்கள் இவையிவை... என அத்தனையையும் (தம் கணவரின் வருமானம்... அவர் பெயரில் உள்ள சொத்துக்கள் உள்பட) விலாவாரியாகக் கணக்குக் காட்டி மாமன் றத்தில் தாக்கல் செய்வதென்றால் சும்மாவா...?

"சொத்துக் கணக்கை தாக்கல் செய்யும் யோசனையும் துணிச்சலும் உங்களுக்கு எப் படி வந்தது...?" என்று அவரிடம் கேட்டோம்.

"பலரும் இப்படித்தான் கேட்கிறார்கள்... உள்ளாட்சித் தேர்தல்கள் முடிந்து, மாமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற போதே நான் சொன்ன விஷயம் இதுதான்; செயல்படுத் துவதில்தான் தாமதம். இதில் துணிச்சல் ஒன்றுமில்லை. 'நாம் உள்ளதைச் சொல் கிறோம்; உண்மையாக நடக்கப் போகிறோம்' என்கிற போது இது சாதாரண விஷயம் தானே...?"

"ஆனானப்பட்ட அரசியல் ஜாம்பவான் களே சொத்துக் கணக்குகளைத் தாக்கல் செய்யாத பொழுது, நீங்கள் இப்படிச் செய்திருப்பது அவர்களுக்குத் தர்மசங் கடத்தை உருவாக்காதா? உங்கள் அரசியல் வாழ்க்கைக்கு ஆபத்து நேராதா?"

"நான் இதை அப்படிக் கருத வில்லை. மக்கள் மத்தியில் நாங்கள் புது முகங்கள். எங்களது ஒவ்வொர் அசைவையும் மக்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்ற வருமான வரி செலுத்துபவர்கள் கணக்குகளைக் காட்டும் பொழுது மக்களுக்கு எங்களைப் பற்றிய மதிப்பீடு உயரும். மக் களுக்கு நேரடித் தொடர்புள்ள உள்ளாட்சி கவுன்சிலர்களான எங்களை வைத்தே மக்கள் அரசியலைப் பார்க் கிறார்கள். அரசியலும் எங்களை வைத்தே பின்னப்படுகிறது. அரசியலில் தூய்மையைக் கொண்டு வருவதிலான முக்கிய பங்கு உள்ளாட்சி மன்ற உறுப்பி னர்களுக்கு உண்டு. அதற்கு எங்கள் தூய்மை அவசியம்!"

"உங்கள் கணக்குகளை சமர்ப்பித்தது சரி.. மேயர் உட்பட மாமன்றத்தில் அனைவரும் சொத்துக் கணக்கு காட்ட வேண்டும் என நீங்கள் அறிக்கை விடுவதற்கும், மேடைகளில் பேசுவதற்கும் உள் நோக்கம் ஏதும் இருக்கிறதோ?"

"இல்லை. கோவை குண்டு வெடிப்புக்கு முன்னரே மக்களின் நம்பிக்கையை இழந்து நின்ற உள்ளாட்சி அமைப்பு (கோவை) இப் போது குண்டு வெடிப்பின் பரபரப்பில் அமிழ்ந்து கிடக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கட்சியைப் பலப்படுத்த, மக்களின் நம்பிக் கையைப் பெற எனக்கு வேறு வழி தோன்ற வில்லை. ஒட்டு மொத்தமான நமது உள் ளாட்சிப் பிரதிநிதிகளும் இதைச் செய்தால் பெருமளவு மக்கள் நம்பிக்கையைப் பெறலாம் என்று நான் நினைக்கிறேன்."



சந்திப்பு, படம்:
கா. சு. வேலாயுதன்



குலை நடுங்கச் செய்யும் பூச்சிகள்!

டி.வி., சோப் போன்ற விளம்பரங்களில்தான் என்றில்லை; ஹாலிவுட் சினிமா விளம்பரங்களிலும் நேருக்கு நேராக விளம்பர யுத்தம் தொடங்கிவிட்டது. "ஜுராசிக் பார்க்கில் 170 விஷுவல் எஃபெக்ட்கள்தான்! எங்களுடையதில் 550. தெரியுமா?" என்று மார் தட்டுகிறது Starship Troopers பட விளம்பரம். பல தொழில்நுட்ப சங்கதிகளில் இம்முறை ஆஸ்காருக்குப் போட்டியிட்டு மயிரிழையில் டைட்டானிக்கிடம் தோற்ற படம் இது.

படத்தின் ஹீரோ ஜானி, ராணுவத்தில் சேருவதென்னவோ தம் காதலியை இம்ப்ரெஸ் செய்யத்தான். ராணுவத்தில் அவனது திறமைகள் வெகுவாக வெளிப்படத் தொடங்குகின்றன என்றாலும் மிக துக்ககரமான விபத்தொன்றைப் பார்த்ததும் ராணுவத்திலிருந்து விலக முடிவெடுக்கிறான்.

அந்தச் சமயத்தில்தான் உலகைப் பூண்டோடு (வெங்காயத்தோடும்தான்!) அழிக்க வருகின்றன அந்த விசித்திரப் பூச்சிகள். வடிவம் பூச்சியைப் போல, என்றாலும் ராட்சத அளவு. பியூனோஸ் ஏரெஸ் நகரை அழித்து நிர்மூலமாக்குகின்றன. தன் சொந்த ஊர், உறவினர், நண்பர் எல்லோரையும் இதில் இழந்த ஹீரோ, ராணுவத்தில் மீண்டும் ஈடுபாட்டுடன் செயல்பட்டு, அந்தப் பூச்சிப் படையை ஒழிக்க முன் வருகிறான்.

ராட்சத வடிவப் பூச்சிகள் ஆயிரக்கணக்கில் உலவுவதும், இரண்டே தாவலில் கட்டடத்தின் மேல் பகுதியை

அடையும் காட்சிகளும் பயச் சிலிர்ப்பை ஏற்படுத்துகின்றன.

பட இயக்குனர் பால் வெர்ஹோவன் ஏற்கெனவே Total Recall, Basic Instinct ஆகிய படங்களை இயக்கியவர்.

ஜுராசிக் பார்க், ரிடர்ன் ஆஃப் தி ஜேடி ஆகிய திகில் படங்களின் விஷுவல் சிறப்புக் காட்சிகளுக்கு மேற்பார்வையாளராகப் பணிபுரிந்த ஃபில் டிப்பெட்டுக்கு இந்தப் படத்திலும் இதே பொறுப்பு. இவரும், இயக்குனருமாகச் சேர்ந்து ஆறு மாதங்களில் இந்தப் படத்தை சிறிய அளவில் - அதாவது இரண்டு ரீல்களில் - உருவாக்கித் தயாரிப்பாளர்களுக்கு சாம்பிள் காட்டினார்கள். இதில் திருப்தியடைந்த பிறகே இந்த மெகா திரைப்படம் உருவானது.

'பி' என்ற கிரகத்திலிருந்து வந்திறங்கும் பூச்சிகள் நடத்தும் தாக்குதல், நகரைப் பூச்சிகள் இரவில் ஆக்ரமித்தல் - ஆகிய இரண்டு முக்கியக் காட்சிகளும் படமாக்கப்பட்டது காஸ்பர் நகரிலிருந்து 45 மைல்கள் தள்ளியிருக்கும் வ்யோமிங் என்ற இடத்தில்தான். பல மைல்களுக்கு விரிந்த சமதரை, நடுநடுவே பெரும் பள்ளங்கள் என்று டூ-இன்-ஒன்னாக அந்த இடம் பொருத்தமாக விளங்கியது.

"இந்தப் படத்தில் டிஜிடல் தொழில் நுட்பத்தின் மூலம் அந்த பயங்கர உயிரினங்களை திகிலூட்டும்படி கொண்டு வந்திருக்கிறோம்" எனும் இயக்குனர், பூச்சிகளுக்கு ரோல்-மாடலாக எடுத்துக் கொண்டது சிலந்தியைத்தானாம்.

'மூளை இருப்பதால்தானே தங்கள் இனத்தை மனிதனால் அழிக்க முடிகிறது' என்று (சிந்தித்து!) முடிவெடுக்கும் பூச்சிகள், மனிதரின் மண்டை ஓட்டில் ஓட்டை போட்டு மூளையை உறிஞ்சுகின்றன! இன்னொரு பூச்சி தன் கொடுக்கினால் ராணுவ வீரர்களைத் தூக்கி எறிகிறது. பெரிய வண்டு ஒன்று வீரர்களின் மேல் நெருப்பைக் கக்குகிறது!

ஹீரோ ஜானியாக நடிக்கும் கேப்பர்வானுக்கு ராணுவ ரத்தம் ஏற்கெனவே உடலில் ஓடுகிறது. அவரது அப்பா அமெரிக்கக் கடற்படை அதிகாரி. ஒரு தாத்தா கடற்படையிலும் மறு தாத்தா தரைப்படையிலும் முதல் உலகப் போரின்போது பணிபுரிந்தவர்கள். 'டார்ஜான் அண்ட் ஜேன்' படத்தில் டார்ஜனாக நடித்துக் கொண்டிருக்கிறார் இவர்.

அழிவுப் படங்களுக்கு சர்வதேச மார்க்கெட் கூடிக் கொண்டே போவது ஆரோக்கியமான போக்கு இல்லைதான். ஆனால் வியாபாரிகளுக்கு இதைப்பற்றி என்ன கவலை? பிரம்மாண்டமாகவும், வித்தியாசமாகவும் எப்படி அழிவைத் திரையில் காட்டலாம் என்பதில் போட்டி போடுகிறார்கள் ஹாலிவுட் மேதைகள்.

— ஜி.எஸ்.எஸ்



"அம்பயர்கிட்ட என்ன கேட்கறதுன்னு விவஸ்தையே இல்லாம போச்சு."

"அவர் என்ன கேட்டார்?"

"எனக்கு நாக்கு வறண்டு போச்சு. பந்தைக் கொஞ்சம் எச்சில் பண்ணிக் கொடுங்கன்னு கேட்கிறார்...."



"நம்ப தலைவர் குடும்ப அரசியல் நடத்தட்டும், வேணாங்கலை. அதுக்காக அவரோட குடும்ப டாக்டருக்குக் கூட மந்திரி பதவி கொடுக்கணுமா? சே!"

— ராதா வாசுதேவன்



ஆனந்த சுதந்தரம் அடைந்து விற்றோம்!

கோவை—சிங்கை 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' சமீபத்தில் கோவையில் ஒரு இலக்கியக் கலை விழா நடத்தியது...

● ஒரு மாநகராட்சிப் பள்ளியில் 'வீடியோ ஸ்கோப்'பில் பரீக்ஷா ஞாநியின் வேர்கள். தொடர்ந்து, திறந்த மைதானத்தில் கலை விழா. வந்த கூட்டம் சராசரி இலக்கியக் கூட்டத்திற்கு மிகக் கூடுதல். கூட்டத்தில் பாதி 'ஞாநி'யை விசாரித்தது தினமணி 'மனிதன்' பதில்கள் பற்றியே. 'வேர்கள்...' திரையிடும் முன்னர் பள்ளிக் குழந்தைகள் முதற்கொண்டு, சராசரி குடும்பப் பெண்கள் வரை ஆஜர். படம் ஓடிக் கொண்டிருக்கும்போது கூட்டத்தில் பாதி வெளியே! அவர்களுக்குள் சிறு சம்பாஷணை.

"இதென்னடி... ஜென்டில்மேன் படமன்னு சொன்னாங்க... எதையோ காட்டறாங்க...!"

"இப்ப நியூஸ் ஓடுது... அப்புறமா காட்டுவாங்க, வா!"

● "சின்னத்திரை வீடு புகுந்து திருடின சமாச்சாரங்கள் ஏராளம்... இந்தத் திருடு போன பொருட்களை மீட்க நாம் முதலில் குழந்தைகளிடம் செல்ல வேண்டியுள்ளது. கல்லூரிகளில் பாடமாக வைத்தும் போராட வேண்டியுள்ளது. இங்கு தற்போது நிலவும் மோசமான வெடிகுண்டுச் சூழலுக்குக் கூட டி.வி.க்களுக்கு பங்கிருக்கிறது. மனிதனுக்கு எதிரான பிரசாரம், துவேஷம் கூட இது வந்த பின்தான் அதிகம். அந்தப் பிரசாரத்தை எதிர்த்துப் போராட வேண்டியதும் நம் தலையாய கடமையாக உள்ளது" என்றார் ஞாநி.

● "சாதாரணமாய் வேலை செய்கிற இடத்தில் முறையான ஜனநாயகத்தை எதிர்பார்க்கும் நீங்கள் வீட்டில் அதைக் கடைப்பிடிக்கிறீர்களா? வெடிகுண்டுச் சம்பவங்கள் பற்றி இங்கு எல்லோருமே பேசினார்கள். ஏதோ சில முஸ்லீம் தீவிரவாதிகள் செய்த செயலை வைத்து மொத்த முஸ்லீம் சமுதாயத்தையே குற்றம் சாட்டுவது சரியா..? அவர்களை ஒதுக்கி வைப்பது நியாயமா...? பெண்விடுதலைக்காக மத ஒற்றுமைக்காக... தீவிரவாத எதிர்ப்புக்குக் குரல் கொடுப்பதுமாக நம் கடமை நம் முன்னே விரிந்து கிடக்கிறது!" என்றார் வாசுகி. (ஜனநாயக மாதர் சங்கம்)

● கலைவிழாவில் வீடியோ திரைப்படம், உரைகளுடன். கூடவே கிராமிய இசை; பாடல்கள் என ஒரே அமர்க்களம். கலைவிழா மேடை வரை தட்டியில் எழுதப்பட்ட 'முத்தான' கவிதைகள், அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன. சாம்பிளுக்கு ஒன்று:

"கும்மியடி... ஆனந்த சுதந்திரம்
அடைந்து 'விற்றோமென்று...!"

● விழாவில் இன்ஸ்டண்ட் டிராமா ஒன்று ஞாநியின் பின்னணிக் குரலில் ஐந்து நிமிடத்தில் தயாரிக்கப்பட்டு மேடையேறியது. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு (கலவரம்) விழுந்துவிட, ஒப்பாரியுடன் வந்த பெண் ஒவ்வொருவரும் 'நான் இந்து', 'நான் முஸ்லீம்', நான் சீக்கியன்", 'நான் கிறிஸ்டியன்' என தலையுயர்த்தி முழங்க... 'ச்சே இங்கே ஒரு மனுஷன் கூட இல்லையா...?' என பாரத மாதா வெறுத்துத் திரும்புவது போல் நாடகம். ○

படமும் செய்தியும்: **கேபெஸ்லி**

என்ன நடந்தது அந்த இரவில்?



கல்கத்தா டெஸ்ட் மேட்ச் முடிந்த பிறகு, இரவில் பார்ட்டி ஒன்று நடந்தது. அதில், ஆஸ்திரேலிய வீரர் ரிக்கி பாண்டிங் ஒரு பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து விட்டார் என்று மறுநாள் பேப்பர்களில் ஒரு செய்தி! ஆஸ்திரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரரும், தேவைப்படும் போது விக்கெட் கீப்பராகவும் அவதாரம் எடுக்கும், ஆஸ்திரேலிய அணியின் வருங்கால கேப்டன் என்று வர்ணிக்கப் படுபவருமான ரிக்கி பாண்டிங்கா அப்படிச் செய்தார்? ஆச்சரியத்தோடு அவரிடமே கேட்டோம்...

“நான் கல்கத்தாவில் தங்கியிருந்த ஆறு நாட்களிலும் இரவு பத்து மணியளவில் தவறாமல் ஒரு போன் வரும். பேசியது ஒரு பெண்தான். முதல் இரண்டு நாட்கள் நான் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு விட்டேன். அப்புறம் 'என்னோடு வந்து தங்கச் சம்மதமா?' என்று அந்தப் பெண் கேட்க ஆரம்பித்து விட்டாள். தினமும் ஐந்தாறு முறை இப்படிக் கேட்க ஆரம்பித்தாள். ஒரே குரல்தான்!

“வேண்டுமானால் எனது ரூம் மேட்டாக இருந்த ஸ்லேட்டரிடம் கேட்டுப் பாருங்கள். சரி... அவர் எனக்கு ஆதரவாகப் பேசலாம் என்பதால் வேண்டாம்! நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அதிகாரிகளை... பாருங்கள். 'என் பெயர் ஊர்மிளா...' என்று தொந்தரவு செய்து கொண்டு, தன்னைப் பற்றியும், தனது அழகைப் பற்றியும் ரொம்பவும் செக்ஸியாக என்னிடம் வர்ணித்துக் கொண்டேயிருந்தாள். இது என்னடா தொந்தரவு என்று எங்களது கேப்டனிடம் கூட இது பற்றிப் புகார் செய்தேன்!

“இந்த நிலையில்தான் ஹோட்டலில் பார்ட்டி நடந்தது. நானும் நண்பர்களும் கலந்து கொண்டோம். பார்ட்டியில் டான்ஸ் நடந்து கொண்டிருந்தது. அப்போது அழகான உடையில் ஒரு பெண் என்னை உரசியபடி ஆடினாள். ஒருவேளை போனில் தொந்தரவு செய்த பெண் இவளாகத்தான் இருக்குமோ என்று நினைத்து, அவளது கையைப் பிடித்துக் கொண்டு பேசினேன். அவ்வளவுதான்!

“சட்டென்று ஹோட்டலில் உள்ளவர்களும் அங்கே வேலை செய்பவர்களும் என்னைக் கையைப் பிடித்துத் தனியே அழைத்துச் சென்று விட்டனர். அந்தப் பெண் ஹோட்டல் டைரக்டர்களில் ஒருவருடைய மனைவியாம்! இது தெரிந்ததும் அந்தப் பெண்ணின் கணவரிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன். இதுதான் நடந்தது.

“நாங்கள் இந்தியாவுக்குப் புறப்படும்போதே, 'இந்தியா மிகவும் கட்டுப்பாடான நாடு. அவர்கள் ஒழுக்கத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். லண்டன், நியூஸிலாந்து போன்ற நாடுகளில் நடந்து கொண்டது போல் இந்தியாவில் நடந்து கொண்டு விடாதீர்கள்!' என்று எச்சரிக்கை செய்துதான் அனுப்பினார்கள். நானும் சரி, அணியிலுள்ள பிறரும் சரி, ஒருபோதும் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்ள மாட்டோம்” என்று விளக்கினார் ரிக்கி பாண்டிங். ●


சந்திப்பு: **நந்தினி**

நடக்குமென்பார் நடக்கும்!



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புது வருஷம், வரும் போதே உங்களுக்கு நல்ல காலத்தை சேர்த்து எடுத்துட்டு வருது. சின்னச் சின்ன பிரச்னைங்களால தினம் கஷ்டப்பட்டுட்டிருந்த உங்களுக்கு இனிமே பிரச்னையெல்லாம் தூசா பறந்துடும். அதிரடியான வளர்ச்சி, உற்சாகமான சூழ்நிலை, இடமாறுதல், கூடுதல் வருமானம், புகழ்னு ஒஹோதான்! கலைத்துறை, சட்டம், ராணுவத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ரொம்ப வளமான காலகட்டம் எட்டிப் பார்க்குது! தொட்டதெல்லாம் வெற்றி தான்! ஷேர், புது வீடு வாங்கறது இப்படிப்பட்ட விஷயங்களும் சாதகமாவே இருக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

அலைச்சலும் செலவும் அதிகம் இருக்கும். சின்னச் சின்ன மனஸ்தாபங்கள் வரலாம். அதனால, எப்பவும் ஒரு குழப்பமான, இறுக்கமான மனநிலையிலேயே இருப்பீங்க. ஆனாலும் உங்க கடின உழைப்பு, உங்களுக்கு எப்பவும் எதிலும் வெற்றியைத்தான் தரும். செய்யற காரியம் எதுன்னாலும் உங்க பிரத்தியேக 'டச்' தெரியறாப் பல செய்வீங்க. அதனால மேலதிகாரிகளோட பாராட்டு, புகழ் உறுதி. குறிப்பா, பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் ஏராளமா புகழ் அறுவடை செய்யற நேரம் இது. பயணத்துல எச்சரிக்கையா இருங்க. மனசை அலைபாய விட்டுட்டு டூவீலர்ல போவாதீங்க.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

எல்லா கிரகங்களும் சாதகமா இருக்குங்க. தொட்டது துலங்கும்! எங்க போனாலும் நீங்கதான் பிரதானமான ஸ்டாரா இருப்பீங்க. ஏன்னா, உங்க ஈர்ப்பு சக்தி, பேச்சுவன்மை அப்படி. ஆபீஸ்லயும் சரி, வீட்டுலேயும் சரி எல்லாரோட ஒத்துழைப்பும் உங்களுக்குக் கட்டாயம் உண்டு. பணவரவு பிரமாதமா இருக்கும். கேட்ட இடத்துல உதவிகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு போற வாய்ப்பும் வரலாம்! பெண்களுக்கு விசேஷமான வாரம் இது! நினைச்சதை அடையலாம். அக்கம் பக்கத்து வம்புகள்ல மட்டும் தலையையோ மூக்கையோ நீட்டாதீங்க. பொது விவகாரங்கள்ல தலையிடாம இருக்கறது இந்த வாரம் ரொம்ப அவசியம்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

ஒரு பக்கம் உத்தியோக ரீதியா சில எதிர்பாராத நன்மைகள் வரும்னா, மறுபக்கம் வீட்டுல ஏதாவது பிரச்னை வரும். பத்து ரூவா கிழ கிடைச்சதுன்னு சந்தோஷப்பட்டீங்கன்னா, உங்க சம்சாரம் நூறு ரூபாய்க்கு எதனா செலவு வெச்சிருப்பாங்க. இப்படி நல்லதும் கெட்டதும் கலந்தே வரும். இந்த வாரம் நீங்க செய்ய வேண்டிய காரியங்கள் மூணு! 1. அநாவசியமான வம்பு வழக்குகள்ல மாட்டிக்காதீங்க. 2. யாருக்கும் கடன் குடுக்கறதோ, ஜாமீன் கையெழுத்துப் போடறதோ வேணாம். 3. ஷேர், லாட்டரி பக்கம் தலை வெச்சிப் படுக்காதீங்க. பெரியவங்களுக்கு சிறு உடல் நலக் குறைவு ஏற்பட்டு நீங்கலாம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


என்னடா இவ்ளோ மந்தமா இருக்குதே இந்த வாரம்னு வெள்ளிக்கிழமை வரைக்கும் வருத்தப்படுவீங்க. ஏன்னா, உங்களோட வழக்கமான உற்சாகம், உழைப்பு எல்லாம் இப்ப மந்தமாகி, சோம்பேறித்தனத்துக்கு இடம் கொடுப்பீங்க. ஆனா, ஒரு முக்கியமான திருப்பம் வாரக் கடைசில வரும். அது உங்க மந்த நிலையைப் புரட்டிப் போட்டு கிளைமாக்ஸ் ஹீரோ மாதிரி வீறுகொள்ள வைக்கும். சுறுசுறுப்பாயிடுவீங்க. அப்புறமென்ன? மளமளன்னு வேலை நடக்கும். சினிமா, கலைத் துறையினருக்கு இந்த வாரம் முழுக்க சாதகமா இருக்காது. மத்தவங்களுக்கு வெள்ளிக்கிழமைக்கப்புறம் சில மகிழ்ச்சியான அநுபவங்கள் கிடைக்கலாம்!



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


குழப்பமான காலகட்டம். வீட்டுல குட்டிக் குட்டியா பல பிரச்னைகள் வரும். தீர்க்க முடியாம சிரமப்படுவீங்க. உறவுக்காரங்களோட சண்டை. மேலதிகாரிகள் அதிருப்தி, பண விரயம், வீண் அலைச்சல் இப்படி ரொம்ப மோசமான காலகட்டத்தைக் கடந்துட்டு இருக்க வேண்டி வரும். பயப்படாதீங்க. அநாவசியமான அரட்டைகள், வம்பு விவகாரங்களைத் தவிர்த்துடுங்க. ஷேர், வீடு, மனை வாங்கறது, புதிய ஒப்பந்தங்கள் எதுவும் இப்ப வேணாம். சைலண்டா வேலைல கவனம் செலுத்துங்க. மௌனமா

இருந்தாலே பாதி பிரச்னை தீர்ந்துடும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

உங்க செயல்திறன் பளிச்சிடற வாரம் இது. அதுக்கு சாதகமா சூழ்நிலையும் அமையுங்கறதுதான் விசேஷம். எல்லா தரப்பு லேருந்தும் உதவிகள் கிடைக்கும். எல்லாரும் உங்களை அனுசரிச்சி நடப்பாங்க. அஞ்சல குருன்னா சும்மாவா? இந்த வாரம் நீங்க ரொம்ப முக்கியமா நினைக்கற ஒரு பெரியமனிதரால உங்களுக்கு ஒரு பேருதவி கிடைக்கும். அது, உங்களோட எதிர்காலத்துக்குப் பலவகையில உபயோகமா இருக்கும். உல்லாசமா விருந்து கேளிக்கைகளில் கலந்துக்கற வாய்ப்பு சிலருக்குக் கிடைக்கும்.



விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

புத்தாண்டு உங்களுக்கு சாதகமாத்தான் பொறக்குது. எடுத்த காரியங்கள் வெற்றியையும் குறிப்பா வயசானவங்களுக்கு, அவங்க மகிழ்ச்சியடையிறாப்பல புது வீடு யோகம், பொழுதுபோக்கு வாய்ப்புகள், உற்சாகமான குடும்பச் சூழல் அமையும். வீட்டுல கணவன்/மனைவி உறவு வலுவாகும். சில வீட்டுல பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். அனுசரிச்சிப் போற வழக்கத்தை வெச்சுக்கங்க. உங்க புத்தி சாதுர்யம் அபாரமானது. ஆனா அதை ஏன் முக்கியமான சமயங்கள்ல பயன்படுத்தத் தவறிடுறீங்க? இந்த வாரம் வானொலி, தொலைக்காட்சி, சினிமா மாதிரி தகவல் தொடர்பு சாதனங்களால மனமகிழ்ச்சிக்கான ஏதோ ஒரு சமாசாரம் நடக்கப் போவுது.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்களை மாதிரி ஹார்டு-ஒர்க்கரைப் பார்க்கவே முடியாது சார். ரொம்ப சிரமப்பட்டு எல்லா வேலையையும் செய்வீங்க. ஆனா இந்த வாரம் சிறப்பான பலன் கிடைக்கணும்னா நீங்க கூடுதலா சிரமப்பட்டாகணும். ஆனா சினிமா நாடகத்துறைல இருக்கறவங்களுக்கு யோகமான வாரம் இது. பாராட்டு, பரிசுகள் கிடைக்கலாம். முயற்சிகள் வெற்றியடைஞ்சு, பலரும் ஆச்சர்யப்படற விதத்துல



தனுசு ராசிக்காரரான டைரக்டர் கே. பாலசந்தருக்கு சூப்பரான டைம் இது. பரிசுகள், விருதுகள் வந்து சேருமாம். மூத்த மகன் கைலாசம் ஏதோ நல்ல காரியம் பண்ணி, சந்தோஷம் தரப்போறாரு.

ஓஹோன்னு வருவீங்க. ஷேர், லாட்டரி மட்டும் வேணாம். மருத்துவச் செலவுகள் கொஞ்சம் இருக்கலாம். குடும்பத்துல மூத்த பையன்/பெண் மூலம் ஏதோ ஒரு எதிர்பாராத சந்தோஷம் கட்டாயம் இருக்கும். அது பேரன், பேத்தி வரவாகக் கூட இருக்கலாம்!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

வீட்டுல ஏதோ விசேஷம் வருதுங்க. நிறைய செலவு செஞ்சி, ஏராளமா சந்தோஷப்படப் போறீங்க. சீமந்தம், வளைகாப்பு - இந்த மாதிரியான விஷயங்களுக்கு சான்ஸ் அதிகம். அது மட்டுமல்ல; இந்த வாரம் வெளிநாட்டுத் தொடர்புகள் மூலமா ஒரு நல்ல தகவலும் உங்களுக்கு வரும். அது உங்க ஃபாரின் ட்ரிப் சம்பந்தமான பச்சைக்கொடியா இருக்கலாம். முதலீடுகள் செய்ய இது உகந்த வாரம். அதே போல குடும்பத்துல இருக்கறவங்களை ஜாலியா எங்கனா கூட்டிட்டுப் போய்வாங்க. பிரச்னைகள் அதிகம் இல்லாத சுகமான வாரம் இது. சிலருக்கு உத்யோக ரீதில புரமோஷனோ, புரமோஷனுடன் கூடிய இடமாறுதலோ இருக்கலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

ரொம்ப நாளைக்கப்புறம் பிரச்னையே இல்லாத வாரமா இது இருக்கும். வீட்டுல இருந்து வந்த குழப்பங்கள், மனக் கஷ்டங்கள் நீங்கி, சுமுகமான உறவு நிலை ஏற்படும். கோவில், குளம்னு சுத்தற வாய்ப்பு வரும். பெண்கள், புடைவை வாங்கற யோகம் இருக்கு. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பா, ஃபாரின் சான்ஸ் கூட கிடைக்கலாம். கணவன் - மனைவி உறவு சுமுகமா இருக்கும். வீட்டுல அனுசரிச்சி நடந்துக்கிட்டீங்கன்னா, எதிலும் வெற்றிதான்! இந்த வாரம், உங்களுக்குப் பண வரவு நிறைய இருக்கும்.



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உடல் நலத்துல கவனமா இருங்க. உஷ்ணம் சம்பந்தப்பட்ட வியாதிகள் படுத்தலாம். அலைச்சலும் விரயமும் அதிகமா இருக்கும். ஆனா தொழில் சீராவே நடக்கும். வீட்லேயும் பிரச்னை அதிகமில்லாம உறவுகள் சுமுகமா இருக்கும். சில பெண்களுக்கு நகை வாங்கற யோகம் இருக்கு. அதே போல வீட்டு உபயோகப் பொருட்கள் சிலதும் வாங்குவீங்க. கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. முதலீடுகள் எதுவும் இப்ப வேணாம். பெரிய மனிதர்களோட அன்பும் ஆதரவும் கிடைக்கும். ○

காதல் டைரிக் குறிப்பு:

இமயம் தொட எவராலும் முடியலாம். என் இதயம் தொட உன்னால் மட்டுமே முடியும்.

நான் உன்னை

திருவான்மியூரில் பிருந்தாவின் வீட்டை சுலபமாகக் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தத் தனி வீட்டின் வாசலில் நிறை பெரிய தூங்குமூஞ்சி மரம் கிளைகளைப் பரப்பி வீட்டிற்குக் குடையாக நிழல் கொடுத்திருந்தது. தரையே தெரியாத அளவிற்கு அது உதிர்த்த இலைகளும், பூக்களும் விரிப்பு அமைத்திருந்தன.

பைக்கைப் பூட்டிய அரவிந்த் கொக்கி போட்டிருந்த காம்பவுண்ட் கேட்டை கொஞ்சமாகத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். பத்தடியில் வீட்டின் முகப்பு. சிறிய போர்ட்டிகோவில் ஒரு மொபெட் நின்றிருந்தது. வாசலை நெருங்கி அழைப்பு மணி பித்தானைத் தேடி அழுத்தினான்.

வாசலுக்கு அருகில் மூன்று கண்ணாடிக் கதவுகள் கொண்ட ஆறடி ஜன்னல் ஒன்றிருக்க, அதில் ஒரு கதவு திறந்து எட்டிப் பார்த்த பிருந்தா, இவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டது முகத்தில் தெரிந்தது.

"வாங்க அரவிந்த்" என்று புன்னகைத்தாள். ஜன்னல் கதவை மூடிவிட்டு வாசல் கதவைத் திறந்தாள். "உள்ளே வாங்க" என்றாள்.

ஷூவைக் கழற்றிவிட்டு ஸாக்ஸ் கால்களோடு உள்ளே சென்ற அரவிந்த், அந்த சிறிய ஹாலின் ஓரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தான்.

எங்கோ புறப்படுகிற தோதில் புடைவை கட்டி நீட்டாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த பிருந்தா ஃபேனைப் போட்டுவிட்டு, "ஒரு நிமிஷம்" என்று சொல்லி அருகிலிருந்த அறைக்குள் சென்று அங்கே பாடிக் கொண்டிருந்த டேப்-ரெக்கார்டரை அணைத்துவிட்டு, சமையலறை சென்று ஒரு கிளாசில் தண்ணீர் கொண்டு வந்து நீட்டினாள், "சுலபமா வீட்டைக் கண்டு பிடிச்சிட்டிங்களா?" என்றாள்.

"நான் இந்த ஏரியாவுக்கு ஏற்கெனவே பல தடவை வந்திருக்கேன். ஒண்ணும் பிரச்னையா இல்லை. நீங்க உக்காருங்க பிருந்தா" என்று தண்ணீர் குடித்துவிட்டு டீப்பாய் மேல் வைத்தான்.

பிருந்தா ஒரு நாற்காலியை அவனுக்கு எதிராக அமைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

"உங்க ஆபீசுக்கு போன் செஞ்சேன். ஆபீசை மூடிட்டதா வாட்ச்மேன் சொன்னான். இப்ப நீங்க வெளில எங்கயாவது புறப்பட்டுக்கிட்டு இருக்கிங்களா பிருந்தா?"

"வேற எங்கே, வேட்டைக்குத்தான்" என்றாள்.

"வேட்டைக்கா?"

"வேலை வேட்டை! ரெண்டு மூணு பேருக்கு போன் செய்ய வேண்டியிருந்திச்சி. அதான் புறப்பட்டேன். ஒண்ணும் அர்ஜெண்ட் இல்லை. மெதுவா பண்ணிக்கலாம். எப்படி இருக்கிங்க அரவிந்த்?"

"ம்" என்றான். "உங்க சர்ட்டிஃபிகேட்ஸ், பயோடேட்டா எல்லாம் ஒரு நகல் அனுப்பச் சொல்லியிருந்தேனே, ஏன் அனுப்பலை?"

"முதல் கட்டமா சொந்த முயற்சிகள்ல இறங்கிப்

பார்த்துட்டு, அப்புறம் உங்களுக்கு அனுப்ப லாம்னு நினைச்சேன்."

"உங்ககூட இன்னும் ரெண்டு பேர் தங்கி யிருக்கிறதாச் சொன்னீங்க இல்லை?"

"ஆமாம். ரங்கநாயகின்னு ஒருத்தி ஹிந்து பேப்பர்ல வேலை பார்க்கறா. அவளும் ஸ்வர்ணான்னு ஒரு கம்ப்யூட்டர் ஆப ரேட்டர் வேலை பார்க்கறவளும் தங்கியிருக் காங்க. ரெண்டு பேரும் வேலைக்குப் போயிருக்காங்க. ஈவினிங் ஏழு மணிக்கு வரு வாங்க."

இப்போது அழைப்பு மணி ஒலிக்க, பிருந்தா ஜன்னல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்துவிட்டுப் பிறகு வாசல் கதவைத் திறந்தாள்.

ஒரு பெண் அயர்ன் செய்த துணி அடுக் குடன் நின்று கொண்டிருக்க, அந்த அடுக்கை வாங்கிக் கொண்டு, "பேசிக்கிட்டிருக்கேன். கணக்கு அப்புறமாப் பார்த்துக்கலாம் ஜோதி" என்று உள்ளே சென்று வைத்து விட்டு வந்தாள் பிருந்தா.

''சரிம்மா'' என்று அவள் சென்றதும் கதவை அதிக ஓசை வராமல் சார்த்திவிட்டு மீண்டும் வந்து அமர்ந்தாள். "ஏதாச்சும் சாப் பிடறீங்களா அரவிந்த்? டிப்-டீ உங்களுக்கு போட்டுத் தரட்டுமா? பிடிக்குமா?"

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா வெளில எங்க யாவது போய் சாப்பிடலாமா பிருந்தா? நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

பட்டுக்கோட்டை பிரபாகர்

"போலாமே" என்று எழுந்து கொண்டு, ''ஒரு நிமிஷம்'' என்று ஒரு ஹேண்ட் பேகைத் தோளில் மாட்டியபடி வந்து, "போலாம், வாங்க" என்றான்.

அரவிந்த் ஷூ அணிந்து கொண்டான். பிருந்தா வீட்டைப் பூட்டி சாவியை கைப் பைக்குள் வைத்துக் கொண்டாள்.

"எங்க போகணும்?" என்றாள்.

"எந்த பிளானோடவும் வரலைங்க. உங்க கிட்ட என்னோட சில பர்சனல் பிரச்னை களைப் பேசணும்னு நினைச்சேன். காந்தி மண்டபம் போலாமா? என்னோட பைக்குல வருவீங்களா?"

''வாங்க'' என்றாள்.

15

அவன் தன்னோடு வெளியே வர அதுவும் பைக் கில் பின்னால் அமர்ந்து வர எந்தச் சிறிய தயக்கமும் காட்



டாமல் சம்மதித்தது உற்சாகம் தந்தது அரவிந்திற்கு.

பைக்கை ஸ்டார்ட் செய்தான். பிருந்தா பின்புறம் அமர்ந்து கொண்டாள். புறப்பட்டான். அவள் கூந்தலில் வைத்திருந்த மல்லிகைப் பூக்களின் வாசனை ஜில்லென்று மனதைத் தடவியது.

பாரமாக இருந்த மனத்தில் இப்போது சுமை ஏதும் இல்லாமல் தக்கை போல உணர்ந்தான் அரவிந்த்.

காந்தி மண்டபம் போகும் வழியில் ஒரு போன் பூத் அருகில் முதலில் நிறுத்தினான்.

"பிருந்தா, நீங்க யாருக்கோ போன் செய்யணும்னு சொன்னீங்களே, என்னால அது கெடக் கூடாது. போய்ப் பேசிட்டு வந்துடுங்க. நான் வெய்ட் பண்றேன்."

"பரவால்லைங்க. அது நான் அப்புறம் பாத்துக்கறேன்."

"இல்லை. நீங்க பேசிட்டு வந்துடுங்களேன்."

"சரி" என்று இறங்கிச் சென்றாள்.

அரவிந்த் பைக்கை சாய்த்து நிறுத்திவிட்டு சிகரெட் பிடித்தான். பாதையோரத்தில் இளநீர்க் கடை பார்த்து இரண்டு இளநீர் சீவச் சொன்னான்.

சில நிமிடங்களில் பிருந்தா வர, ஸ்ட்ரா போட்ட ஒரு இளநீரை அவளுக்குத் தந்து, தானும் உறிஞ்சியபடி, "என்னாச்சு?" என்றான்.

"ரெண்டு பேருக்குப் பேச வேண்டியிருந்திச்சா. ஒருத்தர் ஊர்ல இல்லை. இன்னொருத்தர் நாளைக்கு பேசச் சொல்லிட்டார்."

இளநீர் குடித்து, முடித்து, வெட்டி வழித்துக் கொடுத்ததை சாப்பிட்டார்கள். பிசுபிசுப்பான கையை தன் கர்ச்சிப்பில் அவன் துடைக்கப் போக, "இருங்க, தண்ணி இருக்கு" என்று கைப்பையில் இருந்து சிறிய பாட்டில் எடுத்து அவன் கைகளில் ஊற்றிவிட்டு, தன் கைகளையும் கழுவிக் கொண்டாள் பிருந்தா.

மீண்டும் புறப்பட்டார்கள். காந்தி மண்டபம் வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே நடந்தார்கள். ஒரு மர நிழலைக் காட்டி, "அப்படி உக்காரலாமா?" என்றான்.

அவள் தலையசைக்கவே, சென்று சற்று இடைவெளி கொடுத்து அருகருகே அமர்ந்தார்கள்.

தூரத்தில் பரபரப்பாக வாகனங்கள் விரைந்து கொண்டிருக்க, இங்கே நிதானமாக ஒரு பறவை ட்ருட், ட்ருட் என்றது.

பிருந்தா தன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு சுற்றிலும் பார்க்க, ஒருக்களித்து ஒரு கையை ஊன்றியபடி அமர்ந்திருந்த அரவிந்த் அவள் முகத்தையே பார்த்தவன், அவள் அவன் பக்கம் திரும்பியதும் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு அருகில் கிடந்த ஒரு சிறு மரக்குச்சி எடுத்து, காய்ந்த இலைகளைக் குச்சியால் விலக்கினான்.

"சொல்லுங்க அரவிந்த், என்ன பேசணும்?" என்றாள் பிருந்தா.

"பிருந்தா, ஆஃப்செட் பிரஸ் ஆரம்பிக்கப் போறேன்னு உங்ககிட்ட சொன்னேன் இல்ல, விடுவிடுன்னு அதுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சி முடிச்சுட்டேன். ராயப்பேட்டையில இடம் பிடிச்சி, செகண்ட் ஹாண்ட்ல மிஷின் வாங்கிப் போட்டு, வேலைக்கு ஆபரேட்டர்ஸ் போட்டு, வர்ற பதினெட்டு திறப்பு விழா. இதோ பாருங்க, இன்விடேஷன்."

பேண்ட் பாக்கெட்டில் இரண்டாக மடக்கி வைத்திருந்த அழைப்பிதழை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"கங்கிராஜுலேஷன்ஸ். ரொம்ப சந்தோஷமான விஷயம்தானே இது. ஏன் இதை உற்சாகமே இல்லாம சொல்றீங்க?" என்றபடி இன்விடேஷனைப் படித்துப் பார்த்தாள்.

"மனசுல சந்தோஷம் இல்லைங்க பிருந்தா."

"ஏன்?"

"நான் இப்போ பிரஸ் ஆரம்பிக்கிறது எங்கப்பாவுக்குப் பிடிக்கலை. நேத்து எனக்கும் அவருக்கும் பெரிசா வாக்குவாதம் வந்து கடைசில நான் வீட்டை விட்டு வந்துட்டேன்."

அவள் சின்ன அதிர்ச்சியுடன் மௌனமாகப் பார்த்தாள்.

"எங்கம்மாவும், தங்கையும் எவ்வளவோ சொல்லி என்னைத் தடுத்துப் பார்த்தாங்க. நேத்து எங்கப்பா சொல்லக் கூடாத சில வார்த்தையெல்லாம் சொல்லி என்னை ரொம்ப கேவலப்படுத்திட்டார். அதுக்கும் அப்புறம் அந்த வீட்ல இருக்கறது எனக்குப் பிடிக்கலை. புறப்பட்டுட்டேன்."

"புறப்பட்டு?"

"பிரஸ் ஆபீசுக்கு வந்துட்டேன். நேத்து ராத்திரி பூரா தூக்கம் இல்லை. ஒரே டென்ஷன். எந்தப் பிரச்னையா இருந்தாலும் நான் என் ஃப்ரெண்டு சந்துருவோட ஷேர் பண்ணிக்குவேன். அவனைப் பார்க்கப் போனேன். அவன் ஷூட்டிங் போயிட்டான். நைட்டுதான் வருவானாம். எனக்கு உடனே உங்க ஞாபகம் வந்திச்சி. நடந்ததை

எல்லாம் உங்ககிட்ட ஷேர் பண்ணிக் கணும்னு தோணிச்சு. நாம அதிகமாப் பழ கலை. ஆனா உங்களோட பேசறப்போ மன சுக்கு இதமா இருக்கு. என் பர்சனல் பிரச் னைகளை அதிகப்பிரசங்கித்தனமா உங்க கிட்ட சொல்றதா நினைக்கிறீங்களா பிருந்தா? எந்த வகையிலாவது நான் உங்களை சங்கடப்படுத்தறேனா?''

''இல்லைங்க. உங்க பர்சனல் மேட்டர்ஸ் என்கிட்ட சொல்றீங்கன்னா அந்த அளவுக்கு எனக்கு முக்கியத்துவம் தர்றீங்கன்னு புரியுது. நீங்க சொல்றதையெல்லாம் சும்மா கேட்டுக் கிட்டு இருக்கறதைத் தவிர எந்த வகையிலா வது உங்க பிரச்னைக்கு என்னால உதவ முடி யும்னா சந்தோஷப்படுவேன். வீட்டை விட்டு வந்தது தப்புன்னு இப்போ நீங்க ஃபீல் பண்றீங்களா அரவிந்த்?''

''தப்புன்னு நினைக்கலை. இத் தனை வருஷம் அங்க இருந்துட்டு திடீர்னு வர வேண்டிய சூழ்நிலை ஏற் பட்டுடுச்சேன்னு வருத்தமா இருக்கு.''

''உங்கப்பாவுக்கும் உங்களுக்கும் என்ன பிரச்னை?''

''மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்! என் திறமை மேல அவருக்கு நம்பிக்கை இல்லை. என்னை அவர் என்கரேஜ் செய்யறதில்லை. என்னை விட என் அக்காவும், பெங்களூர்ல இருக்கற அண்ணனும்தான் ஒஸ்தி. ஏன்னா அவங்க எக்கச்சக்கமா சம்பாதிக்கிறாங்க.''

''பாசத்தில பாரபட்சம் இருக்க முடியுமா அரவிந்த்?''

''இருக்கே! நான் அனுபவிக்கிறேனே! என் அக்கா யாமினி இருக்காளே, அவளுக்கு என் மேலயும் இளங்கோ மேலயும் ஒரே மாதிரி தானே பாசம் இருக்கணும்? அப்படி இல்லை. அவன் மேல ஏகப்பட்ட மரியாதை. ஏன்னா பணம் நிறைய சம்பாதிக்கிறான். நான் சும்மா இருக்கறதால என்னை அப்படி அலட்சியப் படுத்துவா பிருந்தா. அதே மாதிரிதான் இளங் கோவும். எல்லாரும் சேர்ந்துக்குவாங்க. என்னை ஒரு தீவு மாதிரி ஒதுக்கி வெச்சிடு வாங்க.''

''இது உங்க கற்பனையா இருக்கலாமா?''

''இல்லை பிருந்தா. என்னால நிறைய சம்பவங்களை உதாரணமா சொல்ல முடியும். இது விவரிக்க முடியாத ஒரு உள் யுத்தம்! குடும்பத்துல ரகசியமா நடக்குது இது. சாதிச்சுக் காட்டியே ஆகணும்னு எனக் குள்ளே ஒரு வெறியே ஏற்படுத்தினது அவங்கதான்.''

''சாதிக்கிறதுன்னா?''

''அவங்களைவிட பல மடங்கு உயர்ந்து காட்டணும்.''

''எதில?''

''சம்பாத்தியத்தில! வசதில! அந்தஸ்த்தில!''

''பணம் சம்பாரிக்கிறதுதான் சாதனையா அரவிந்த்?''

''வேற என்ன? பணத்தை சம்பாரிச் சிட்டா மத்த எல்லா சாதனைகளையும் அது நடத்திக் காட்டிடும்.''

''அப்படியா? நிஜமாவா? அம்பானி ஒரு பெரிய கோடீஸ்வரர். அவர் கிட்ட இருக்கிற பணத்தால விஞ்ஞான சாதனைகளுக்

> **பட்டுப்புடவை பரிசுப் போட்டி – 12; முடிவு!**
>
> ''வெற்றிதான் லட்சியம்; அதை அடைகிறோமா என்பதுதான் முக்கியம்!'' என்று கூறியிருப்பவர் முகமது அஸாருதீன் என்று ஏரா மான பேர் சரியான விடையை எழுதியிருந்தாலும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி:
>
> எல். விமல் குமார்,
> 7, 59-வது தெரு,
> அசோக் நகர், சென்னை – 83.
> வாழ்த்துக்கள்!

காக அப்துல் கலாம் வாங்கின தேசிய விருதை விலை பேசி வாங்க முடியுமா அரவிந்த்? நீங்க இருக்கற மோசமான மனநிலையில நான் வாதம் செய்யறதா தப்பா எடுத்துக்காதீங்க. பணம் சம்பாரிக்கிறது மட்டுமே சாதனை இல்லைன்னு சொல்ல வந்தேன்'' என்றாள் பிருந்தா.

''என்னோட ஃபீலிங்ஸ் எனக்குத்தான் புரியும். உங்களால உணர முடியாது.''

''நான் உணர்ந்த உங்க ஃபீலிங்சைச் சொல்றேன். நான் சரியாப் புரிஞ்சுக்கிட் டிருக்கேனா இல்லையான்னு உண்மையாச் சொல்றீங்களா?''

நிமிர்ந்து உட்கார்ந்தான் அரவிந்த்.

(தொடரும்)

ஜன்னல் திட்டில் கண்ணாடி வைத்து ஷேவிங் செய்து கொண்டிருந்தார் ராமநாதன். சுவர் ஓரமாக நிர்மல், ஹோம் ஒர்க்கின் மிச்சத்தில். சந்தியா குளித்து முடித்தாகிவிட்டது. யூனிஃபார்மில் வந்து, "நிர்மல்... போயி குளிச்சுக்கடா" என்று விட்டு வாசலில் தலை உலர்த்திக் கொண்டிருக்கிறாள்.

"ம்..." போறேன் என்றவன் இன்னும் ஹோம் ஒர்க்கிலேயே இருக்கிறான். முடித்துவிட்டுத்தான் போவான் என்று தெரிந்தது. அவனுக்கு ஒன்றும் அவசர மில்லை. பக்கத்திலேயே பள்ளிக்கூடம். அதுவும் ஒன்பது மணிக்குத்தான். சந்தியாவுக்கு எட்டரைக்குத் துவங்கும். எட்டுக்காவது பஸ் பிடிக்க வேண்டும் அவள்.

இப்போது மணியென்ன என்று அறிய உள்ளே படுக்கை அறையை எட்டிப் பார்த்தார். சுவர்க் கடிகாரத்தில் ஏழு இருபது ஆயிற்று. நிதானமாகவே ஷேவிங் செய்து, குளித்து, சாப்பிட்டுப் புறப்பட அவருக்கும் நேரமிருக்கிறது.

ராமநாதன் பார்வையில் பரமுவும் பட்டான். பாயில் கவிழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் அவன். ஒவ்வொரு தடவை வெளியூர் போய்விட்டு வரும்போதும் இப்படித்தான் அசந்து தூங்குவான், பாவம். இன்று அதிகாலையில் அவன் வரும்போது மணி மூன்றோ முன்றரையோ. தூக்கமின்மையில் முகம் வீங்கிக் களைப்புடன் காணப்பட்டான். எனவே அவனை அதிகமாக ஏதும் விசாரிக்கவும் இல்லை. முதலில் நன்றாகத் தூங்கட்டும் என விட்டுவிட்டார்.

அவனது இந்த ட்ரைவர் வேலையில் ராமநாதனுக்கு விருப்பமில்லை. அதுவும் அவன் டூரிஸ்ட் வாகனங்கள் ஓட்டுகிறவன். நாள் கணக்கில் ஊர் ஊராகவும் பிற மாநிலங்களுக்கும் போக நேரும். அதோடு அவனது முதலாளியின் தொழில் நிமித்தமாகவும் அவரது காரை ஓட்டிச் செல்வான்.

சென்ற வாரம் கூட அப்படித்தான் போயிருந்தான். "பெங்களூருக்குப் போறேம்ப்பா. ரெண்டு மூணு நாள்ல திரும்பிடுவோம்" என்று போனவன். குறிப்பிட்டபடியோ அடுத்தடுத்த நாட்களிலோ கூட வரவில்லை. ஒரு தகவலையும் காணோம். அரிதாகச் சில சந்தர்ப்பங்களில் திரும்பி வரத் தாமதமாவது சகஜமே. வியாபார காரியத்தில் தவிர்க்க இயலாதது இது. என்றாலும் அங்கிருந்து ஒரு ஃபோனாவது செய்திருந்தால் (ஆடிட்டர் வீட்டில் ஃபோன் இருக்கிறது. எதிர்ப் பக்கம் இடது புறமாக ஐந்தாவது வீடு) மனசுக்குத் திருப்தியாக இருந்திருக்கும்.

ஆளும் வராமல் தகவலும் இல்லாமல் என்னவோ ஏதோ என்ற பதைப்பு. அங்கங்கே பார்த்தால் விபத்து, கார் திருட்டுக் கொலைகள் என பீதியூட்டும் அன்றாடங்கள். செய்தித்தாளில், இது போன்ற சம்பவங்களில் அடையாளம் தெரியாத பிணங்களைக் காணும் போதெல்



லாம், அந்தப் படங்களை பதற்றத்துடன் உற்றுப் பார்க்கும்படி ஆகிவிடுகிறது.

எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு அச்சகப் பணியில் மனசு ஒட்டாது அவருக்கு. எழுத்துகளை அச்சுக் கோப்பதில் நிறைய பிழை வந்துவிடும். ப்ரூஃப் பார்க்கிற முரளி, "என்னங்ணா, வீட்ல ஏதும் பிரச்னையா?" என்று கேட்கும்படியாக. அவரது வீட்டுப் பிரச்னை என்பது மகனைப் பற்றிய கவலைதான் என்பது அச்சகத்தில் எல்லோருமே அறிந்தது. வீட்டுக்கு வந்தால் ரேணுகாவும் "என்னங்க மாமா, அவர இன்னைக்கும் காணோம்?" என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பாள். அவள் கேட்கும்போது அவரும், அவர் கவலை கொள்ளும்போது அவளுமாக சமாதானம் சொல்லிக் கொள்வார்கள். இப்படி அடுத்தவரைத் தேற்றுதல் ஒரு வகையில் தன்னைத் தானே தேற்றிக் கொள்வதே.

ரேணுகாவும் பரமுவிடம் இந்த வேலையை விட்டுவிட்டு வேறேதாவது வேலை செய்யுமாறு சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவன் கேட்கணுமே. வெளியிடங்களுக்குப் போவது, ஊர் சுற்றுவது முதலியவற்றில் அவனுக்கு மிகுந்த ஆர்வம். அதற்கு இந்த டூரிஸ்ட் ட்ரைவர் வேலை ஏதுவானதாகையால் அவன் இதை விட மறுக்கிறான்.

எப்படியோ ஒரு இடத்தில் நிலைத்திருக்கிறானே. அதற்காக சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டும். முதலில் அவன் இப்படியில்லை. வெவ்வேறு இடமாக மாறிக் கொண்டிருந்தான். லாட்டரி ஏஜன்ஸீஸ், துணிக் கடை, பழைய இரும்பு வியாபாரம் என எங்கெல்லாமோ. அங்கே பிடிக்காமல் அல்லது பொறுப்பில் உள்ளவர்களுடன் தகராறு செய்து கொண்டு வேலையை விட்டு வந்து நிற்பான். அடுத்த இடம் தேடி அலைவான்.

ஷோராஜ்



அக்கறையில் வாழ்கிறவர்கள்

அந்த நிலையிலேயே கல்யாணமும் ஆகிவிட்டது. அதன் பிறகாவது ஒழுங்கா வான் என்று ராமநாதனுக்கு நம்பிக்கை. அவரது நண்பர் ஒருவரின் மூலமாக மிகவும் சிரமப்பட்டு விஜயலட்சுமி மில்லில் சேர்த்து விட்டார். ஒரு வருடம் கழிந்திருந் தால் நிரந்தரமாக்கியிருப்பார்கள். மாதம் மூவாயிரத்துக்குக் குறையாமல் சம்பளம் வந்திருக்கும். இவன் யூனியன் தகராறில் வெளியேறிவிட்டான். என்ன செய்ய!

அப்போது ரேணுகா சந்தியாவை உண் டாகியிருந்தாள். அவளும் அடுத்ததாக நிர்மலும் பிறந்து வளர்ந்துவிட்டனர். பரமு தனது போக்கிலிருந்து மாறவே இல்லை, இந்த ட்ரைவர் வேலையில் நிலைத்திருக் கிறான் என்பது தவிர.

மாதம் இரண்டாயிரம் சம்பளம் வாங்கு கிறான் இப்போது. அதுபோக டூரிஸ்ட் வேனோ டாக்ஸியோ ஓட்டிப் போகையில் பேட்டா நூறு ரூபாய். என்றாலும் வீட்டுக்கு வருவது ஆயிரத்துச் சொச்சமே. மீதத்தை அவன் செலவு செய்து விடுவான். நண் பர்கள் சகவாசம் அதிகம். நாலைந்து பேரோடுதான் சினிமா போவது, டிஃபன் சாப்பிடுவது. தீர்த்தம் போடுகிற பழக்கமும் உண்டு. ஆனால் அந்த சந்தர்ப்பங்களில் வீட்டுக்கு வர மாட்டான்.

"இப்படி யார் யாருக்கோ தெண்டத் துக்கு செலவு செஞ்சிட்டிருந்தின்னா குடும்பத்துக்கு என்னடா பண்றது?" என்று ராமநாதன் ஜாடையாகக் கேட்டுப் பார்த் தும் விட்டார்.

"சமாளிச்சுத்தான் ஆகணும்ப்பா. அவங் களும் செய்யறாங்க. பதிலுக்கு நாம ஒண் ணும் பண்ணாம முடியுமா?"

"நல்லதா இருந்தாப் பரவால்ல. இந்த வேண்டாத பழக்கமெல்லாம் எதுக்கு? வீணா காசயும் செலவு பண்ணி, ஒடம்புக் கும் கேடா..."

இப்படிச் சொன்னால் அவனுக்குப் பிடிக்காது. எழுந்து போய்விடுவான். அல்லது, "வீடு, வேலைன்னு செக்கு மாடு மாதிரி சுத்திட்டு இருக்கச் சொல்றீங்களா என்னை?" என்பான். அதனால் இப்போது அது பற்றிப் பேசுவதும் இல்லை.

ஆனால், எந்த நேரத்துக்கு வருவான், எப்போது எங்கே போவான் என்கிற நிர்ண யங்கள் இல்லாதது தொடர்ந்த பிரச்னை ஆகிவிட்டது. வீட்டைப் பற்றிய நினைப்பு கொஞ்சமும் கிடையாது அவனுக்கு. அவனைப் போலவே பொறுப்பற்று இருந்த பலரும் கல்யாணத்துக்குப் பிறகு மாறின தைப் பார்த்த அனுபவம். அதே போல பரமுவும் மாறிவிடுவான் என்று எதிர்பார்த் தது பொய்த்து விட்டது.

வாய்த்தவளாவது கெடுபிடி காட்டு கிறவளாக இருந்தால் பரவாயில்லை. ஓரளவுக்காவது அவன் கட்டுக்குள் வந்திருப் பான். ரேணுகாவோ அனுசரணையான பெண். பரமுவின் உரத்த குரலிலேயே அடங்கியும் விடுகிறவள். அவனைக் காணோமென்றால் தவித்துப் போய் அவரிடம் புலம்ப மட்டுமே அவளுக்குத் தெரியும். இந்த ஒரு வாரமாக பரமுவின் முதலாளி வீட்டுக்கும் அவர்களது நிறுவனத் துக்குமாக தினமும் இரு தடவையாவது ஃபோன் செய்து கேட்டுக் கொண்டிருந் தாள். ராத்திரியில் பதினொன்றரை வரை தூங்காமல் அவன் வந்துவிடுவான் என்று காத்திருப்பதும் தவறாது.

குழந்தைகளுக்கு அவன் வீட்டில் இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான். அத னால் அவர்கள் அவனைப் பற்றி அதிகம் நினைக்க மாட்டார்கள். அப்படியே அவனும். இதெல்லாம் எப்போதுதான் சரியாவது? தன் உடம்பில் இன்னும் வலுவும் உயிரும் இருக்கிற வரை சம் பாதித்து, குடும்பச் செலவை வேண்டு மானால் சமாளிக்கலாம். ஆனால் அவனது குடும்பப் பொறுப்பை அவன்தானே ஏற்க வேண்டும்? இப்படியே விட்டால் சரிப் பட்டு வராது. அவனை சற்று அதட்டி வைக்க வேண்டும்.

ராமநாதன் ஷேவிங்கை முடிக்கும் முன்பே நிர்மல் குளிக்கப் போயிருந்தான். அவன் குளித்து வந்த பிறகு அவரும் சென்று குளித்து வந்தார். உடை மாற்றி, தலை சீவிக் கொண்டிருக்கையில் அந்தப் பெரிய நிலைக் கண்ணாடியில் பரமுவின் பிம்பம். உள்ளே யிருந்து இடதாகத் தெரிகிற வலது கையில், கொட்டாவிக்கு விரல் சொக்கிக் கொண்டே வந்தது அது.

"ரெண்டு மூணு நாள்ல வந்தர்றேம்னுட்டு ஏன்டா இவ்வளவு நாள் வேட்?" என்றார் ராமநாதன், திரும்பி பரமுவைப் பார்த்தபடி.

"பெங்களூர்லயே மூணு நாள் ஆயிடுச் சுப்பா. அப்புறம் பாத்தா... செகந்தராபாத், திருப்பதி, மெட்ராஸ்னு ஒரே அலைச்சல்" என்று விட்டு உள்ளே சென்று படுக்கை அறைக்குள் மறைந்தான். கேட்பதற்கு நின்று முழுக்க பதில் சொல்கிறானா? தலை சீவி

கொண்டு அவரும் படுக்கை அறைக்குச் சென்றார்.

ஸ்கூல் பேக்குடன் சந்தியா பரமுவிடம் பணம் வாங்க நின்று கொண்டிருந்தாள். நிர்மல் சாதத்தைத் தட்டில் எடுத்து இங்கே வந்துவிட்டிருந்தான். "டாடீ... எனக்கும் பணம் வேணும்."

பரமு தேடி எடுத்து இரண்டு ரூபாய் நோட்டை நிர்மலின் சட்டைப் பையில் வைத்து விட்டான். சந்தியா அவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பியதும், சுருட்டாதிருந்த பாயில் மீண்டும் படுத்துக் கொண்டான் பரமு. அவனுக்கு அருகே நின்றவர், "வரத்தான் முடியல. ஒரு ஃபோனாவது பண்ணியிருக்கலாமேடா" என்றார்.

"பண்ணல."

"அதுதான் தெரியுதே. ஏன் பண்ண லேன்னுதான் கேக்கறேன்."

"டயமில்லீங்கப்பா" என்றான் சலிப்புடன், கண் திறந்து பார்த்தவாறு.

"ஒரு வாரத்துல அஞ்சு நிமிஷமாவது கெடைக்காமயா போயிருச்சு? இங்க நாங்க என்னாச்சோ ஏதாச்சோன்னு இருக்கறோம். உனக்கான அந்த நெனப்பே இல்ல."

"அதுக்கு என்னங்ப்பா பண்றது? தேவையில்லாம கவலைப்பட்டு இருக்காதிங்கன்னு சொன்னாக் கேக்கணும்."

"கவலைப்படாம எப்படி இருக்கறதுங்கறேன்?" என்று துவங்கினவரை இடைமறித்தான் பரமு. "எம்ப்பா... இப்ப என்ன ஆயிடுச்சுன்னு பேசறீங்க. நான் சொல்லாம எங்கயாவது ஓடியா போயிட்டேன்? சொல்லிட்டுத்தான போனேன். போனவன் அப்படியே ஒரேயடியா போயிடவா போறேன். சும்மா தொணதொணன்னுட்டு..."

பேச்சற்றவராக நின்று கொண்டிருந்தார் அவர்.

பரமு விடவில்லை. "மனுசன் ஏழெட்டு நாளா கஷ்டப்பட்டு ஓஞ்சுபோயி வந்திருக்கிறேன். ஏதோ வீட்டுக்கு வந்து சேந்தமா நிம்மதியா இருந்தமான்னு இல்லாமல்... ச்சே! ஒரே கழுத்தறுப்பாப் போச்சுங்கப்பா உங்களால."

ராமநாதன் தலையைக் குனிந்து மௌனமாக வெளியேறினார். தாழ்வாரத்தில் வந்து நின்றபோது உடம்பும் தளர்ந்திருந்தது. அவரது கட்டுப்பாட்டுக்குள் இல்லாது போனாலும் இதுவரை இப்படி எடுத்தெறிந்து பேசியிராதவன் பரமு. இன்றைக்கு அவரது பேச்சு-அதுவும் அவனது குடும்ப நலன் கருதிச் செய்வது- அவனுக்குக் கழுத்தறுப்பாகிவிட்டது.

தன்னைச் சூழ்ந்திருக்கிற எல்லாமும் வெறிச்சிட்டு, தானும் அந்த வெறுமையில் கரைந்துவிடுவதான உணர்வு. நினைக்க நினைக்க வெறுப்பாகவும் ஆத்திரமாகவும் அது மாறியது.

"மாமா... சாப்பாடு போட்டு வெச்சிருக்கறேன். வந்து சாப்பிடுங்க." சமையலறையிலிருந்து ரேணுகாவின் குரல் வந்தது.

"வேண்டாம்மா."

"ஏன் மாமா?"

அமைச்சர்கள் இல்லாத சட்டசபை!



கேரள சட்ட சபையில் ஒரு விசித்திரம் நடந்தது. அண்மையில் மதிய இடைவேளை முடிந்ததும் 2.30 மணிக்குத் தமது இருக்கையில் வந்து அமர்ந்தார் சபாநாயகர் விஜயகுமார். அமைச்சர்களின் இருக்கைகளில் ஒருவர் கூட இல்லை! அமைச்சர்கள் யாரும் சபையில் இல்லாதது குறித்துக் கோஷம் போட ஆரம்பித்து விட்டனர்! 2.35 வரை காத்திருந்தும் அமைச்சர்கள் யாரும் வராததால், சபையை ஒத்தி வைத்து விட்டுச் சென்று விட்டார் சபாநாயகர்! 2.44க்கு டி.கே. ராமகிருஷ்ணன் என்கிற ஒரேயொரு அமைச்சர் மட்டுமே வர, அவரை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைதட்டி வரவேற்றனர். விஷயம் சபாநாயகருக்குச் சொல்லப்பட்டு, பிறகுதான் சபை நடந்தது.

திருவனந்தபுரத்திலிருந்து: எஸ்.எஸ். மணி

"வேண்டாம்னா வேண்டாம். விட்டு றேன்" என்றவர் உள்ளே சென்று அவரது பர்ஸை எடுத்துக் கொண்டார். பரமு கண் மூடிக் கிடந்தான். சோற்றுப் பருக்கைகள் சுற்றிலும் சிதறியிருக்க, நிர்மல் சாப்பிட்ட எச்சில் தட்டு அங்கேயே இருந்தது. அவனைக் காணோம். பள்ளிக் கூடத்துக்குக் கிளம்பியிருப்பான்.

ரேணுகா அங்கே வந்து நின்றாள். அவர், "போயிட்டு வர்றேன்" என்று சொல்லும் போதும் அவளைப் பார்க்கவில்லை. முன் கதவோரம் விட்டிருந்த செருப்பை அணிந்து கொண்டு படியிறங்கினார்.

தெருவில் நடந்து செல்லும்போது ஆற் றாமை மேலிட்டிருந்தது அவரை. இனிமேல் பரமுவை எதுவும் சொல்லக் கூடாது என்று தோன்றியது. அவனாயிற்று, அவனது பெண்டாட்டியும் குழந்தைகளுமாயிற்று. எப்படியோ போகட்டும்.

ஆனால் ரேணுகாவிடம் கடிந்து பேசி யிருக்க வேண்டாமோ. அவள் பாவம், என்ன செய்தாள்? சாப்பிட அழைத்தபோது மறுத்தது தனது கோபத்தைக் காட்டிக் கொள்ளவே. அதுவும் பரமுவிடம் தானே யன்றி ரேணுகாவிடம் அல்ல. அவளிடம் அவ்வாறு நடந்து கொண்டது தவறுதான். அதற்காக இப்போது வருத்தம் கொண்டார்.

சாப்பிடாமல் வந்துவிட்டதில் பசித்தது. ஒரு நேரப் பட்டினியில் ஒன்றும் குடி முழுகி விடாது என்று தன்னுள் சொல்லிக் கொண் டார். பத்து, பதினோரு மணி வாக்கில்தான் அதிகமாகப் பசிக்கும். அது டீ டைம் ஆதலால், கூடவே பேக்கரியில் எதையாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொள்ள வேண்டியது தான். மதியத்துக்கு ஹோட்டலுக்குப் போய் விடலாம். டிஃபன் கேரியரையும்தான் எடுத்து வரவில்லையே.

பஸ் ஸ்டாப்பில் சில ஆண்களும் இரண்டு பெண்களும் நின்றிருந்தனர். சற்று தள்ளி கல்லூரி மாணவர்கள் சிலர். தனியே நின்று கொண்டு பஸ் வருகிறதா என தெரு வைப் பார்வையிடலானார். நின்று கடந்த இரண்டு பஸ்களும் அவருக்கானவை அல்ல. ஒன்றில் மாணவர்களும் அடுத்ததில் இரண்டு ஆண்களும் ஏறிவிட்டிருந்தனர். அந்தப் பெண்களுக்குள் ஏதோ ரகசியமான பேச்சு. மணி பார்த்ததில் இன்னும் ஐந்து நிமிஷத்தில் தனக்கு ஒரு பஸ் இருப்பது தெரிந்தது.

சற்றுப் புறத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் அவர் வந்த வழியே ரேணுகா வந்து கொண்டிருந்தாள். நடை யோட்டமாக, கையில் அவருடைய டிஃபன் கேரியர் பையுடன்.

மூச்சிரைக்க வந்து நின்றவள், "அவர் மேல கோபம்னா சாப்பிடாம வரணுமா மாமா? டிஃபன் கேரியரையும் எடுக்காம வந்துட்டீங்க. சாப்பிட்டுத்தான போவீங் கன்னு நானும் எப்பவும் போல இருந்துட் டேன். இப்ப அவசர அவசரமா சாப்பாட்



டப் போட்டு எடுத்துட்டு வர்றேன்" என் றாள்.

ராமநாதன் தயக்கத்துடன் ரேணுகாவிட மிருந்து பையை வாங்கிக் கொண்டார். "அதுக்காக இப்படி மூச்சு வாங்கறளவுக்கு நடந்து வரணுமா? மெதுவா வந்திருக்கக் கூடாது?"

"பரவாயில்லீங்க மாமா" என்றாள் ரேணுகா, முந்தானையில் முகத்தை ஒற்றிக் கொண்டே. ●

அட, இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?

பாதிப்பு இல்லாமல் ஒரு பரிசோதனை!

எக்ஸ்-ரே கதிரியக்கத்தின் தீமையும் கூடாது! அதே சமயம் உடலின் எந்தப் பகுதியையும் அறுக்கவும் கூடாது. இப்படிப்பட்ட நிபந்தனைகளுடன், வயிற்றுப் பகுதியில் கட்டி அல்லது வேறு ஏதாவது குறைபாடுகள் உள்ளனவா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உதவுவது என்டோஸ்கோபி பரிசோதனை.

உடலின் உள்ளே உள்ள பாகங்களை தீர்க்கமாகப் பார்ப்பதற்கு மட்டுமல்ல, சில மைனர் ஆபரேஷன்களைச் செய்யவும் என்டோஸ்கோப் கருவி உதவும்.

"ஒரு பிரச்னையும் இல்லை. அஞ்சு நிமிஷத்திலே முழு சோதனையும் முடிஞ்சுடும்!" என்று புன்னகையோடு டாக்டர் கூறலாம். என்றாலும் சோதனையின்போது நோயாளிக்கு அவஸ்தை உணர்வு தோன்றுவது மிக இயல்புதான்.

முதலில் டாக்டர் ஒரு மருந்தைக் கொடுப்பார். தொண்டைப் பகுதி வரை அதை கொப்பளித்து விட்டு வெளியில் துப்பச் சொல்வார். வாய் மற்றும் தொண்டைப் பகுதிகள் மரத்துப் போவதற்கான மருந்து இது. உடனே பதற வேண்டாம். இது ஒன்றும் ஏதோ தண்ணீர் வரும் ட்யூபைப் போன்றதல்ல. மிக மெல்லிய - ஃபைபரினால் உருவாக்கப்பட்ட நீண்ட குழாய் இது.

இதை உள்ளே செலுத்தும்போதே அந்தந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளை டாக்டர் கண்டுபிடித்து விடுவார். இரண்டு விஷயங்கள் இதற்கு உதவுகின்றன. ஒன்று, இந்தக் குழாயினுள்ளே பொருத்தப்பட்டுள்ள நுண்ணிய பல்பு. உடலுக்குள் வெளிச்சமின்றி இருக்கும் பகுதிகள் இந்த பல்




பின் மூலம் பளிச்சிடுகின்றன. இதன் உதவியுடனும் கருவியில் பொருத்தப்பட்டுள்ள மைக்ரோஸ்கோப்பின் உதவியுடனும் டாக்டர் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

என்டோஸ்கோப்பால் இன்னொரு அற்புதமான பலனும் உண்டு. பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கருதப்படும் இடத்திலிருந்து ஒரு பகுதியை என்டோஸ்கோப்பின் உதவியுடனேயே உறிஞ்சி எடுத்து விட முடியும். அப்படி எடுக்கப்பட்ட சாம்பிளை பரிசோதனைக் கூடத்திற்கு அனுப்பி சந்தேகத்தை உறுதி செய்து

கொள்ளலாம்.

ஆரம்ப கால என்டோஸ்கோப் மாடல்களில்,

உள்ளே செலுத்தப்படும் குழாய் கொஞ்சம் உறுதியானதாக இருந்ததால் அதை நேர்பாதையில்தான் செலுத்த முடிந்தது. (இப்போதுகூட முழங்



கால் போன்ற எலும்பு இணைப்புப் பகுதிகளைப் பரிசோதிக்க டாக்டர் இந்த மாடல் கருவியைத்தான் பயன்படுத்துகிறார்) நவீன என்டோஸ்கோப் கருவிகள் நன்கு வளையக் கூடியவை. அதிக பலன்கள் உண்டு இவற்றால். மூக்கு, நுரையீரல், சிறுகுடலின் மேல் பாதி, சிறுநீரகப்பை ஆகியவற்றைக்கூட என்டோஸ்கோப்பின் உதவியுடன் பரிசோதிக்கலாம்.

என்னதான் தொண்டைப் பகுதியில் மரத்துப் போவதற்கான மருந்தைச் சோதனையின்போது பயன்படுத்தியிருந்தாலும் ஒருவித அவஸ்தை உணர்வு ஏற்படத்தான் செய்யும். சிலருக்கு வாந்தியெடுக்கும் உணர்வும் ஏற்படலாம். இந்தக் காரணத்தினாலும், உள்பாகங்களைத் தடையில்லாமல் பரிசோதிக்கவும்தான், எதுவும் சாப்பிடாமல் வெறும் வயிற்றோடு இந்தப் பரிசோதனைக்கு வர வேண்டும் என்று டாக்டர்கள் வற்புறுத்துகிறார்கள்.

வயிறு, நுரையீரல் போன்ற பகுதிகளில் ஏதாவது சிறிய 'வெளி வஸ்துக்கள்' தங்கி விட்டிருந்தால் அவற்றை வெளியேற்றவும் என்டோஸ்கோப்பினால் முடியும்!

— ஜி.எஸ்.எஸ்

துள்ளித் திரிந்த காலம்



சூடையோடு போனால் அகௌரவம் என்று காய்கறி வாங்க கூட்கேஸை எடுத்துச் செல்லும் ஒருவன். தங்கையுடன் துணைக்குச் செல்வது அசிங்கம் என்று நினைக்கும் ஒருவன். பந்தா பண்ணுவதற்காக வீட்டிலேயே திருடும் ஒருவன். காலேஜ் படியையே மிதிக்கமாட்டேன் என்று சபதமிட்ட ஒருவன்- இப்படி நான்கு இளைஞர்கள் நல்லது, கெட்டது தெரியாமல் துள்ளித் திரிவதும், அந்த ஊருக்கு வந்து சேரும் குஷ்பு ஆன்ட்டி இவர்களைத் திருத்துவதும் தான் மையக்கதை.

இந்த நால்வரும் அடிக்கும் லூட்டிகள் கலகலப்பாக நகர்த்தப் பட்டிருக்கின்றன என்றாலும், குஷ்புவின் ப்ளாஷ் பேக்தான் மனத்தில் அழுத்தமாகத் தங்குகிறது. அப்பா ரகுவரனும், மகன் கரணும் மோதும் காட்சிகள் க்ரிஸ்ப்- முக்கியமாக காதலியோடு, வேலை வெட்டி இல்லாத கரண் வீட்டுக்கு வர, அந்தப் பெண்ணிடம் பொருமும் காட்சியில் ரகுவரன் அசத்தல்.

நாலு நண்பர்களில் (ஆமாம் அதென்ன கணக்கு நண்பர்கள் என்றால் நாலு பேரென்று) அருண்குமாரின் பெயர் டைட்டிலில் முதலில் இடம் பெறுகிறது என்றாலும் ஏதோ ஜுரத்தில் விழுந்தவர் போன்ற தாடியுடன் கூடிய தோற்றத் துடனும் அந்த தோற்றத்தையே தோற்கடிக்கும் சோகையான நடிப்புடனும் வருகிறார் அவர். நகைச்சுவையில், தாமு ராஜபாட்டையில் நடக்கத் தொடங்கிவிட்டார். பைத்தியமாக வரும் ரோஷினி இயல்பாக நடித்திருக்கிறார்!

'பெருமைக்குரிய அறிமுகம்' என்கிறது டைட்டில் கார்டு. முதல் படம் என்ற கோணத்தில் இசையமைப்பாளர் ஜெயந்த்துக்கு டபுள் ஓகே. 'மண்ணில்', 'ஆனந்தம்' இரண்டு பாடல்களும் இனிமை.

எப்படியெல்லாம் நடித்து வந்த குஷ்பு இப்படியெல்லாம் ஷேப்பாகி வருகிறார்! கனவுக் கன்னியாகவே 'தோன்றி' வந்தவருக்கு, குணச்சித்திர அக்கா ஆன்ட்டி டைப் கதாநாயகியாக இயல்பாக மாறுவது... என்ன சொல்ல! திரையுலகின் பெரும் விந்தைகளில் ஒன்று.

கடைசிக் காட்சியில் இளைஞர்களின் மன மாற்றத்தைக் குட்டிச் சுவரை உடைப்பதன் மூலம் காட்டியிருக்கிறார் இயக்குனர் பால சேகரன். 'மெஸேஜ் கொடுத்தா ரசிகர்களுக்குப் பிடிக்காது' என்ற சொத்தையான குட்டிச்சுவர் வாதங்களும் இடிபட்டு வருவது தமிழ்த் திரையுலகின் ஆரோக்கியமான போக்கு. ●

- ஜீ.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)



KVB-யின் பஞ்சரத்னா.

சேமிப்புக் கணக்கின் வசதி வைப்புக் கணக்கின் வட்டி

"பஞ்சரத்னா" சேமிப்புத் திட்டத்தின் ஐந்து சிறப்பு அம்சங்கள். ● சேமிப்புத் தொகை ரூ.1000/-யூனிட்டுகளாக வைக்கப்படும். ● முதிர்வு காலத்திற்கு முன்னரே சேமிப்புத் தொகையிலிருந்து தேவைப்படும் தொகையினை ரூ.1000/- யூனிட்டுகளாக திரும்பப் பெறலாம். ● முதிர்வு காலத்திற்கு முன்பே திரும்பப்பெறும் தொகைகளுக்கும் வங்கி விதி முறைப்படி வட்டியினைப் பெறலாம். ● முதிர்வு காலத்தில் மீதமுள்ள தொகையினை உரிய வட்டியுடன் திரும்பப் பெறலாம். ● வங்கியில் பெறப்படும் கடன் வசதிக்கு ஈடாக இந்த சேமிப்பு ரசீதினைக் கொடுக்கலாம்.

KVB

Since 1916

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.

கரூர் - 639 002

நாளும் நம்பிக்கை வளர்க்கும் வங்கி

இத்திட்டம் குறிப்பிட்ட கிளைகளில் மட்டுமே செயல்படுகிறது. மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளை அலுவலர்களை அணுகவும்.

A.D. நவநீதன்
சேர்மன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS (S) 161 * Registered as a Newspaper in Srilanka

